
# தமிழரசு

16-8-1980 50 காசு





கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்

தோற்றம் : 29-11-1908 மறைவு : 30-8-1957

# கலைவாணர் ஓர் சகாப்தம்

—பேரறிஞர் அண்ணா

தமிழரசு மலர்: 11 இதழ்: 4 16-8-1980

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் தனியொரு மனிதரல்ல. அவர் ஓர் சகாப்தம். அவரோடு அந்த சகாப்தமும் முடிந்து விட்டது. அப்படிப்பட்ட ஓர் சகாப்தம் இனித் தோன்றுவது அரிது.

எந்த ஒரு நடிகனும் மக்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைக்க முடியும். நல்லதோர் புகழையும் பெற முடியும். ஆனால் நம் கலைவாணருக்குக் கிடைத்த புகழுக்கும் மற்றவர்களுக்குக் கிடைக்கும் புகழுக்கும் வேறுபாடு உண்டு.

கலைவாணர் மக்களின் உள்ளத்தைத் தொட்டுச் சிரிக்கவைத்தவர். உலகிலேயே இவர் ஒருவர்தான் மக்களிடத்திலே தொடர்பு கொண்டு மக்களுக்காக உழைத்த கலைஞராவார். இவரைப் போல் நல்ல உள்ளம் படைத்தவர்கள் நாட்டிலே இருப்பது மிக அபூர்வம்.

கலைவாணர் வெறும் நடிகராக மட்டும் வாழவில்லை; உலகைத் திருத்திய உத்தமராக வாழ்ந்தார், தானும் நல்ல மனிதராக இருந்து மற்றவர்களையும் நல்லவர்களாக்க முயன்றார். நல்லதொரு கருத்துக் கருவூலமாகத் திகழ்ந்த அவரை, இன்று இழந்து தவிக்கிறது தமிழகம்.





கலைவாணர் கலைத்துறையில் மட்டுமே சிறந்தவர் என்பதில்லை; அவர் எந்தத் துறையில் இருந்தாலும் இத்தகைய புகழைப் பெற்றிருப்பார். பள்ளிக்கூடத்தில் போதகராயிருந்தாலும் ஆராய்ச்சித்துறையிலிருந்தாலும், பல்கலைக் கழகப் பேராசிரியராயிருந்தாலும் மற்றும் எந்தத் துறையிலிருந்தாலும் அவர் இத்தகைய ஏற்றம் பெறக்கூடியவர். இதற்குக் காரணம், அவரது நல்ல உள்ளமும் பண்பும் ஆகும்.

என்.எஸ். கிருஷ்ணன் தனி மனிதரல்ல; தமிழ்நாட்டின் முத்து, மலடி வயிற்றிலே பிறந்த மகன், புதையல் எடுத்த தனம், தென்னகத்துக்குக் கிடைத்த தேன் விருந்து, கதியற்றுக் கிடந்த தமிழகத்தைச் சீர்திருத்துவதற்காகத் தோன்றிய ஒளி!

கைபட்டால் மரமும் துளிர்க்கும் என்பது போல், கலைவாணரால் ஆதரிக்கப்பட்டவர்கள் அனைவரும் இன்று நல்ல நிலைமையிலே இருக்கிறார்கள்.

'ஈதல் இசைபட வாழ்தல் அது வல்லது ஊதியமில்லை உயிர்க்கு' என்ற வள்ளுவர் குறளுக்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டி, தன்னால் உதவி பெற்ற மற்றவர்களையும் அவ்வாறு வாழச் செய்திருக்கிறார் அவர்.

(6.9.57ல் சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில்,...)

# நாட்டை ஒன்றுபடுத்தி வைப்பது எது?

"மக்களின் நாட்டுப் பற்றும், அதற்காக உழைத்து தியாகம் செய்யத் தயாராயிருப்பதும் தான் அது. உண்மையில் இது, முற்றிலும் பிறருக்காக உழைப்பதல்ல; ஏனெனில் நாட்டின் எதிர்காலத்துடன் நமது நலனும் இரண்டறக் கலந்து பிணைந்திருப்பது ஒவ்வொருவருக்கும் தெரியும்".
—இந்திரா காந்தி




**வாருங்கள், அனைவரும் சேர்ந்து உழைப்போம்**

davp 80/160



மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. எஸ். ராமச்சந்திரன்

# தமிழ் நாட்டில் மின் வளர்ச்சி

வளரும் தமிழகம்

'சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்' என்பது பழமொழி. அதைப்போல, மின் உற்பத்தி பெருகினால்தான் மின்சாரம் நன்கு தடையின்றுக் கிடைக்கும்.

மின் உற்பத்தி பெருக இரு வழிகள் உள்ளன. ஒன்று, இருக்கின்ற மின் உற்பத்தி நிலையங்கள் செம்மையாக இயங்கவேண்டும்; மற்றொன்று, போதுமான அளவு புதிய திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும்.

தமிழகத்தில் 18 நீர் மின் உற்பத்தி நிலையங்களும், 4 அனல் மின் உற்பத்தி நிலையங்களும் இயங்கி வருகின்றன. மொத்த உற்பத்தித் திறன் 2,719 மெகாவாட்டாகும். இதில் நீர் மின் உற்பத்தி பாதி; அனல் மின் உற்பத்தி மீதி. இந்தியாவில் உற்பத்தித் திறனில் தமிழகம் மூன்றாவது இடத்தை வகிக்கிறது.

நீர் மின் உற்பத்தி நிலையங்களைப் பொருத்தவரை, அவற்றுன் திறன் பருவக்காற்று மழையைப் பொறுத்துள்ளது. கடந்த மூன்றாண்டுகளாகப் பருவமழை தவறவில்லை; போதுமான உற்பத்தி இருந்தது. இவ்வாண்டும் பருவமழை நன்றாகவே ஆரம்பித்துள்ளது; தொடர்ந்து நன்றாக இருக்கும் என்றே நம்புகிறோம். ஆகவே, நீர் மின் உற்பத்தி நிலையங்கள்தமது பங்கைச் செவ்வனே நிறைவேற்றும்.

அனல் மின் உற்பத்தியைப் பொருத்தவரையில் நெய்வேலி அனல் மின் திட்டம், எண்ணூர் அனல் மின் திட்டம், தூத்துக்குடி அனல் மின் திட்டம், சென்னை பேசின்பிரிட்ஜ் அனல் மின் திட்டம் ஆகிய நான்கும் செயல்படுவதைப் பொருத்துள்ளது. சென்ற ஆண்டு நெய்வேலி அனல்மின்நிலையம் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. கடந்த ஆண்டு போதுமான அளவு நிலக்கரியை நெய்வேலி நிறுவனத்தாரால் வெட்டி எடுக்க முடியவில்லை; வெள்ளம் வேறு வந்து புகுந்து விட்டது. ஆனால், இவ்வாண்டு கணிசமான அளவுக்கு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று அந்நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

எண்ணூர் அனல் மின் திட்டமும் குறைந்த அளவே உற்பத்தியைத் தந்து வருகிறது. ஏதேனும் ஒரு கோளாறு அவ்வப்பொழுது ஏற்படுகிறது. இவை பற்றி ஆராய்ந்து அறிய செக்கோசுலோவேகியா நாட்டு நிபுணர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். கடந்த வாரம் எண்ணூர் அனல்மின் திட்டத்திற்கு வருகை தந்துள்ளனர். அவர்கள் இதில் உள்ள குறைபாடுகளைக் கண்டு பிடித்து நிவர்த்தி செய்யத் துணை செய்வர் என நம்புகிறோம்.

தூத்துக்குடி அனல் மின் உற்பத்தித் திட்டம் முதல் இயந்திரம் 1979-ஆம் ஆண்டு ஜூலை மாதம் துவங்கப்பட்டது. இரண்டாவது இயந்திரம் இவ்வாண்டு அக்டோபர் மாதம் துவங்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய திட்டங்கள் எனும் பொழுது, நடைமுறைத் திட்டங்

களைத் தீவிரப்படுத்தவும், புதிய திட்டங்களைத் தீட்டவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன, மத்திய அரசு உருவாக்கி வரும் கல்பாக்கம் அணுமின் நிலையம் 1978-ஆம் ஆண்டே மின் உற்பத்தியைத் துவங்கி இருக்க வேண்டும். எனினும் இவ்வாண்டாவது மின் உற்பத்தியைத் துவங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பாரதப் பிரதமரை நேரில் பார்த்து வற்புறுத்தியுள்ளார். அதோடு மட்டுமல்லாமல், கல்பாக்கத்தில் 235 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட மேலும் 2 அணு மின் உலைகளை நிறுவவும், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கூடன்குளத்தில் இரண்டாவதாக ஒரு புதிய அணு மின் நிலையம் ஏற்படுத்தவும் தமிழக முதல்வர் பாரதப் பிரதமர் அவர்களை கேட்டுக் கொண்டுள்ளார். பாரதப் பிரதமர் அவர்களும் இதை கவனிப்பதாகக் கூறியுள்ளார்கள்.

மத்திய அரசு நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்கு அனுமதியளித்துள்ளது. இதன்மூலம் 630 மெகாவாட் கொண்ட மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்படும். ஆனால், இது போதாதென்று கூறி, அதை 1050 மெகாவாட் கொண்ட உற்பத்தி நிலையமாக மாற்றக் கோரியுள்ளோம். அதற்கான ஒப்புதல் விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக அரசு செயல்படுத்தி வரும் தூத்துக்குடி அனல் மின் திட்டம், சேர்வலாறு நீர் மின் திட்டம், காடம்பாறை நீர் ஏற்று மின்திட்டம், குந்தா கடைநிலை நீர் மின் உற்பத்தித் திட்டம் ஆகியவையும் விரைவுபடுத்தப்படும். இதன் மூலம் 680 மெகாவாட் கூடுதல் உற்பத்தித் திறன் கிடைக்கும்.

மத்திய அரசின் ஒப்புதலை எதிர்பார்த்து கீழ் மேட்டூர் நீர் மின் திட்டம், சண்முகா நதி நீர் மின் திட்டம், மேல் அமராவதி நீர் திட்டம் ஆகியவற்றின் ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவைகளின் மூலம் 180 மெகாவாட் கூடுதல் உற்பத்தித் திறன் கிடைக்கும்.

மேட்டூர் அனல் மின் திட்டமும் மத்திய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கியுள்ளது. விரைவில் ஒப்புதல் கிடைக்குமென நம்புகிறோம். இதன் மூலம் 630 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்தித் திறன் கிடைக்கும்.

இவையன்றி மேலும் வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கென 1645 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்தித் திறன் கொண்ட 12 திட்டங்கள் திட்டப்பட்டுள்ளன.

திட்டங்களைத் தீட்டினால் மட்டும் போதாது, போதிய அளவு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். அப்போதுதான் வேலைகள் சீக்கிரம் முடியும். இதையுணர்ந்த தமிழக அரசு மின் உற்பத்திக்குப் பெருந் தொகை ஒதுக்கியுள்ளது. சான்றாக, 1974-75ஆம் ஆண்டு மின் உற்பத்திக்குச் செலவழித்த தொகை 13.62 கோடி ரூபாய். ஆனால், இவ்வாண்டு செலவழிக்கத் திட்டமிட்டு இருப்பது 83.75 கோடி ரூபாய் ஆகும். சுமார் 7 மடங்கு மின் உற்பத்திக்குக் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப் பெறின் தமிழகத்தில் மின்வெட்டு இராது என்பது மட்டுமல்ல, பொருளாதார முன்னேற்றத்தின் வேகமும் அதிகரிக்கும்.

மின் விநியோகத்தில் இந்தியாவிலேயே தமிழகம் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. முதலாவது, அரியானா மாநிலம்; அது ஒரு சிறிய மாநிலம் என்பதை யாவரும் அறிவர். தமிழகத்தில் 64,044 பேரூர்களும் சிற்றூர்களும் இருக்கின்றன. அவற்றில் 63,452 இடங்களுக்கு மின் வசதி வழங்கப்பட்டுள்ளது. 25,653 தாழ்த்தப்பட்டோர் பகுதிகளுக்கும் மின் வசதி வழங்கப்பட்டுள்ளது. அதோடு மட்டுமின்றி ஏழைகளின் இல்லங்களிலும் மின் விளக்கு இருக்க வேண்டும் என்ற புரட்சித் தலைவரின் விருப்பத்திற்கிணங்க, குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டத்தை, இந்தியாவிலேயே முதன் முதலில் செயல்படுத்தியது தமிழக அரசு. இதன் மூலம் இன்று சுமார் இரண்டு இலட்சம் குடிசைகள் மின் விளக்கு வசதியைப் பெறுள்ளன. இந்த 5 ஆண்டுகளில் எல்லாக் குடிசைகளுக்கும் இவ்வசதியை ஏற்படுத்த நமது அரசு உறுதி பூண்டுள்ளது.

சுமார் 4300 பொறியாளர்களையும், 80,000 தொழிலாளர்களையும், 13,600 எழுத்தர்களையும் ஆக சுமார் ஒரு இலட்சம் பேரைக் கொண்டு இயங்கும் தமிழ்நாடு மின்வாரியம் தமிழகத்திலேயே மிகப் பெரிய பொதுத் துறை நிறுவனம், ரூபாய் 726 கோடி முதலில் நடைபெறும் நிறுவனம், தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கிவருவது வேதனைக்குரிய ஒன்றாகும். கடந்த ஆண்டு ஏற்பட்ட இழப்பு ரூபாய் 43 கோடி. இவ்வாண்டு எதிர்பார்க்கப்படும் இழப்பு ரூபாய் 65 கோடி. ஆனால், ஆண்டு தோறும் குறைந்த விவசாயக் கட்டணத்தின் மூலம் இழப்பே ரூபாய் 59 கோடி ஆகிறது. இக்குறைந்த கட்டணத்தையே செலுத்த மறுத்ததனால் பாக்கி ரூபாய் 25 கோடி. இந்நிலையில் மின்வாரியம் நிதி நெருக்கடிக்கு ஆளாகி வருகிறது என்பதையும், அதனால் புதிய திட்டங்களை நிறைவேற்ற இயலாதது மட்டுமல்ல, பழைய சாதனங்களைப் பராமரிக்க முடியாத நிலையும் ஏற்பட்டு வருகிறது. இது ஒரு பொது நிறுவனம். பொதுமக்கள் பணத்தில் நடைபெறும் நிறுவனம் என்பதையுணர்ந்து, கட்டண பாக்கி வைத்திருக்கும் விவசாயிகள் நிலுவைத் தொகையைச் செலுத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[சென்னை வானொலியில் 3-8-80ல் ஒலிபரப்பப்பட்டது]

## மீண்டும் தாமிரப் பட்டய விருது!

விடுதலைப் போராட்ட வீரர்களுக்குத் தாமிரப் பட்டய விருது வழங்கும் திட்டத்தை, இதுவரை தாமிரப் பட்டயம் பெறாதவர்களுக்காக மீண்டும் செயல்படுத்த மத்திய அரசின் உள்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது. இதுவரை இவ்விருது பெறாதிருந்த, இவ்விருது பெறத் தகுதியுடைய விடுதலைப் போராட்ட வீரர்கள் இது சம்பந்தமாக அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடம் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# அவர்களும் பாராட்டுகிறார்கள்!

குடிநீர்!

இயற்கை மனிதனுக்கு இலவசமாக அளித்திடும் அமிர்தம்!

மனிதன் உயிர் வாழ்வதற்குத் தேவைப்படும் அடிப்படையான ஆதார சக்தி!

இந்தக் குடிநீர் கிடைக்காமல், எண்ணற்ற கிராம மக்கள் இன்னலுற்ற காலம் ஒன்று இருந்தது. ஏழைத் தாய்மார்கள், ஒரு குடம் நீருக்காகக் கல்லும், முள்ளிலும் கால்கடுக்க வெகுதூரம் நடந்து சென்று வேதனைப்பட்ட அந்த நாட்கள் — இப்போது கடந்த காலமாக மாறிவிட்டன.

இதற்குக் காரணம் - தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் அரும்பெரும் பணிகளாகும்.

1971-ஆம் ஆண்டு ஏப்ரல் 14-ஆம் நாளில் இந்த வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. அன்றிலிருந்து ஆயிரக்கணக்கான கிராம மக்களின் அவதியைத் தீர்த்திட எண்ணற்ற குடிநீர் வடிகால் திட்டங்களை நிறைவேற்றி வந்துள்ளது.

இருப்பினும், 1977 ஜூன் திங்களில் புரட்சித் தலைவர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் அண்ணாவின் அரசு அமைக்கப்பட்ட பிறகு இந்த வாரியத்தின் பணிகளில் புதியதோர் ஊக்கமும் உற்சாகமும் - வேகமும் ஏற்பட்டன.

'ஒரு கிலோ மீட்டர் தூரத்துக்குள் குடிதண்ணீர் இல்லாத கிராமமே தமிழ்நாட்டில் இல்லாமல் செய்வோம்' என்று இந்த அரசு கடந்த ஆண்டு உறுதிமொழி கூறியது. இத்தகைய கிராமங்களின் எண்ணிக்கை சுமார் 5,500. அரசின் உறுதிமொழியைச் செயலாக்கும் பொறுப்பினைக் குடிநீர் வாரியத்தின் ஊழியர்கள் மேற்கொண்டனர். இரவு பகலாக உழைத்தனர். எத்தனையோ இடர்ப்பாடுகளுக்கிடையில் அரும்பாடு பட்டனர். அதன் பலனாக இன்னும் ஓரிரு திங்களில் இந்த இலட்சிய இலக்கினை நாம் அடைந்துவிடுவோம்.

எண்ணி மகிழத்தக்க ஏற்றமிகு சாதனை இது!

இந்த வாரியத்தின் செயல் திறன் - இங்கு மட்டுமல்ல.. இந்தியத் துணைக்கண்டத்தின் பிற மாநிலங்களிலும் சுடர்விட்டு ஒளிர்கிறது.

உத்திரப்பிரதேசம்—



**ஈ. ஆர். கிருஷ்ணன்**
தலைவர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

இந்தியாவில் மிகப் பெரிய மாநிலம். கோடை வறட்சியின் கொடுமைக்கு ஆண்டுதோறும் இலக்காகி அவதியுறும் மாநிலம். குறிப்பாக இந்த ஆண்டில் அங்கு ஏற்பட்ட வறட்சி பல பகுதிகளில் மக்களின் வாழ்க்கையை ஸ்தம்பிக்கச் செய்து விட்டது. தாகத்தைத் தீர்த்துக்கொள்ளக்கூட நீர் கிடைக்காமல் மக்கள் பட்ட தவிப்பு சோகக் கதைகளாகச் சொல்லப்படுகின்றன.

தனது மக்களின் இந்நிலையை எப்பாடு பட்டேனும் களைந்திட வேண்டும் என்று எண்ணியது அந்த மாநில அரசு. இந்தியாவின் பிற மாநிலங்களில் உள்ள வாரியங்களின் உதவியை நாடியது- நமது வாரியம் உட்பட.

பூமிக்கடியில் மிக ஆழமாகத் தோண்டி, நிலத்தடி நீரை மேலே கொண்டுவருவது ஒன்றுதான் இந்தப் பிரச்னையைத் தீர்க்கும் வழி. துளைப்பொறி யந்திரம் இதற்குத் தேவை. தமிழ்நாடு குடிநீர் வாரியம் தன்னிடமுள்ள துளைப்பொறிகளைக் கொண்டு தமிழ்நாட்டில் பரவலாகப் பல இடங்களில் ஆழ்துளைக் கிணறுகள் தோண்டும் பணிகளில் ஈடுபட்டிருந்தது.

இந்தச் சமயத்தில்தான் உத்தரப்பிரதேச அரசு உதவி கோரியது. உடனே தமிழ்நாடு குடிநீர் வாரியம் தனது துளைப்பொறிகளில் இரண்டையும், தொழில் வல்லுநர்களையும் கடந்த ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதியில் அனுப்பி வைத்தது.

இந்த ஆண்டு சனவரித் திங்கள் தொடக்கத்திலிருந்து நமது வாரிய ஊழியர்களின் பணி தொடங்கியது. பண்டா என்னும் மாநிலத்தில் மலைப் பாங்கான கிராமப் பகுதி. சுட்டெரிக்கும் வெய்யில். சூடு பறக்கும் அனல் காற்று. பணி நேரத்தில் நமது ஊழியர்களுக்கே கூட சில சமயங்களில் குடிக்கத் தண்ணீர் கிடைக்காதாம். அப்படியொரு சூழ்நிலை. அனைத்தையும் தாங்கிக் கொண்டு அயராது உழைத்தார்கள்.

சனவரித் திங்களிலிருந்து ஐந்து மாதக் காலத்திற்குள் பல்வேறு இடங்களில் 114 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தார்கள். இவற்றின் மொத்த ஆழம் 4300 மீட்டர்கள். இவற்றுள் 100 கிணறுகள் வெற்றிகரமாக அமைந்து போதுமான அளவு நீர் கிடைக்கத் தொடங்கிவிட்டது.

வறட்சியால் வாடிய மக்களின் வாழ்வில் மகிழ்ச்சி மலர்ந்தது. அதன் எதிரொலியாக உத்தரப் பிரதேச மாநில குடிநீர் வாரியத்தின் தலைவர் திரு வியாஷ் பீமன், ஐ.ஏ.எஸ். தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் நிர்வாகத் தலைவருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அவர் சூட்டும் புகழ் மாலை நம்மைப் பெருமிதம் கொள்ளச் செய்கிறது.

# குடிநீர் தேவையை நிறைவு செய்ய புதிய ஏற்பாடு

கிராமப் புறங்களில் குடிநீர்ப் பற்றாக்குறையை அறவே இல்லாமல் செய்ய வேண்டும் என்பது இந்த அரசின் இலட்சியம். இந்த இலட்சியத்தை ஈடேற்ற தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பல திட்டங்கள் தீட்டிச் செயற்படுத்தி வருகிறது.

குடிநீர்த் திட்டங்களைத் செயற்படுத்துவதில் இப்போது ஒரு புதிய ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்-அண்மையில் இவ்வாரியத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ள திரு ஈ.ஆர்.கிருஷ்ணன் அவர்கள்.

அலுவலக வேலையாகச் சுற்றுப் பயணம் செய்யும்போது அங்குள்ள குடிநீர்ப் பிரச்னைகளைப் பற்றி அப்பகுதிகளுக்குப் பொறுப்பான மேற்பார்வைப் பொறியாளர் -மற்றும் வாரியத்தின் பிற அலுவலர்களுடன் விவாதித்து - பொறியாளரின் நிதி அதிகார வரம்புக்கு உட்பட்ட பணிகளை உடனுக்குடன் செயற்படுத்த அனுமதி அளித்து வருகிறார்.

அதன்படி கீழ்க்காணும் திட்டங்கள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன:

* சேலம் மாவட்டம் ஓமலூர் நகரில் ரூ. 1.55 இலட்சம் செலவில் 49 குழாய்கள் அமைத்து பரவலாகக் குடிநீர் வழங்குதல். இதனால் நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 15 லிட்டர் தண்ணீர் உறுதிப்படுத்தப்படுகிறது. இதுதவிர பழுதடைந்த நிலையிலிருந்த ஏழு பம்புகள் உடனடியாகப் பழுது பார்க்கப்பட்டு வேலை செய்கின்றன.

* மேச்சேரி ஒன்றியத்தில் வெள்ளாறு, ஆட்டுக்காரனூர், காளிக்கவுண்டனூர், அரசபுத்தூர் ஆகிய கிராமங்களுக்குப் பயன்படும் வகையில் காளிக்கவுண்டனூரில் ரூ. 3.76 இலட்சம் செலவில் மேல் நிலைத் தொட்டி கட்டுதல்.

* பொட்டனேரி - ஆட்டுப்பண்ணை ஆகிய இரு கிராமங்களுக்குப் பயன்படும் வகையில் பொட்டனேரியில் ரூ. 2.58 இலட்சம் செலவில் மேல் நிலைத் தொட்டி கட்டுதல் மற்றும் 5 குழாய்கள் அமைத்தல்.

* சேலம் நகருக்குத் தற்போது நாளொன்றுக்கு 46 இலட்சம் காலன் தண்ணீர் கிடைக்கிறது. மேட்டூரில் அதிவேகமுள்ள 135 குதிரைச் சக்தியுள்ள யந்திரங்கள் பொருத்தப்படுகின்றன. இந்த வேலை விரைவில் முடிந்து ஆகஸ்ட் முதல் நாளிலிருந்து கூடுதலாக 15 இலட்சம் காலன் நீர் அதிகமாகக் கிடைக்கும்.

இந்தப் புதிய ஏற்பாட்டினை அந்தந்தப் பகுதிமக்கள் பெரிதும் வரவேற்றுப் பாராட்டியுள்ளார்கள்.

---

அந்தக் கடிதத்திலிருந்து சில பகுதிகள்:

"I thank you for the timely assistance rendered by your Board in pin-pointing suitable sites and construction of bores in the drought affected rocky areas of this State, for installation of hand pumps. I would like to place on record the deep appreciation of the U.P. Jal Nigam of the excellent work done by your officers and staff under adverse climatic and working conditions. Your rigs completed 114 bores in district Banda in a short span of only about five working months out of which 100 bores were successful. We look upon this as a remarkable achievement, considering the extra hard and abrasive nature of rock and difficult terrain which made the movement of men and machinery difficult. It is for the first time that hard rock boring with DTH rigs had been undertaken in Uttar Pradesh. The dedication & work-efficiency of your teams were an inspiration to us when a little later we organised our own drilling to know that the output is even more in Tamil Nadu and I may shortly send some of my senior officers to study your system in its totality. In the meantime it is my considered opinion that under very adverse conditions the output was indeed excellent.

இது தவிர மத்திய பிரதேசத்தில் பரவலாக நிலவும் கடுமையான வறட்சியிலிருந்து மக்களைக் காத்திட நமது வாரியம் முன்வந்துள்ளது.

சனவரித் திங்களில் எட்டு துளைப் பொறி—யந்திரங்கள் ஏப்ரல் திங்களில் ஆறு யந்திரங்கள் மற்றும் தொழில் வினைஞர்களை அனுப்பியுள்ளது. இது வரை அங்கு சுமார் 400 ஆழ் துளைக் கிணறுகள் (மொத்த ஆழம் சுமார் 17,400 மீட்டர்) அமைக்கப்பட்டு, குடிநீர் பஞ்சம் பெருமளவு தீர்ந்துள்ளது.

இவ்வாறு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமானது தமிழகத்து மக்களின் நன்மைக்காக மட்டுமல்ல -பிற மாநிலத்து மக்களின் நல்வாழ்வுக்காகவும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு அரும் பணியாற்றி வருகிறது.

# நித்தமும் நினைப்போம்!





அந்நியர் பிடியில் நமதரும் தாயகம்
அடிமையில் நெளிந்த துண்டாம்
கண்ணியம் மறைந்து கொடுமைகள் சேர்ந்து
கவலைகள் விளைந்த துண்டாம்
புண்ணியத் தலைவர் பலப்பலர் தோன்றி
போர்க்களம் புகுந்த தாலே
எண்ணிய விடுதலை இனிதாய் நண்ண
இன்புற லாயினர் மக்கள் !

கால்கரம் இழந்தோர் கண்களை இழந்தோர்
கல்வியும் செல்வமும் இழந்தோர்
மேல்மிகு ஆவியை மெத்தவும் இழந்தோர்
மேனியில் வடுப்பல அடைந்தோர்
சேல்விழி மனைவியை தந்தையை தாயை
தேசம் காத்திடப் பிரிந்தோர்
ஆல்விழு தென்னக் கிளைத்ததோர் காட்சி
அகிலமும் போற்றிய மாட்சி !

சின்னவர் பெரியர் நடுத்தர வயதோர்
செவ்விதழ்ப் பெண்டிரின் கூட்டம்
அன்னவ ரெல்லாம் ஆர்த்தெழுந் தனராம்
அந்நிய மன்னரை ஓட்ட !
மன்னவர் மணிமுடி மறைந்தே ஒழிய
மன்னவ ராயினர் மக்கள்
பன்னரும் வாழ்த்துப் பாடலை முழங்கப்
பாதைகள் வகுத்தனர் அன்பாய் !

நம்மவர் நம்மை ஆண்டிடும் நன்மை
நல்விதம் அமைந்திடச் செய்தார்
விம்மலும் விக்கலும் நமைவிடுத் தோட
வேதனைத் துயரம் கொய்தார்
பொம்மையாய் வாழ்ந்த மாந்தர்கள் எல்லாம்
புலிஎனும் விதத்தில் மாற
வெம்மையை மறந்து வினைபல ஆற்றி
வெற்றிகள் குவிந்திடச் செய்தார் !

கேட்டினை நீக்கி கெடுதலைப் போக்கி
கீழ்மைகள் உலவா வண்ணம்
கூட்டினில் வாழ்ந்த பறவையைத் தூக்கி
கூச்சம் அகற்றிய தேபோல்
நாட்டினை மீட்டுத் தந்தவர்க் கெல்லாம்
நயமாய்ச் சொல்வோம் நன்றி
ஏட்டினில் பேச்சினில் நித்தமும் எண்ணி
இசைப்போம் நெஞ்சம் ஒன்றி !

புலவர் தமிழ்ப்பித்தன்



# தமிழ்நாடு அரசு
# கிராமப்புற நகர்ப்புற ஏழை மக்களின் கடன் நிவாரணம்

கடன் சுமையால் வருந்தும் கிராம மக்களுக்கும், நகரவாசிகளுக்கும் நிவாரணம் அளிக்கும் அவசியத்தைக் கருதி தமிழ்நாடு அரசு ஏற்கனவே நடைமுறையில் இருந்த கடன் நிவாரணச் சட்டங்களைச் சீரமைத்தது. ஆயினும், நாட்டில் நிலவிய விலைவாசி உயர்வு, பொருளாதார நலிவு ஆகியவற்றின் காரணமாகப் பல ஏழைகள் இச்சட்டங்களால் போதிய பலனடையவில்லை எனத் தெரிய வந்தது. ஆகவே, மேலும் அதிகமான நன்மையளிக்கக்கூடிய ஒரு சட்டம் இயற்ற அரசு தீர்மானித்து, 31-12-'79 வரையில் பட்ட கடன்களிலிருந்து, ஏழைமக்கள்—நகரவாசிகளானாலும் கிராமவாசிகளானாலும்—பயன் பெறும் வகையில் தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

**இச்சட்டத்தின் மூலம் பயன்பெறுவோர் யார் ?**

31-12-1979ல் முடிவடைந்த ஆண்டில் மொத்த வருமானம் ரூ. 4,800/-க்கு மேற்படாமல் உள்ள அனைவரும் நகர்ப்புறத்தில் வசிப்பவர்களோ, கிராமப்புறத்தில் வசிப்பவர்களோ அல்லது எந்தத் தொழில் செய்பவர்களானாலும்—

மேற்கூறிய வருமான வரம்பிற்குள் நீங்கள் இருந்தால் 1-1-1980 நாளுக்கு முன்னர் நீங்கள் அடகுக் கடைக்காரர்கள், வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள், கடன் கொடுக்கும் தனி நபர்கள் ஆகியோரிடமிருந்து வாங்கியுள்ள கடன்கள் (அரசு, கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள், தேசீயமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் இச்சட்டத்தின் கீழ் விதிவிலக்கு அளிக்கப் பட்டுள்ள நிறுவனங்கள் முதலியவற்றிற்குச் செலுத்த வேண்டிய கடன்கள் தவிர்த்து) முழுவதும் (வட்டியுட்பட) செலுத்திவிட்டதாகக் கருதப்படும்.

இச்சட்டத்தின் விதிமுறைகளை தாசில்தார்கள் செயல்படுத்துகின்றனர்.

**இச்சட்டத்தின்படி நிவாரணம் பெறத் தகுதி பெற்றவராயின் நீங்கள் செய்ய வேண்டியது என்ன ?**

இச்சட்ட விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்ட படிவங்களைப் பூர்த்தி செய்து, நீங்கள் வசிக்கும் பகுதியின் அதிகார வரம்புள்ள தாசில்தார், துணைத்தாசில்தார், வட்டார வளர்ச்சி அலுவலர் (பி.டி.ஓ) கூட்டுறவு சார்பதிவாளர்—இவர்களில் ஒருவர் முன் பிரமாண வாக்குமூலம் செய்து வருமானச் சான்றிதழ் இணைத்து உங்கள் பகுதியைச் சேர்ந்த தாசில்தாருக்கு 18-10-1980க்குள் நிவாரணம் கோரி மனுச் செய்யவேண்டும்.

அருகிலுள்ள சம்பந்தப்பட்ட தாலுக்கா அலுவலகத்திற்குச் சென்று, நீங்கள் பூர்த்தி செய்து கொடுக்கவேண்டிய படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். உடனடியாக நிவாரணம் பெறுவதற்கான படிவங்களைக் காலதாமதமின்றி பூர்த்தி செய்து கொடுத்துவிடுங்கள்.

**உங்கள் கடன் சுமையிலிருந்து விடுபடுங்கள்.**

**மனு அளிக்கக் கடைசி நாள் 18-10-1980.**

வருவாய்த்துறை





# தமிழகத்தின் நாட்டுப்புறக் கலைகள் 5

**டாக்டர் ஏ. என். பெருமாள்**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

மலைவாழ் மக்களில் குறவர் இனம் மக்களைப் பெரிதும் கவர்ந்திருப்பதாகத் தோன்றுகிறது. அவர்களை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படுவது குறவன் குறத்தி ஆடல். இது திருச்சி, தஞ்சை, பெரியார், தருமபுரி மாவட்டங்களில் அதிகம் நடைபெறுவதாக அறிய முடிகிறது.

குறவர் பச்சைக் குத்தி குறி சொல்வதில் திறமையுடையவர்கள். மருத்துவத்திலும் சித்து வேலைகள் செய்வதிலும் வல்லவர். இவர்கள் நாட்டுப்புற மக்களைக் கவர்ந்ததில் வியப்பில்லை. குறவன் குறத்தி ஆடலில் இருவர் வேடமிட்டு அவர்களைப்போன்று மலைவளம், நாட்டுவளம், குறிப்பாட்டு ஆகியவற்றைப் பாடி வீடு வீடாக வந்து பரிசு பெறுவர். மக்களையும் மன்னனையும் வாழ்துவர். விழாக்காலங்களிலும் இத்தகைய ஆடலை மக்கள் நடத்துவது உண்டு.

### காமண்டி கொளுத்தல்

விழாக்கள் நடக்கும்போது காமனைச் சிவபெருமான் நெற்றிக் கண்ணால் சுட்டுஎரித்ததை ஆடிக் காட்டுவதே காமண்டி கொளுத்தல் என்னும் நாட்டுப்புற ஆடல். இது திருச்சி, தென் ஆர்க்காடு, இராமநாதபுரம், புதுக்கோட்டை, மதுரை ஆகிய மாவட்டங்களில் அதிகம் நடைபெறுகிறது. மன்மதனும் ரதியும் முக்கியப் பாத்திரங்களாக வருவர். ஆடல் நடக்கும்போது ஊரினர் எரிந்த கட்சி, எரியாத கட்சி என இரு கூறாகப் பிரிந்து வாதிடுவதைச் சில ஊர்களில் பார்க்கலாம். மூன்று அல்லது நான்கு நாட்கள் இந்த ஆடல் நடக்கும். இறுதியில் காமனின் உருவத்தைச் செய்து ஊர்ப் புறத்தில் சுட்டு விடுவார்கள். நடிப்போர் வீட்டுக்கு வீடு வந்து பணம் பெறுவர். காமன் பண்டிகையே காமண்டி ஆகி இருக்க வேண்டும். சில இடங்களில் மன்மதன் கூத்து என' இதனை நடத்துவர்.

### உடுக்கடிப்பாட்டு...

இராமநாதபுரம் மாவட்டத்தில் 'உடுக்கடிப் பாட்டு நல்ல முறையில் சில ஊர்களில் நடத்தப்படுகிறது. இதற்கு இரண்டு தவலை(தகரப் பானை) ஒரு சாப்ளாக் கட்டை, ஓர் உடுக்கு ஆகிய கருவிகள் வேண்டும். ஐந்து பேர் இந்தக் கலைக்குத் தேவைப் படுகின்றார்கள். பெரும்பாலும் மழை இல்லாத பஞ்சகாலங்களில் இந்த நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

காத்தவராயன் கதை பாடுவதே இந்தக் கலையில் பெருவழக்காக உள்ளது. பாடல்கள் எளிமையாகவும் இனிமையாகவும் இருக்கும். எடுத்துக் காட்டாக காத்தவராயன் ஆரியமாலையைக் கவர்ந்து செல்லும்போது பாடக்படும் பாடலைக் கேட்கலாம்.

**'செய்யான் சிறையிருக்கும்**
**செங்களனி ரோடதிலே**
**நடந்துவா மயிலே**
**ஒகோ! நங்கை இளமயிலே'**

மங்கையின் ஒயிலும் ராயனின் மையலும்' மயிலே' என்ற நாட்டுப்புற கவிஞரின் சொல்லில் இழையோடி விளையாடுவதைக் கண்டு இன்புறலாம்.

கருவிகளை அடித்து அடித்துத் தாளம் கூட்டி இவர்கள் பாடுவது மிகச் சுவையாக இருக்கும். தரையில் இருந்துதான் இவர்கள் பாடுவார்கள். நடிப்பது கிடையாது. ஆனால் உணர்ச்சிகளை முகக்குறியிலும் ஒலி வேகத்திலும் காட்டி விடுகின்றார்கள். வேடப் புனைவு இல்லை. ஆயினும் குரல் மாற்றி பாத்திர வேறுபாட்டைப் புலப் படுத்தி விடுகிறார்கள். உணர்ச்சி மிக்க பாடல்களும், உடுக்கின் தாள ஒலியும்தான் உடுக்கடிப் பாட்டுக்குச் சிறப்பைக் கொடுக்கின்றன.

மலையில் வாழும் பழங்குடி மக்களிடையே பலவகையான ஆடல்கள் நடைபெறுகின்றன. அவற்றைப் பற்றிய குறிப்புகளை எளிதாக அறிய முடியாமல் இருக்கிறது. ஒன்றிரண்டு ஆடல்களைப் பற்றி சில குறிப்புகள் தெரிய வந்துள்ளன. இங்கு க்ஷிண்டு நடனத்தைப் பற்றிய பார்க்கலாம்.

குறவர், கல்லவர், பாண்டிச்சேரியைச் சேர்ந்த குருவிக்காரர் ஆகியோர் இன்பக் களிப்பில் ஆடுவது க்ஷிண்டுநடனம். இதனை ஆறுபேர் வண்ண உடைகள் அணிந்து ஆடுவர். இவர்கள் பறவை, மிருகம் ஆகியவற்றை வேட்டையாடும் முறைகளை உள்ளடக்கி இந்த ஆட்டத்தை ஆடுகின்றனர். பின் பாட்டும் உண்டு. முதல் பாடகனைத் தொடர்ந்து மற்றவர் பாடுவர். பறவையைக் கண்ணி வைத்துப் பிடிப்பதைக் குறிப்பிடும் பாடல் சிறப்புடையது.

வாழ்க்கையுடன் தொடர்புடையது கலை என்பதற்கு க்ஷிண்டு நடனம் நல்ல சான்றாக உள்ளது. குளுவ நாடகப் பாடலுக்கும்

இதற்கும் தொடர்பு இருப்ப தாகத் தோன்றுகிறது.

### பாகவத நடனம்

தமிழ்நாட்டில் சில ஊர்களில் பாகவத நடனம் நடைபெறு கிறது. இதைப் பாகவதர், ஹரி பக்தர் ஆகியோர் ஆடுவர். கிருஷ்ணன் கோபிகையருடன் ஆடுவது விளக்கப்படும். இராதா கிருஷ்ணன் ஆடலும் நடக்கும். கோயில் அறையில் ஒரு விளக் கினை வைத்து அதைச் சுற்றி ஆடுவது வழக்கம். ஒரு கையை அல்லது இரு கைகளையும் தூக்கி வலமாகச் சுற்றி வந்து பாடுவர். இராமநவமி, கோகுலாஷ்டமி நாட்களில் இந்த ஆடல் நடை பெறும். ஆன்மா இறைவனுடன் ஒன்றுவது இந்த ஆடலின் நோக் கம். இதனை கிருஷ்ண சைத்தன் யர் ஓர் இயக்கமாக நடத்திய தாகத் தெரிகிறது. அவ்வாறா யின் இதனை நாட்டுப்புறக் கலைக்குள் அடக்கிக் காண்பது பொருத்தமாகத் தோன்ற வில்லை. இது பெரும்பாலும் நாட்டுப்புறத்தில்தான் நடக் கிறது.

### வில்லுப்பாட்டு

நாட்டுப்புற மக்களின் மிகச் சிறந்த கலைகளில் ஒன்று வில்லுப்பாட்டு, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் அது இன்றி ஊர்த் தெய்வங் களுக்கு விழா நடப்பது இல்லை என்றே கூறலாம். இராமநாத புரத்தில் சில சிற்றூர்களிலும் வில்லுப் பாட்டு சிறப்பாக நடை பெறுகிறது. ஊர்த் தெய்வங் களுக்குக் கொடை விழா நடக் கும் போது தெய்வங்களின் கதை களையும், தெய்வநிலைக்கு உயர்த்தப்பட்ட வீரர்களுடைய வரலாறுகளையும் வில்லுப்பாட் டின் மூலம் பாடலாக மக்களுக்கு எடுத்துக் கூறுவர்.

வில்லுப்பாட்டை ஒரு பழந் தமிழ் இசைக்கலை என்று கூற லாம். அது மிகவும் எளிமை யுடையது. அதே சமயம் இனி மையானது. யாரையும் தன்பால் இழுக்கும் தன்மையுடையது. இரவில் அலுப்பு சலிப்பின்றி வெகுநேரம் வரையில் வில்லுப் பாட்டைக் கேட்டு மக்கள் இன் புறுவர்.

போர் கருவியாகிய வில்லே இக்கலையின் தோற்றுவாயாக இருக்க வேண்டுமென்று அறிஞர் நம்புகின்றனர். போர் வில்லின் நாணைச் சுண்டி இழுத்து விடும் போது எழும் ஒலி முதலில் மனி தனைக் கவர்ந்திருக்கவேண்டும். போரில் வெற்றியடைந்ததும் வில்லைத் தட்டி இன்பக் களி யாட்டம் நடத்தி இருப்பர். பின் னர் அதில் ஒலியினிமை கூட்டும் சிறிய வெண்கல மணிகளைக் கட்டி கம்பு கொண்டு நாணில் அடித்து இன்னிசை பெருக்கி இருப்பர். காலஓட்டத்தில் பலவித இசைக் கருவிகளை இணைத்து பாடலுடன் பிணைத்து வில்லுப் பாட்டுக் கலையைச் சுவைபட உருவாக்கி இருப்பர்.

வில்லானது கூந்தல் பனை கம்பு அல்லது மூங்கில் கழியி னால் வில் செய்யப்பட்டு தோல் அல்லது நரம்பினால் முறுக்கப் பட்ட நாணைக் கட்டியிருப்பர். இரண்டு குட்டைக் கம்புகளை வீசுக்கோலாகப் பயன்படுத்தி நாணில் அடிப்பர். வீசுமணிகள் பொருந்தப்பட்டிருக்கும். நாணில் அடிக்கும் போது வில்லில் பூட்டி யிருக்கும் மணிகள் குலுங்கி ஒலி யெழுப்பும். வில்லிசைக்குத் துணையாக உடுக்கு, குடம், தாளம், கட்டை ஆகிய கருவிகள் பயன்படுத்தப்படும். குடத்தை ஒரு பத்தையினால் தட்டித் தாள ஒலி எழுப்புவர். பம்பையும் முன்பு பயன்படுத்தி யுள்ளனர். சில இடங்களில் இப் பொழுது ஆர்மோனியத்தையும் கூடவே இணைத்துள்ளனர். இந் தக் கருவிகளின் கூட்டொலி யோடு வில்லிசைப் புலவரின் பாட்டொலியும் இணைந்து கேட்போரைக் கிறுகிறுக்கச் செய் யும்.

வில்லின் வலது பக்கத்தின் இருக்கும் புலவர் கதைப் பாட லைத் தொடங்கிப் பாடுவர். மற் றவர்கள் அவரைப் பின்பற்றித் திருப்பிப் பாடுவார்கள். இடை யிடையே வசனம் சொல்லும் வழக்கம் உண்டு. பல சமயம் நகைச்சுவையான செய்திகளைக் கூறி மக்களைச் சிரிக்கச் செய் வதையும் காணலாம்.

முதன் முதலில் ஐயன் கதை பாடியே நிகழ்ச்சியைத் தொடங் குவர். தென்னாட்டில் அம்மன் கதை, சுடலைமாடன் கதை, இயக்கியம்மன் கதை, மாரியம் மன் கதை, தோட்டுக்காரியம் மன் கதை, சேத்திரபாலன் கதை, பிச்சைக்காலன் கதை முத லியவை வில்லில் பாடும் முக்கிய கதைப் பாடல்களாகும். தொடர்ந்து மூன்று நாள், ஐந்து நாள் வரை வில்லிசைப் பாடல் சில ஊர்களில் நடக்கும். முத்துப் பட்டன் கதை, மதுரைவீரன் கதை, சின்னத்தம்பி கதை, மந் திர மூர்த்தி கதை, கட்டப்பொம் மன் கதை போன்றவை. வில்லில் பாடப்படும் வீரவரலாற்றுக் கதைகளாகும். சில இடங்களில் இராமாயணம், பாரதம், சிலப் பதிகாரம் போன்றவைகளும் வில் லிசையாகப் பாடப்படும்.

வில்லிசையின் பெருமை உல குக்குப் பல காலம் தெரியாமல் இருந்தது. அதனைப் பரவலாக் கிய பெருமை கலைவாணரையே சேரும். அவர் காந்தி மகானின் சரித்திரத்தைப் பாடலாக எழுதி வில்லில் இசைத்துப் பாடி பலரை மகிழ்வித்தார். வில்லிசையின் இன்பத்தைத் தமிழ் நாடே அறிந்து பாராட்டியது. திருவி தாங்கூர் தமிழ்நாட்டுக் காங்கிர சின் போராட்ட வரலாற்றை மூனா சுப்பிரமணியம் வில்லுப் பாட்டாக எழுதிக் குமரி மாவட் டத்தில் ஒரு பெரும் புரட்சியே செய்தார் என்று கூறலாம். அறிவுக்கும் அரசியலுக்கும் வில்


## பகுதி நேர ஆசிரியர்களுக்கு!.....



பலவித நிர்வாகங்களின் கீழுள்ள மேல் நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பகுதி நேர ஆசிரியர்கள் அனைவருக்கும் ஆண்டொன் றுக்கு அதிக பட்சம் 13 நாட்கள் நற்செயல் விடுப்பளிக்கப்படும் என்றும், ஒரே நேரத்தில் அதிக பட்சம் 5 நாட்கள் நற்செயல் விடுப் பெடுத்துக்கொள்ளலாம் என்றும் 9.6.80 அன்று வெளியிட்ட தமிழ்நாடு அரசு ஆணை யொன்றில் தெரிவித்துள்ளது.

பலவித நிர்வாகங்களின் கீழுள்ள நடு நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பகுதி நேர கைத்தொழில் ஆசிரியர்கள் அனைவருக்கும் இச்சலுகை நீட்டிக்கப்பட்டுள்ளது.

லுப்பாட்டு உதவும் என்பதனை இவற்றால் அறியலாம்.

குறுகிய வட்டத்தில் குன்றியிருந்த வில்லுப்பாட்டு இன்று பெருகி வளர்ந்த நாடு போற்றும் நல்ல கலையாக மலர்ந்துள்ளது. முன்பு ஆண்களே பாடிவந்தனர். இன்று பெண்கள் முன் வந்து பாடி அதன் பெருமையைக்கூட்டியுள்ளனர். ஒரே விதமான சந்தத்தில் பாடி கதையை மாத்திரம் விளக்கிய பாடகர்கள் இன்று பல விதமான சந்த அமைப்பில் பாடல்களைப் பாடி இன்னிசைப் பெருக்கில் கதையை விளக்குகின்றனர்.

பாடகர்கள் குழுவாகவே பயிற்சி பெற்று பாடச் செல்வர். குறைந்தது ஐந்து பேராவது ஒரு குழுவுக்கு வேண்டும். ஏழு பேரும் இணைந்து பாடும் குழுக்களும் உண்டு. ஒரே சமயம் இரண்டு வில்லுப் பாட்டுக் குழுவினர் போட்டியாகப் பாடித் தங்கள் திறமையைக் காட்டுவதையும் காணலாம். இதற்கு 'மத்திரப் பாட்டு' என்று பெயர் கூறுவர்.

முன்பு தலைமைப் பாடகர் தலையில் கும்பம் வைத்து ஆடியாடிப் பாடியதாகவும் கூறுகிறார்கள். பாடிக் கொண்டிருக்கும்போதே பலவண்ணப் பவளங்களை வாயில் இட்டு அதைக் கோத்துக் காட்டுவதாகவும் செய்திகள் உண்டு. இவற்றைப் பாட்டுக்காரரின் வித்தைகள் என்று மக்கள் கூறுவர். தற்பொழுது வில்லுப்பாட்டுக்களைப் பலவித மாற்றங்கள் அடைந்து சிறப்புடன் விளங்கி மக்களை மகிழ்வித்து வருவது உண்மை.

### பாவைக்கூத்து

பாவைகளை நூலால் கட்டி திரைக்குப் பின்னாலிருந்து ஒருவர் அவற்றை ஆட்டி அசைத்துக் கதைகளை விளங்கச் செய்யும் நாட்டுப் புற கலைக்குப் பாவைக் கூத்து என்று பெயர். பாவைகளை மரத்தாலோ தோலாலோ செய்திருப்பர். அவற்றிற்கு முறையே மரப்பாவைக் கூத்து, தோற்பாவைக் கூத்து எனப் பெயர் கூறுவர். இரண்டும் செயல் முறையில் ஒன்றாகவே இருப்பதனால் ஒரே கலையாக மதிக்கப்படும்.

இப்பொழுது பெரும்பாலும் தோற்பாவைக் கூத்தே சிற்றூர்களில் நடத்தப்படுகிறது. சில சமயம் அட்டைகளினால் பாவைகளைச் செய்து அவைகளுக்கு வண்ணம் பூசி ஆட்டுவதும்உண்டு. பாவைக் கூத்து நடத்தும் அரங்கம் மிகச் சிறியதாகவே கட்டப்படும். முன்பக்கம் ஒரு சிறிய திரையைக் கட்டி இருப்பர். உட்பக்கம் ஒளி மிக்க விளக்கு கட்டப்பட்டிருக்கும். திரைக்கும், விளக்குக்கும் இடையில் படங்களை வைத்து ஆட்டுவர்.



வில்லுப்பாட்டு

படங்களை ஒரு கம்புடன் இணைத்துக் கம்பின் கீழ் நுனியைப் பிடித்து அங்கும் இங்கும் அசையச் செய்வர். மரப்பாவைக் கூத்தில் பாவைகளின் பாகங்கள் நூல்களால் கட்டப்பட்டிருக்கும். அவைகளைப் பிடித்து இழுத்து அசைக்கும் பொழுது கையையும் காலையும் ஆட்டி நடப்பதுபோல் தோன்றும். பாவைகளை இயக்கும் கலைஞரைச் சூத்திரதாரி என்று கூறுவர்.

சூத்திரதாரி காலில் கட்டைகளை அணிந்து பலகைகளில் தட்டி பலவிதமான ஒலிகளை எழுப்புவார். அம்பு வீசும் இடம் கைகொண்டு அடிக்கும் இடம் ஆகியவற்றைக் கட்டைகளைத் தட்டிக் காட்டுவார். பலபலகுரலில் பேசி பாத்திர வேறுபாட்டைப் புலப்படுத்துவர். பாடல்கள் பாடுவதும் அவரே. கலைத்திறன் மிக்கவரே பாவைக் கூத்தை நல்ல முறையில் நடத்தும் சூத்திரதாரியாக மதிக்கப்படுவார்.

நாட்டுப் புறத்தில் ஒரு பொது இடத்தில் பாவைக்கூத்து நடத்தப்படும். ஊரார் மொத்தமாகப் பணம் கொடுத்து அனைவரையும் காட்சியைப் பார்க்கச் செய்வர். சில ஊர்களில் பாவைக்கூத்து நடத்துவோர் கட்டணம் வசூல் செய்வர். இதற்காக அரங்கத்தைச் சுற்றி வளைவு கட்டப்படும்.

பொதுவாக, இராமாயணக் கதையே பாவைக் கூத்தாக நடத்தப்படும். பல நாட்கள் தொடர்ந்து கூத்து நடக்கும். இறுதியில் பட்டாபிஷேகம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும். புராணக் கதைகளும், அரிச்சந்திரன் போன்ற நாடறிந்த கதைகளும் பாவைக் கூத்தாக நடைபெறுவதையும் காணலாம்.

முதன் முதலில் பாவைக்கூத்து சைனாவில் நடைபெற்றதாகவும் பின் அங்கிருந்து இந்தோசைனா வழியாக இந்திய நாட்டுக்குப் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வந்ததாகவும் கூறுகிறார்கள். தமிழ் நாட்டில் பெருவாரியாக மாராட்டியக் கலைஞர்களே பாவைக் கூத்து நடத்துகிறார்கள். இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பாவைக்கூத்து அதிகமாக நடைபெறுகிறது. பாவைக்கூத்தே பொம்மலாட்டம் என்று அழைக்கப்படுகிறது. சிறு சிறு மரப் பாவைகளை விரலுக்கிடையில் வைத்து கூத்து நடத்தும் முறை இருந்தது. இக்காலத்தில் அது மிகவும் குறைந்து விட்டது. தோற்பாவைக் கூத்தில் பல புதுமைகளைச் செய்து காட்ட கலைஞர் முயன்று வருவதனால் இன்றும் அதனை மக்கள் கண்டு களிக்கின்றனர்.

—தொடரும்)

உண்மையான கலைகள் யாவும் உள்ளத்து உணர்ச்சிகளை வெளியிட உதவும் கருவிகள் ஆகும்.

— காந்தியடிகள்.






# தாவர உணவுச் சத்துக்கள் சிலேடேட் வடிவில் அடங்கியிருப்பதனுல் எக்ரோமின் பயிர் விளைச்சலைச் சிக்கனமான முறையில் 20% அல்லது அதற்கு மேலும் உயர்த்துகிறது.

இந்தியாவின் முதல் தாவர உணவு இலைத் தெளிப்பான எக்ரோமின் பயிர் விளைச்சலின் தரத்தையும் அளவையும் மேம்படுத்துகிறது. ஈரப்படுத்தவும், பரப்ப உதவும் ஊக்கி கிரகிப்புத் தன்மையை மேலும் அதிகரிக்கிறது. மற்ற தண்ணீர்த் தெளிப்பு எக்ரோ கெமிக்கல்களுடன் எக்ரோமினை உபயோகிக்கலாம்

எக்ரோமின் சிலேட் செய்யப்பட்டுள்ளது. சிலேஷன், நியூட்ரியன்டுகள் படிப்படியாக முழுவதும் கிரகிக்கப்படுவதையும் சிறந்த மகசூலையும் உறுதி செய்கிறது.



நிரூபணம் இதோ:
''பருத்தி... எக்ரோமின் மூலம் விளைச்சல் 20% அதிகரித்தது.''– மணிலாணி பாமுலையா எட்டக்குராபோடு, சதினபள்ளி தாலுக்கா, குண்டூர் ஜில்லா, ஆந்திரப் பிரதேசம்.

அதிகப்படி விவரங்களுக்கு இந்த முகவரிக்கு எழுதவும்:
**ஏரீஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் ப்ரை. லிட்.**
தபால் பெட்டி எண் 9417, பம்பாய் 400 093

ல்லாப் பயிர்களுக்கும் பயன்படும் தாவர உணவு இலைத் தெளிப்பான் எக்ரோமின் 10 கிலோ கொண்ட பைகளிலும் கிடைக்கிறது.

கிளை : 227-227-1 பொள்ளாச்சி ரோடு, கோயம்புத்தூர்-641 021

Grant. 61. TM

# தமிழரசுக்கு எங்கள் வாழ்த்துக்கள்...

**வாழ்த்துக்கள்!**

'தமிழரசு' பத்தாண்டுகளை நிறைவு செய்து விட்டதா? அப்பப்பா! நம்பவே முடியவில்லையே! தமிழரசுக்கு என் நல் வாழ்த்துக்கள்!

—எஸ். எஸ். மணி
திருவனந்தபுரம்.

**சர்க்கரைப் பொங்கல்!**

தமிழரசின் 11-ஆம் ஆண்டின் முதல் இதழே சர்க்கரைப் பொங்கலாக இனித்தது. அமைச்சர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் அருமையான தொகுப்பு,

—ஏ. சோமசுந்தரம்,
ஜேடார்பாளையம்,
சேலம்.

**பயனுள்ளவை!**

1.7.80 இதழில் அமைச்சர் பெருமக்களின் வாழ்க்கைக் குறிப்புகள் பயனுள்ளதாக இருந்தன. அதேபோல அரசின் அறிவிப்புகளும் - ஆக்கப்பணிகளும்.

—டி. வசந்தர்,
ஆர்.ஜி. துரைராஜு,
கீழப்பழுவூர், திருச்சி.

**நேரில் காண்பது போல்....**

பெருந்தலைவர் காமராஜரை நினைவுகூரும் முகமாகப் படங்களும், கட்டுரைகளும் வெளியிட்டமைக்கு நன்றி. சஞ்சய் காந்தி, முன்னாள் குடியரசுத் தலைவர் வி.வி.கிரி ஆகியோரது இறுதி ஊர்வலக் காட்சிப் படங்கள் நேரில் காண்பதுபோல்இருந்தன.

—ஆர். எம். பாலகிருஷ்ணன்,
ஆத்தூர், சேலம்,

**உள்ளம் சிலிர்த்தது!**

டாக்டர் சௌரிராஜனின் 'நினைக்க நினைக்க நெஞ்சம் உருகும்' கட்டுரையைப் படிக்கப் படிக்கப் பெரியவரின் நினைவுகளால், உள்ளம் சிலிர்த்துக் கண்களில் கண்ணீர் பனித்தது.

ஓ. ஏ. கிருஷ்ணசாமி,
ஒரைக்கால்பாளையம்,
கோயம்புத்தூர்.

**புதையலோ புதையல்!**

'மாணவர் பக்க'த்தில், உங்களுக்குத் தெரியுமா? பொது அறிவுப் புதையல் ஆகியவை புதையல் கிடைத்ததுபோல் இருந்தது!

ஆர். ஆர். கே. அண்ணாமலை,
உளுந்தூர்ப்பேட்டை.

**மெய்சிலிர்த்தது!**

பி. எல். ராஜேந்திரன் 'ஓ, அந்தக் கடைசி நிமிடங்கள்!' என்ற கட்டுரையைப் படித்தவுடன், மெய்சிலிர்த்தது.

—சொ. முத்தமிழ்வாணன்,
தஞ்சாவூர்.

**எப்படிப் பாராட்டுவது?**

1.7.80 இதழில் அழகிய வண்ண முகப்பு, பெருந்தலைவர் காமராஜரின் நினைவுக் கட்டுரைகள், அமைச்சர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்—எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை!

—ஒழுவெட்டிதாய்ப்ரியன்,
ஜமீன்எண்டத்தூர்,
செங்கை.

**திருப்தி அடைந்தேன்!**

1.7.80 இதழ் அட்டைப்படம் கண்டு திருப்தி அடைந்தேன். நிதிநிலை அறிக்கை முழுவதும் வெளியிட்ட ஒரே பத்திரிகை 'தமிழரசு' ஒன்றுதான்.!

—சி. எஸ். குமார்,
சென்னை-33.

**சுவையோ சுவை!**

'தமிழரசு' சுவை மிக்க செய்திகளைத் தருகின்றது. ஆசிரியர் பணியிலிருக்கும் என் போன்றவர்களின் பொது அறிவுக்கு இது பெருந்துணை புரிகிறது.

—எஸ். பி. முகம்மது,
நாகர்கோயில்.

**ஒரு கலங்கல்!**

16-7-80 இதழில் முதல்வரும் நிதியமைச்சரும் நடந்து வரும் வண்ணப்படம் அருமையாக இருந்தது ஆனால், அச்சடிப்பில் சிறிது கலங்கல். அதைத் தவிர்த்திருக்கலாம்.

—ஆர். டி. பாரதிமணி,
ராசிபுரம்.

**கவர்ந்தது!**

கவியரசு கண்ணதாசனின் 'கறை இலா அரசு' கவிதை என் சிந்தையைக் கவர்ந்தது"

—கே. எஸ். அப்துல்,
ரகிமான்,
சென்னை-14.

**சீரிய முறையில்...**

'தமிழரசு' தமிழரசின் பணிகளைப் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்லி வருவதுடன், பல துறைகளிலும் சிறந்த அறிவாளிகளின் கட்டுரைகளையும் கவிதைகளையும் கொண்டதாகச் சீரிய முறையில் வெளிவருகிறது.

—ரெ. சண்முகம்பிள்ளை,
(ஓய்வுபெற்ற மாவட்டப் பதிவாளர்) தஞ்சாவூர்-1.

**படிப்பினையாகவும்...**

தமிழரசில் வெளிவரும் கட்டுரை, கவிதை, துணுக்குகள் அனைத்தும் சிறப்பாக இருப்பதுடன், அனைவருக்கும் படிப்பினையாகவும் இருக்கின்றன.

—எஸ். எஸ். வாசன்,
தென்எலப்பாக்கம்.

## மேல்நிலைப் பள்ளிகளில் நாடகக்கலை!

மேல் நிலைப்பள்ளிப் படிப்பில் (Higher Secondary Course) நாடகக் கலையை ஒரு தொழிற்கல்விப் பாடமாக வைக்கத் தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள், பண்பாட்டுக் கலாசார நிகழ்ச்சிகள் போன்றவைகளில் பங்கு கொள்வதற்குத் தங்களைத் தொழில் கலைஞர்களாகத் தயார் செய்வதற்கான வாய்ப்பினை மாணவர்களுக்கு இப்பாடத் திட்டம் வகை செய்யும்.

# எலும்பு முறிவுக்குப் புதிய சிகிச்சை முறை

பழையன கழிதலும், புதியன புகுதலும் வளர்ச்சிக்கு அடையாளமாகும்.

தொழில்நுட்ப அறிவுகளிலும் மகத்தான மாறுதல் உருவாகி வரும் காலம் இது. 'விரைந்து தொழில் கேட்கும் ஞாலம்' மருத்துவத்துறையிலும் மகத்தான முன்னேற்றப் பாதை நோக்கிப் பீடுநடை போடுகிறது.


இதுதான் சிகிச்சை முறை என்று வரையறுக்கப்பட்ட பழைய கால சிகிச்சை முறைகள் இப்பொழுது மாற்றப்பட்டு வருகின்றன. புதிய மருத்துவ முறைகள் இன்று உலகம் முழுவதும் பரவி வருகின்றன. அப்படிப்பட்ட சிகிச்சை முறைகளில் ஒன்றுதான் எலும்பு முறிவுக்கு அளிக்கப்பட்டு வரும் ஏ. ஓ. சிகிச்சை முறை ஆகும்.

எலும்பு முறிவுக்கு அளிக்கப்பட்டு வரும் வழக்கமான பழைய சிகிச்சை முறையால், விபத்துக்கு ஆளானவர்களை விரைவில் குணப்படுத்த இயலாது.

விபத்துக்கு ஆளானவர்கள் கட்டாயமாக ஓய்வு எடுத்தாக வேண்டும். கைமூட்டு அல்லது கால் மூட்டில் எலும்பு முறிவு ஏற்பட்டால், மாவு கட்டுப் போடப்படும் அல்லது ஸ்பிலிண்ட் பொருத்தப்படும்.

இத்தகைய சிகிச்சை முறைகளால் கை மூட்டையோ, கால் மூட்டையோ குறைந்தது மூன்று மாதங்கள் வரை அசைக்க முடியாது. அத்துடன் கை அல்லது காலைக் கொஞ்சம்கூட அசைக்காமல் பார்த்துக் கொள்ள முடியும். சிகிச்சை முடிந்து, கை அல்லது காலை அசைக்க சில மாதங்களாகும்.

இந்தச் சிகிச்சை செய்து முடிந்த பின்னர், எலும்பு முறிவு ஏற்பட்ட கை அல்லது கால் பழைய நிலையில் முழு இயக்கத்திற்கும் வரும் என்று உறுதியாகச் சொல்லவும் முடியாது. அதுமட்டுமல்லாது அடிப்பட்ட உறுப்பில் எலும்பு முறிவினால் ஏற்படும் குறைகளைத் தடுக்கவும் முடியாது. இச் சிகிச்சை முறையில் எலும்பு முறிவுக்கு ஆளாகியவர்கள் நிறைய நாட்கள் மருத்துவ மனையில் படுத்திருக்க வேண்டியிருக்கிறது.



ஓய்வு கொடுப்பதன் மூலம் தான் எலும்பு முறிவை நன்கு குணப்படுத்த முடியும் என்ற பழைய சிகிச்சை முறை, நிறைவு தருவதாக இல்லை என்ற முடிவுக்கு வந்த மேற்கு ஜெர்மனிய நாட்டைச் சேர்ந்த எலும்பு மருத்துவத் துறையில் புகழ்பெற்ற சில டாக்டர்கள் எலும்பு முறிவை விரைவில் குணப்படுத்தும் புதிய முறையைக் கண்டுபிடிப்பதில் ஆர்வம் காட்டினர்.


1958ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்து நாட்டில் ஏ. ஓ. (Association of osteosynthesis) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் நோக்கம் எலும்பு முறிவுச் சிகிச்சையில் தொடர்ச்சியான முன்னேற்றம் காண்பது என்பதே ஆகும். அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள், பொறியியல் வல்லுநர்கள், உலோகத் தொழில் கலையியலாளர்கள், உயிர்நூல் அறிஞர்கள் ஆகியோர் ஏ.ஓ.வில் உறுப்பினர்கள். இவர்கள் அனைவரும் சேர்ந்து புதிய முறையை உருவாக்கினர்.

அடிபட்ட எலும்புப் பகுதியில் அறுவைச்சிகிச்சைசெய்து முறிந்த எலும்புகளை இரும்பினால் செய்யப்பட்ட பட்டைகள், திருகாணிகள் உதவியுடன் ஒன்று சேர்த்து மாட்டிவிடுவதால் விரைவாக பழைய நிலைக்குக் கொண்டு வரலாம் என்ற முடிவுக்கு வந்தனர்.

எலும்பு முறிவு அறுவைச் சிகிச்சைக்கு, 'ராப்மேதிஸ்' என்ற பொறியியல் வல்லுநரின் உதவியுடன் மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்காத ஆஸ்டினிடிக் என்னும் உயர்ரக இரும்பினால், ஆணிப்பட்டை முதலியவைகளைச் செய்து பொருத்தப்பட்டது.

எலும்பு முறிவு அறுவைச் சிகிச்சைக்கு வேண்டிய பட்டைகள், திருகாணிகள் செய்த ஆர்வத்தில் எஞ்சினியரான ராப்மாத்தீஸ் மருத்துவம் படித்து டாக்டரானார்.

எலும்பு முறிவுக்கு அளிக்கப்படும் இந்தச் சிகிச்சை முறையை உலகம் முழுதும் பரப்ப வேண்டும் என்ற ஆர்வம் கொண்டனர். அதன் விளைவாக இச்சிகிச்சை




முறை உலகம் முழுவதும் பரவி வருகிறது.

முறிந்த எலும்புகளை அறுவைச் சிகிச்சை செய்து சரியான நிலையில் ஒன்று சேர்த்துவைத்து திருகாணிப்பட்டை ஆகியவற்றால் உறுதியாகப் பொருத்தப்படும் எலும்பு இணைப்புச் சிகிச்சை முறையினால் எலும்பு முறிந்த உறுப்பை உடனடியாகவும் அதே நேரத்தில் முழுமையாகவும் இயக்கும் நிலைக்குக் கொண்டு வரமுடிகிறது. சிகிச்சை முடிந்தவுடன் எலும்பு முறிந்த உறுப்பை விரைவாக வலியில்லாமல் இயங்க ஆரம்பித்து விடுகிறது. முறிந்த எலும்புகளை உறுதியாகப் பொருத்தி விடுவதால் முறிவுபட்ட இடத்திற்கு முழு ஓய்வு கிடைக்கிறது.

ஏ.ஓ. அறுவை சிகிச்சை முறையினால் எலும்பு முறிவை விரைவில் குணப்படுத்த முடியும்.

எலும்பு முறிவு குணமாகும் வரையில் படுக்கையிலேயே இருக்க வேண்டிய அவசியம் கிடையாது. மாவுக்கட்டு போட்டுக்கொள்ள வேண்டியதுமில்லை. அடிப்பட்ட உறுப்பை ஆடாமல் அசையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற கவலையும் இல்லை.

கால் மூட்டிலோ, கை மூட்டிலோ எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தால், இந்தப் புதிய சிகிச்சை முடிந்த மறுநாள் காலையோ அல்லது கையையோ அசைக்கலாம். கை, முழங்கால் ஆகிய மேலுறுப்புகளில் முறிவு ஏறபட்டால் ஓ.ஏ. அறுவைச் சிகிச்சை முடிந்ததும் 10 அல்லது 12 நாட்களில் வேலைக்குத் திரும்பலாம். ஆனால், கனமான பொருட்களைத் தூக்கக்கூடாது. இடுப்பு, தொடை, கால் ஆகிய கீழ் உறுப்புகளில் எலும்பு முறிவு ஏற்பட்டால் அறுவைச் சிகிச்சை முடிந்தவுடன் நிற்கவோ, நடக்கவோ கூடாது. ஏனெனில், அவைதான் உடலின் பளுவைத் தாங்குகின்றன. ஆனால், காலை நீட்டலாம், மடக்கலாம். வீட்டிலேயே ஊன்றுகோலின் உதவியுடன் நடக்கலாம். இரண்டு அல்லது மூன்று மாதங்களில் பழைய நிலைக்கு வந்துவிடலாம். எலும்பு கூடி இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் ஆகியதும் பட்டைகளையும் திருகாணிகளையும் ஒரு சிறிய அறுவைச் சிகிச்சையினால் நீக்கி விடலாம். இம்முறையினால் நோயாளிகள் மருத்துவமனையில் வலியுடனும், வேதனையுடனும் இருக்க வேண்டிய நர்ட்கள் மிகக் குறைவே. மருத்துவமனையில் ஆகும் செலவும் மிகக் குறைவு.




விரைவாகக் குணமளிக்கும் இந்தப் புதிய அறுவைச் சிகிச்சை முறைக்கு எல்லோருக்கும் பயன்பட வேண்டுமெனில், இந்த அறுவைச் சிகிச்சையில் இன்றைய தலைமுறையைச் சேர்ந்த மருத்துவர்கள் பயிற்சி பெறவேண்டும். இதற்கான சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருததுவமனை, எலும்பு முறிவு அறுவைச் சிகிச்சைத் துறையினர் உலக எலும்பு இணைப்புச் சிகிச்சைக் கழகத்தோடு சேர்ந்து ''எலும்பு இணைப்புச் சிகிச்சைக் கழக மாநாட்டை'' 20-7-80-ல் சென்னையில் நடத்தினார்கள்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் திரு எச்.வி. ஹண்டே அவர்கள் இம் மாநாட்டைத் துவக்கி வைத்தார்.

எலும்பு முறிவு அறுவைச் சிகிச்சைத் துறையில் புகழ்பெற்ற நிபுணர்களான டாக்டர் ஹோல்ஸ், டாக்டர் டர், டாக்டர் வெல்லர் போன்றவர்களும் இந்தியாவிலுள்ள புகழ் வாய்ந்த அறுவைச் சிகிச்சை நிபுணர்களும் பங்கேற்றனர்.

இந்தியா முழுதும் தேர்ந்தெடுக்கப்பட்ட எண்பது இளம் டாக்டர்களுக்கு இந்தப் புதிய சிகிச்சை முறையை சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி எலும்பு மருத்துவத்துறை பேராசிரியர் டாக்டர் பி.வி.ஏ.



மோகன்தாஸ், வெளிநாட்டிலிருந்து வந்திருக்கும் டாக்டர்களின் உதவியுடன் கற்றுக் கொடுத்தார்.

பேராசிரியர் மோகன்தாஸ் ஜெர்மனிக்கும், சுவிட்சர்லாந்துக்கும் சென்று 'ஏ.ஓ' அறுவைச் சிகிச்சைக்கான பயிற்சி எடுத்துக் கொண்டவர். 1976ஆம் ஆண்டு முதல், இந்திய புதிய ஏ.ஓ. சிகிச்சை முறையைக் கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையில் செய்து வருகிறார்.

இந்தியாவில் இப்பொழுது 11 மருத்துவமனைகளில் இந்தப் புதிய எலும்பு முறிவு அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது. சென்னை மாநகரில் மூன்று மருத்துவமனைகளில் (ஸ்டான்லி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, போர்ட் டிரஸ்ட் மருத்துவமனை) செய்யப்படுகிறது.

வளர்ந்து வரும் உலகில் பரபரப்பான சூழ்நிலைகளில் விபத்துக்கள் மிகுதியாகின்றன.


வருமுன் காப்போம் - விபத்துக்கள் உருவாகாத சூழ்நிலைகளை உண்டாக்குவோம். எனினும் நம்மை மீறி விபத்துக்களினால் ஏற்படும் எலும்பு முறிவுகளுக்கு நல்லதொரு சிகிச்சை முறையாகவும், காலத்தின் வேகத்திற்கு ஏற்பவும் விரைவில் குணமாக உதவிடும் சிகிச்சை முறையாக்வும் விள்ங்குகிறது ஏ.ஓ.சிகிச்சை முறை. இச்சிகிச்சை முறையைப் புதுமையானது என்பதற்காக மட்டுமல்ல- எதிர்கால உலகத்திற்கு ஏற்றதாக அமைந்திருப்பதால் வரவேற்போம்!

—மாமூலன்.

விதைப்பதோ ஒரே ரூபாய்

கிடைப்பதோ ஒரு

# பணத்தோட்டம்!



## தமிழ்நாடு பரிசுச் சீட்டு

வாங்கிடுவீர்!

ஒவ்வொரு வரிசைக்கும் 2 முதல் பரிசுகள்

**ரூ. 50,000** வீதம்

சீட்டின் விலை ரூ. 1/- மட்டுமே

குலுக்கல் நாள்: 20.8.1980

இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்
அரசினர் தோட்டம், சென்னை-600 002



# ஈடில்லா நகைச்சுவைக் கலைஞர்

## —பேரறிஞர் அண்ணா

உண்ணும்போது சுவை தரும் பண்டம் பல, உண்டான பிறகு நெடுநேரம் வரையிலே, உமிழ்நீர் உள்ளே செல்லும்போதெல்லாம் சுவை தரும் பண்டம் சில. அத்தகைய நகைச்சுவையை நாட்டு மக்களுக்குத் தந்தார் என்.எஸ். கிருஷ்ணன்.

நாட்டு மக்களின் நிலையை உயர்சாதிக்காரர்களின் உளப்போக்கு, தொழிலாளியின் துயரம், சாதிபேதத்தால் உண்டாகும் மனப்போக்கு, இவைகளை விளக்கினார்.

புனிதமான கொள்கைகள் என்று மக்கள் கருதும் பல எண்ணங்கள், வெறும் புரட்டு அல்லது பொருளற்றவை என்பன போன்ற பலப்பல புத்துலக அமைப்புக்கான கருத்துக்களை நகைச்சுவையுடன் கலந்தூட்டி நற்காரியத்தை வெறும் கோமாளிச் சேட்டைக்கு மட்டுமே பயன்பட்டுவந்த நகைச்சுவை நடிப்புத் துறை மூலம், நாட்டுக்குச் செய்து வந்தார்.

நகைச்சுவைத் துறையை அத்தகைய சீர்திருத்த மேடையாக்கிய நடிகர்கள் இங்கு இதுவரை தோன்றியதில்லை. மேனாட்டு காமிக் நடிகர்களிலே கூட ஹெரால்ட் லாயிட், பஸ்டர் கீடன், லாரல் அண்டு ஹார்டி, ராபர்ட் உல்சி போன்ற புகழ் பெற்ற நகைச்சுவை நடிகர்கள் கூட வெறும் பொழுதுபோக்குக்கான விளையாட்டுக்களைக் காட்டுபவராயினரே தவிர, 'போதனை' செய்பவர்களாகவில்லை. ஓரளவுக்கு சார்லி சாப்ளின் சிற்சில படங்களில் படத்திலே கருத்துக்களைத் தருவதற்கு காமிக் துன்றயைப் பயன்படுத்தினார். மற்றவர்கள் பெண்ணென்று எண்ணி ஆணை முத்தமிடுவது வழுக்கி விழுவது, சாமர்த்தியமாக எதிரியைஏய்த்துவிடுவது போன்ற காமிக்குகளை செய்தவர்களே தவிர என்.எஸ்.கே. யைப் போல, 'ஆணும் பெண்ணும் ஒன்னு, அதை அறியாதவன் மூளை களிமண்ணு' என்று, கார மருந்தை இனிப்புப் பூச்சுடன் கலந்து நாமாக வாங்கி அதனை ஒன்றுக்குப் பத்தாக உள்ளே போட்டுக் கொள்ளக் கூடிய விதத்திலே நகைச்சுவை நடிப்பைச் செய்ததில்லை.



தமிழகத்திலே மட்டுமல்ல- கொஞ்சம் சிந்தனையைச் செலவிட்டால் இந்தியாவிலேயே இந்த நகைச்சுவைத் துறையை இதமாகச் சீர்திருத்தம் புகுத்தும் கருவியாக்கிய காமிக் நடிகர் வேறு கிடையாது என்பது விளங்கும். கணக்கெடுத்து அந்த அளவைக்கூற முடியாதே தவிர, அவருடைய காமிக் கண்டதன் மூலம் புதிய சீர்திருத்தக் கருத்துக்களை ஒப்புக் கொண்டவர்களின் தொகை ஒரு மேடைப் பிரசங்கியின் பிரச்சாரத்தால் திருந்தியவர்களின் தொகையைவிட அதிகம் என்று தைரியமாகக் கூறலாம்.

சீர்திருத்தக் கருத்துக்களைக் கண்டன உருவிலே காட்டாமல் வேடிக்கைப் பேச்சின் மூலம் புகுத்திய முதல் நடிகர்என்பதால் நாட்டைப் பண்படுத்தப் பாடுபட்ட கவிஞர்கள், பேச்சாளர், எழுத்தாளர் ஆகியோரின் வரிசையிலே என்.எஸ்.கே. எனும் நடிகரும் நிச்சயம் இடம் பெறுவார். கவிஞர், எழுத்தாளர், சொற்பொழிவாளர்கள ஆகியோரின் பணியினால் விளைந்த பலன் போலவே நகைச்சுவை மன்னனின் பணியினாலும் பெரும் பயன் விளைந்திருக்கிறது என்பதை நாடு இன்று ஏற்றுக் கொள்ள மறுக்கலாம்; ஆனால் உண்மையான எடை போடும் நாள் வரும்போது, நாடு இந்தத் தொண்டின் மதிப்பைச் சரியாகக் கூறத்தே தீரும்.

யாரும் இதற்கு முன் கையாளாத முறையை நெடுங்காலமாக இருந்து வரும் நகைச்சுவைத் துறையில் புகுத்தி வெற்றி கண்டதுடன், அந்த வெற்றியின் மூலமாகவே நாட்டிக்கு நற்கருத்துக்களைப் புகுத்தும் நற்றொண்டு புரிந்து புரட்சி பரப்பிய பெருமக்கள் வரிசையிலே அவர் இடம் பெற்றார் என்பது மட்டுமல்ல- அந்த முறையைப் பின்பற்றித் தீரவேண்டிய நிலைமையை நடிகர் உலகிலே உண்டாக்கி விட்ட காரணத்தால், அந்தக் காரியத்துக்குப் பலர் முன் வரவும் செய்து விட்டார். அதாவது, ஓர் சூழ்நிலையை உண்டாக்கிவிட்டார். நகைச்சுவைத் துறையிலே அவர் ஆற்றிய அரும்பணிக்கு எதையாவது ஈடாகக் கூற வேண்டுமானால் புரட்சிக்கு முன்பு - பிரான்சிலும் ரஷியாவிலும் -கவிஞர்கள், எழுத்தாளர், பிரசங்கிகள், நடிகர்கள் ஆகியோர் உண்டாக்கி வைத்த சூழ்நிலையைத் தான் குறிப்பிட முடியும்.

(திராவிட நாடு 21.7.46)

# கலையுலகக் காவலன்





விட்டது. இலட்சக்கணக்கான ரூபாய்களை வள்ளல் தன்மையோடு வாரி வழங்கினார். அந்த வள்ளலின் மறைவால் கலையுலகம் இருண்டு கிடக்கிறது. ஈடுசெய்ய முடியாத ஒரு மாணிக்கத்தை நாம் இழந்துவிட்டோம்.

திரு எம். ஜி. ஆர்.

(30.8.57—தென்னிந்திய நடிகர் சங்கச் செயலாளராக இருந்த போது வானொலியில் ஆற்றிய உரையிலிருந்து...)

## நகைச்சுவை அரசு!

நமது நகைச்சுவை அரசு கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் தனது தொழிலில் ஒரு மேதாவி என்றாலும், அதை நடத்தும் முறையில் ஒரு 'பெரிய புரட்சியாளர்' என்றே சொல்ல வேண்டும். அதுவும் லெனின் செய்தது போன்ற புரட்சி என்றே சொல்லவேண்டும். ஏனெனில் நாடகத் துறையிலும், கலைத் துறையிலும், இசைத் துறையிலும் ஒரு பெரிய புரட்சி ஏற்படுத்தி இருக்கிறார் அவர்.

நாடகப் புரட்சி உலகைப்பற்றிச் சரித்திரம் எழுதப்பட்டால், அச் சரித்திரத்தின் அட்டைப் பக்கத்தில் என்.எஸ். கிருஷ்ணன் படம் போடா விட்டால் அச்சரித்திரமே தீண்டப்படாததாக ஆகிவிடும்.

—தந்தை பெரியார்.

## மாபெரும் நட்டம்!

''கலையுலகக் காவலன் இறந்தார். இந்த மாபெரும் நஷ்டத்தை நாம் ஈடுசெய்வது என்பது இயலாத ஒன்றாகும். இனி நமது கலைவாணரைப் போன்ற ஒரு உயர்ந்த நகைச்சுவை நடிகரைக் காண்பது அரிது. பேராற்றல் மிக்க அந்தக் கலைஞர், உலகக் கலைஞராக வணங்கவேண்டியவர். ஏதோ இந்தத் தமிழ்நாட்டிலே பிறந்த காரணத்தால் இத்துடன் அவர் புகழ் நின்று

## சிந்திக்க வைத்தவர்!

கலைத்துறை மண்டலத்தில் மாபெரும் மனிதராகத் திகழ்ந்தவர் கலைவாணர். நம்மைச் சிரிக்க வைத்துச் சிந்திக்க வைத்தவர். சிரிக்க வைப்பவர்கள் கலைத் துறையில் அதிகம். ஆனால் சிந்திக்க வைப்பவர்கள் மிகக் குறைவு. இத்தகைய மாபெரும் சிந்தனைச் செல்வர் அவர்.

கலைவாணரிடமிருந்து நாம் நுகர்ந்த கலை மணத்தை—சுவைத்த நகைச்சுவையை—வருங்கால மக்களும் நுகரும்படி—சுவைக்கும்படி செய்ய வேண்டும். அவரது புகழை-பெருமையை காப்பாற்ற அனைவரும் முன்வரவேண்டும்.

—காவலர் நெடுஞ்செழியன் (31.8.57)

## மக்கட் பணியில் மேதை!

நடிப்புத் துறையில் மட்டுமின்றி மக்கட் பணியிலும் மேதையாக விளங்கினார். ரசிகர்களுக்கெல்லாம் தன் அன்புக்கரத்தை நீட்டினார். இவர் மக்கள் உள்ளங்களில் நீங்கா இடத்தையும் இறவாப் புகழையும் பெற்று விட்டார்.

—ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயா.

அட்டைப்படக் கட்டுரை:

# தமிழக அரசின் தன்னிறைவுத் திட்டம்

நமதுநாடு கிராமங்கள் நிறைந்தது. நமது நாட்டைச் சேர்ந்த பெரும்பாலான ஏழை எளிய மக்கள் கிராமப்புறங்களிலேயே வசிக்கிறார்கள். கிராமப்புறங்களில் வசிப்பவர்களில் பெரும் பகுதியினர் வறுமைக் கோட்டிற்கும் கீழே வசிப்பவர்கள். இதனாலேயே கிராமங்களில் வசிப்பவர்கள் தங்கள் தேவைகளைத் தேடி நகரங்களை நோக்கி வந்து கொண்டுள்ளார்கள்.

சுதந்திரம் அடைந்து 33 ஆண்டுகளுக்குப் பிறகும் நிலைமை இவ்வாறு உள்ளது.

### அடிப்படைத் தேவைகள்

கிராமங்களில் வசிக்கும் மக்களின், அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி, அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் மகத்தான பணியினை மேற்கொள்ள முடிவு எடுத்து தமிழக அரசு, கிராமத் தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கிராமங்களில் கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்றுதல் அவசியம் என அரசு முடிவு செய்துள்ளது:

1. எல்லாக் கிராமங்களிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி.
2. இணைப்புச் சாலைகள்.
3. சிறுபாலங்கள்—மதகுகள்.
4. பள்ளிக் கட்டடங்கள்.
5. சுகாதாரப் பாதுகாப்பு-ஊரக மருந்தகங்கள்.
6. தாய்-சேய் நல நிலையங்கள்.
7. வீடுகளுக்கு மின்வசதி.
8. சிறுபாசன ஆதாரங்களை மேம்படுத்துதல்.
9. அரிசன மக்கள் இடுகாட்டிற்குச் செல்ல இணைப்புச் சாலைகள்.



10. குறிப்பாக, அரிசனங்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் கிராமப்புற வீட்டு வசதி.

மாபெரும் திட்டமான இந்தக் கிராமத் தன்னிறைவுத் திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் ஒரே கட்டத்தில் நிறைவேற்றிட இயலாது. தமிழ்நாட்டில் 376 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன.

இந்தக் கருத்தின் அடிப்படையிலே தமிழக அரசு, முதல் கட்டமாக தமிழ்நாட்டில் 69 ஊராட்சி ஒன்றியங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றில் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது.

இந்த 69 ஊராட்சி ஒன்றியங்களிலும் மேலே குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தேவைகளையும், ஒரு குறிப்பிட்ட காலவரம்பிற்குள் அதாவது 31.3.1981-க்குள் நிறைவேற்றி முடித்திட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

3 அல்லது 4 ஆண்டுக் காலத்திற்குள் தமிழகம் முழுவதும் இத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு நிறைவேற்றப்படும்.

### நூறு ஊராட்சி ஒன்றியங்களில்....

இரண்டாவது கட்டமாக, இத் திட்டம் மேற்கொள்ளப்பட உள்ள 100 ஊராட்சி ஒன்றியங்களில், இத்திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் நடந்து வருகின்றன.

இதன்பிறகு, மீதமுள்ள 207 ஊராட்சி ஒன்றியங்களிலும் இத் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

31.3.81க்குள் நிறைவேற்றப்பட உள்ள இந்த முதல் கட்ட கிராமத் தன்னிறைவுத் திட்டத்திற்குச் சுமார் 58 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாவது கட்டமாக,100 ஊராட்சி ஒன்றியங்களில் கிராம தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்ற 65 கோடி ரூபாய் செலவாகும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பணியினையும் குறித்த கால அளவிற்குள் முடிக்க தமிழக அரசின் தலைமைச் செயலாளரின் தலைமையில் உயர் அதிகாரக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்குத் தலையாய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஆகும் செலவில் பெருமளவு குடிநீர் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தினை நிறைவேற்ற பெருமளவு சிமெண்ட், இரும்பு, பைப் போன்ற பொருட்கள் தேவைப்படுகின்றன. இந்தப் பொருட்களையும், தேவைப்படும் நிதியுதவியினையும் தந்து தவுமாறு மத்திய அரசிடம் தமிழக அரசு கோரியுள்ளது.

மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள், புதுடெல்லியில், இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களை நேரில் சந்தித்து, கிராமத் தன்னிறைவுத் திட்டம் குறித்து எடுத்துக்கூறி, மேற்கண்ட உதவிகளை மத்திய அரசு



வழங்கிட ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

கிராமத் தன்னிறைவுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ள 69 ஊராட்சி ஒன்றியங்களிலும் எவ்வாறு நிறைவேற்றப்படுகிறது . என்பதையும், கிராம மக்கள் எவ்வாறு பயன் பெறுகிறார்கள் என்பதையும் கவனிப்போம்.

### சிறப்புக் கவனிப்பு

சமுதாயத்திலுள்ள தனிப்பட்ட குடும்பங்களின் நிலையைச் சிறப்புக் கவனிப்பு மூலம் மேம்படுத்துவது, தன்னிறைவுத் திட்டத்தின் ஓர் முக்கியமான நோக்கமாகும். முதற் கட்டமாக, மாவட்ட ஆட்சித் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுடைய எண்ணிக்கையைப் பற்றிய புள்ளி விவரங்கள் எடுக்கப்படாத வட்டாரங்களில், துரித நடவடிக்கை உடனே மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்சொன்ன குடும்பங்கள் பொதுவாகக் கீழ்க் கண்ட இந்த ஆறு பிரிவுகளில் அடங்கும்:

1. சிறு விவசாயிகள் 2. குறு விவசாயிகள் 3. நிலமற்ற விவசாயிகள் 4. கைவினைஞர்கள் 5. முதியோர் ஓய்வூதியம் பெறத் தகுதி பெற்றவர்கள் 6. அரிசன மக்கள்.

சிறு, குறு மற்றும் நிலமில்லா விவசாயிகளுக்கு, ஒருங்கிணைந்த ஊர் வளர்ச்சித் திட்டம், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப் பகுதி முன்னேற்றத் திட்டம் அல்லதுஇந்த69வட்டாரங்களில் ; நடைபெற்றுவரும் பிற சிறப்புத் திட்டங்கள் மூலம் உதவி அளிக்கப்படும்.

நூறு வட்டாரங்களுள் சில வட்டாரங்கள் ஒருங்கிணைந்த ஊர் வளர்ச்சித் திட்டம், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் அல்லது வறட்சிப் பகுதி முன்னேற்றத் திட்டம் ஆகிய திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும்.

எனவே, சிறு குறு நிலமில்லா விவசாயிகள் ; இச்சிறப்புத் திட்டங்களின் மூலம் சிறந்த அளவு பயன்பெறுவர். வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள எல்லாக் குடும்பங்களும் சில ஆண்டுக் காலத்தில், ஏதாவது ஒரு சிறப்புத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு, வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்யப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுடன் கலந்தாலோசித்து தனிப்பட்ட குடும்பங்களுக்கு வேண்டிய பொருளாதாரத் திட்டங்களை வகுத்துள்ளனர்.

69 வட்டாரங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 6.98 இலட்சம் ஆகும். இதில் இதுவரை பயன்பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை 1,03,709 ஆகும்.

### கைவினைஞர்கள்

இவ் வட்டாரங்களில் ஏறத்தாழ 1000 கைவினைஞர்கள் குடும்பங்கள் உள்ளன. தம் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள்கள், செய்த பொருள்களை விற்க வசதி மற்றும் பண வசதி முதலியவைகளை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க ஒருங்கிணைந்த முயற்சி எதுவும் இதுவரை இல்லை.

எனவே, மகாராட்டிர மாநிலத்தில் செய்ததுபோல ஒவ்வொரு வட்டாரம் முழுவதற்கும் ஒரு கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தும் கருத்து உள்ளது. இச்சங்கங்கள் காதி மற்றும் கிராமக் கைத் தொழில் வாரியத்தின் உதவியுடன் 4 சதவிகிதம் வட்டி விகிதத்தில் நிதியுதவி வழங்கும். இவை உண்மையிலேயே கைவினைஞர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

### நிலமில்லா விவசாயத் தொழிலாளர்கள்

எல்லா வட்டாரங்களிலும் உழைப்புக்கு உணவுத் திட்டம் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டில் ரூ. 15 கோடி மதிப்புள்ள ஒரு இலட்சம் டன் அரிசி பெற்று பணிகளை நிறைவேற்றுவதற்குக் கருதப்பட்டுள்ளது. இவ் வேலைகள் ஒப்பந்தக்காரரர்கள் மூலமாக நிறைவேற்றப்படக் கூடாது என்றும், ஒன்றியங்கள் அல்லது பிற துறைகள் மூலமாகத் தேவைப்படும் தொழிலாளர்களைப் பணியமர்த்தி, நிறைவேற்றப்பட வேண்டும் என மத்திய அரசு கூறியுள்ளது.


பொறியாளர்களின் தொழில் நுட்பப் பிரிவு மேற்பார்வையில் ஒன்றியமோ அல்லது அரசுத் துறையோ இத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்காக வட்டார நிலையில் கூட்டுறவு வேலை ஒப்பந்தச் (Labour contract Society) சங்கம் உழைப்புக்கு உணவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அமைக்கும் கருத்து உள்ளது. இம்மாதிரி அமையப் பெற்றால் உழைப்புக்கு உணவுத் திட்டத்தை இச்சங்கங்கள் மூலம் நிறைவேற்ற இயலும்.

### முதியோர் ஓய்வூதியம் பெறத் தகுதி வாய்ந்தவர்கள்

ஆதரவற்ற முதியோர்களுக்கு மட்டுமின்றி, கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் விதவைகளும் முதியோர் ஓய்வூதியம் பெறும் வகையில், தமிழ்நாடு அரசு முதியோர் ஓய்வூதியச் சலுகைகளை அளித்து வருகின்றது. இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு 60 வயதை அடைந்தும், கைவிடப்பட்டும், உடல் நலம் குன்றியும் உள்ள விவசாயத் தொழிலாளர்களும் பயன்பெறும் வகையில் அமல்படுத்தப்பட இருக்கிறது.

### அரிசன நலன்

சாலைகள், பள்ளிகள், பாது



காக்கப்பட்ட குடிநீர் வழங்குதல், இடுகாட்டுப் பாதைகள் மற்றும் பிற அடிப்படை வசதிகளை அரிசனக் குடியிருப்புகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்க அரிசன நலத்துறை ஓர் ஒருங்கிணைந்த திட்டத்தை வகுத்துள்ளது. நிதி நிலை அறிக்கை உரையில், இத்திட்டங்கள் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படுமெனக் கூறப்பட்டுள்ளது. இந்தச் சிறப்புத் திட்டங்களை 169 வட்டாரங்களில் நிறைவேற்றும் பணியை இவ்வாண்டில் அரிசன நலத்துறை மேற்கொள்ளும். மத்திய அரசால், அரிசனங்களுக்கான சிறப்புத் திட்டங்களுக்காக (Special component plan) அளிக்கப்படும் தொகையும், மாநில அரசால் ஒதுக்கப்படும் தொகையும் இத்திட்டங்களுக்காகச் செலவழிக்கப்படலாம்.

இவ்வாறு ''கிராமத் தன்னிறைவுத் திட்டம்'' என்பது கிராம மக்களில் ஒவ்வொருவரின் வாழ்விலும் தன்னிறைவு ஏற்படுத்தும் திட்டமாக வகுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**இணைப்புச் சாலைகள்**

கிராமத் தன்னிறைவுத் திட்டத்தின் ஓர் அம்சமான இணைப்புச் சாலைகள் போடுதல் கீழ்க் கண்டவாறு மேற்கொள்ளப்படும்:

1. ஓராண்டிற்கு முன்னதாகப் போடப்பட்ட இணைப்புச் சாலைகளுக்குச் சரளைக் கற்கள் இடுதல்.
2. 500-லிருந்து 1500 பேர்களைக் கொண்ட குடியிருப்புகளை இணைப்பதற்கு உண்டான இணைப்புச் சாலைகளை, தேவையான சிறு பாலங்கள் கட்டி முறம்பிட்டு மேம்படுத்திய சாலைகள் ஓராண்டிற்குப் பின்னர் இறுகியவுடன், இவற்றில் சரளைக் கற்களை இடும் வேலையை எடுத்துக்கொள்ளுதல்.
3. 250ம் அதற்கு மேலும், 500க்குக் குறைவாகவும் உள்ள குடியிருப்புகளில் இணைப்புச் சாலைகளை அமைத்தல்.

# நூல் நயம்

## பாரதியார் கவிதைகள்

(பதிப்பாசிரியர்கள்: டி.வி.எஸ். மணி, சீனி விசுவநாதன், வெளியிட்டோர்: வானவில் பிரசுரம், இரண்டாவது குறுக்குத் தெரு, மேற்கு சி.ஐ.டி. நகர், சென்னை-600 035. விலை ரூ. 6.25)

கவியரசர் பாரதியார் அவர்களின் கவிதைகள் அனைத்தையும் முழு நூலாக-புதிய வடிவமைப்பு உடைய தொகுப்பாக விரிவாக்கப்பட்ட புதிய பதிப்பாக வெளியிட்டுள்ளனர், வானவில் பிரசுரத்தினர்.

ஆதாரப்பூர்வமான பதிப்பாகவே மதிக்கப்பட வேண்டும் என்பதில் தனிக் கவனமும், அக்கறையும் செலுத்தப்பட்டு, பல தகவல்களைப் பின் இணைப்பாகச் சேர்த்திருக்கிறார்கள்.

பாமாலை, தேசிய கீதங்கள், பல்சுவைக் காவியங்கள், தனிப் பாடல்கள் என்ற தலைப்பில் பாடல்கள் வகைப்படுத்தப்பட்டு வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

பிற்சேர்க்கைகள் பகுதியில் பாடல் முதற் குறிப்பு அகராதி, பாடல் தலைப்பு முதற் குறிப்பு அகராதி, சில முக்கிய பிற்சேர்க்கைகள், புதிய பாடல்கள், பாடல்கள் விவர அட்டவணை, சில முக்கியத் தகவல்கள் என்று காணப்படும் பகுதிகள் படிப்போருக்கு மிகவும் உதவியாக உள்ளன.

மொத்தம் 710 பக்கம் உள்ள பாரதியார் கவிதைகள் என்னும் இந்நூல், ஓர் அற்புதமான தொகுப்புநூல்.

இதனை தொகுத்து வெளியிட்டுள்ள பதிப்பாசிரியர் இருவருக்கும் பாரதி இலக்கிய ஆராய்ச்சி அன்பர்கள் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளனர். அந்த அளவுக்கு இந்நூல் கவியரசர் பாரதியார் களஞ்சியமாகத் திகழ்கிறது.

—மாமுலன்

## வரலாறு கண்ட வைக்கம் வீரர்

**(ஆசிரியர் : மங்கையர்க்கரசி, வெளியீட்டாளர் : மருதமலையான் பதிப்பகம், 33, பொன்னுசாமி நாயக்கன் தெரு, சென்னை-14. விலை ரூ. 12.00)**

'பெரியாரின் வாழ்க்கை ஒரு வரலாறல்ல; ஒரு சகாப்தம்' என்கிற பேரறிஞர் அண்ணா அவர்களின் சொல்லை மெய்ப்பிப்பதாக ஆக்கப்பட்டிருக்கிறது இந்த நூல். மூலநூல் பலவற்றின் துணை கொண்டு, இதனைக் கற்பனை கலவாத வரலாற்று நூலாகவே படைத்திருக்கிறார் நூலாசிரியர்.

நூலின் பெயர் தனியொரு போராட்டத்தைச் சார்ந்திருந்த போதிலும், தந்தை பெரியார் முன்னின்று நடத்திய அத்தனைப் போராட்டங்களும் இதிலே விவரிக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல; அந்தப் பாசறையிலே உருவானவர்களைப் பற்றிய குறிப்புகளும் சிறப்பு அம்சமாகத் திகழ்கிறது. பயனுள்ள நூல்.

—பி.எல். ஆர்.



இம்மாதிரியான சாலைகளை அமைக்கும்போது தேவைப்படும் குழாய்கள் இட்ட சிறுபாலங்கள் கட்டி, சாலைகள் அமைக்கப்பட வேண்டும். இணைப்புச் சாலைகளைப் புதிதாக அமைக்கக்கூடாதென்று 1974ல் பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணை நீக்கப்படும். உழைப்புக்கு உணவுத் திட்டத்தில் இவ்வேலைகளை எடுத்துக் கொண்டு கட்டுமானப் பொருள்களின் விகிதத்தில் பாலங்கள் செலவை ஏற்றுக் கொண்டு பணிகள் முடிக்கப்படும்.

**பள்ளிக் கட்டடங்கள்**

கிராமத் தன்னிறைவுத் திட்டத்தின்படி பள்ளிக் கட்டடங்கள் கீழ்க்கண்டவாறு அமைக்கப்படும்:

வட்டாரங்களில் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்காக நான்கு வித மாதிரிகளைக் (சென்னை கூரைக் கட்டடங்கள், ஏ.சி.கூரைகள் ஓடு மற்றும் ஆர்.சி.சி) கூறுமாறு தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். ஒவ்வொரு பள்ளிக்கும் தற்போதுள்ள உச்ச வரம்பு ரூபாய் 20,000 என்பது ரூ. 40,000மாக மாற்றப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றும்போது, சொந்தமாகக் கட்டடங்கள் இல்லாத பள்ளிகளுக்கே முன்னுரிமை அளிக்கப்படும். கிராமங்களில் குறைந்த தேவைகளை முடித்து வைத்த பிறகே, கூடுதலாகக் கட்டடம் கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்படும். ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான கல் கட்டடங்கள் அனைத்திலும் 4 குழல் விளக்கு அமைப்பது மேற்கொள்ளப்படும். நீரைத் தேக்குவதற்குச் சிறிய திறந்த தொட்டியுடன் கூடிய ஆர்.சி.ஏ.பி. கழிவறை ஒவ்வொரு பள்ளியிலும் நிறுவப்படும்.

**கிராமத் தன்னிறைவுத் திட்டத் தேவைகள் என்ன?**

தமிழகத்தில் கிராமத் தன்னிறைவுத் திட்டத்தினை நிறைவேற்றத் தேவைப்படும் நிதி மற்றும் பல்வேறு பொருட்களின் விவரம் வருமாறு:

தன்னிறைவுத் திட்டத்தை 169 வட்டாரங்களில் 1980-81-ஆம் ஆண்டில் நிறைவேற்ற ரூ. 137.25 கோடியும், கட்டுமானப் பொருள்களில் சிமெண்ட் 1,17,520 மெட்ரிக் டன்னும், எஃகுக் கம்பிகள் 8048 மெட்ரிக் டன்னும் தேவைப்படுமென ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது.

தன்னிறைவுத் திட்டத்தில் இன்னும் சேர்க்கப்படாத 207 வட்டாரங்களுக்கு, அடுத்த இரண்டு ஆண்டுக் காலத்தில் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்த ரூ. 142.22 கோடி தேவைப்படும் என்றும், கட்டுமானப் பொருள்களில் சிமெண்ட் 1,39,350 மெட்ரிக் டன்னும், எஃகுக் கம்பிகள் 21,154 மெட்ரிக் டன்கள் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.



கிராமப் பொருளாதார மறுமலர்ச்சியே நவ இந்தியாவை உருவாக்கும் சக்தி படைத்தது என்பதைத் தேசத் தந்தை அண்ணல் காந்தியடிகள் வலியுறுத்தி வந்தார்.



தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா ஆகியோர்களும் இதனை வலியுறுத்தி செயலாற்றிட முனைந்தார்கள்.

இன்று, தமிழக அரசு, அத்தலைவர்களின் வழியில், கிராமங்களில் வாழும் மக்களின் நல்வாழ்வுக்கு அவர்கள் வாழ்விலே மேம்பாடு காண 'கிராமத் தன்னிறைவுத் திட்டம்' என்ற புரட்சிகரமான திட்டத்தை நிறைவேற்றி வருகிறது.

தன்னிறைவுத் திட்டம் தமிழகம் முழுவதும் நிறைவேற்றி முடிக்கப்படும்போது, தமிழக கிராம மக்களின் வாழ்வில் பெரும் மறுமலர்ச்சி ஏற்படும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை!

—ஜி. ஆனந்தன்



தமிழ்ப் பண்பாட்டு உலக இயக்க மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மொரீசியஸ் தீவுக்குச் செல்லும் மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் திரு. நெடுஞ்செழியன் அவர்களை 2-8-80ல் ◄ மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழியனுப்பி வைத்தார்கள்.


தமிழ்ப் பண்பாட்டு உலக இயக்க மாநாட்டில் கலந்துகொள்வதற்காக மொரீசியஸ் தீவுக்குச்செல்லும் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்களை 1-8-80ல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழியனுப்பி வைத்தார்கள்.
▼

# படமும் செய்தியும்


சேலம் நகரில் செய்தி-மக்கள் தொடர்புத்துறையால் அமைக்கப்பெற்ற அரசு பொருட்காட்சியினை மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. கா. இராசாராம் அவர்கள்தலைமையில், மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு.இராம.வீரப்பன் அவர்கள் 27-7-80ல் திறந்து வைத்தார்.
▼







பசும்பொன்
த்துராமலிங்கத்தேவர்




தியாக வாழ்வே தேசிய வாழ்வு

தந்தை பெரியார்




பகுத்தறிவு நெறியே பண்பட்ட நெறி

டாக்டர் அம்பேத்கார்



சமத்துவம் கண்டு சமூகநீதி காப்போம்


காயிதேமில்லத்
முகமது இஸ்மாயில்



கண்ணிய அரசியலைக் கட்டிக் காப்போம்

# தமிழக சட்டமன்றப் பேரவையில்

தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கார், காயிதே மில்லத் முகமது இஸ்மாயில், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகியோரின் திருவுருவப் படங்களை 9-8-1980 அன்று மேதகு கேரள மாநில ஆளுநர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் திறந்து வைத்தார்.





மேற்கு வங்கத்தைச் சேர்ந்த நீதி, சட்டமன்றத் துறை அமைச்சர் திரு. எச். வீ. ஹலீம், மாண்புமிகு பாசனத் துறை அமைச்சர் திரு. கா. இராசாமுகம்மது அவர்களை 23-7-80ல் சந்தித்தார்.




திரு புலமைப்பித்தன் அவர்கள் சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவராக 30—7—80-ல் பதவி ஏற்றார்.

மாண்புமிகு அரிசன நல அமைச்சர் திரு விஜயசாரதி அவர்களை, ஒரிஸா மாநில அரிசன-மலைவாழ் மக்கள் நலத் துறை அமைச்சர் திரு இராமச்சந்திரா உலாகா 1-8-80-ல் சந்தித்துப் பேசினார்.



சென்னையிலுள்ள சோவியத் நாட்டின் துணைத் தூதுவர் திரு. **மாக்கிம் பெல்காவ்** மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் திரு. நெடுஞ்செழியன் அவர்களை 25-7-80ல், தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.





கோவை மாவட்டத்தில், கிணத்துக் கடவில் ஏழை மக்களுக்கு வீட்டு மனைப்பட்டாவை, மாண்புமிகு, செய்தி- அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் வழங்கினார்.

மேகாலயா மாநிலத்தின், நல்வாழ்வு, செய்தி-மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் திரு. டி. டி. லப்பான், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், டாக்டர் திரு. எச். வி. ஹண்டே அவர்களை 22-7-80ல் சந்தித்தார்.



# உயிரைக் குடிக்கும் "மது"

**மோ**சமான சாலை நிலைமைகள், மோசமான தட்பவெப்ப நிலைமை, களைப்பு இவை உண்மையில் விபத்துக்களை ஏற்படுத்தி விடுவதில்லை. சாராய போதையுடன் சேரும்பொழுது தான, இந்த நிலைமைகள் விபத்துக்குக் காரணமாகின்றன.

ஒரு கர்ப்பிணிப்பெண் அடிக்கடி மது அருந்தினால் அவள் கர்ப்பத்தில் இருக்கும் சிசு பாதிக்கப்படுகிறது. அடிக்கடி மதுவருந்தும் பெண் ஊனமுள்ள குழந்தையைப் பெறுவது சகஜம். மூளைக்கோளாறு, அரைகுறை வளர்ச்சி, எலும்புந்தோலுமான உருவம், இதயக்கோளாறு, மந்தப்போக்கு உடைய குழந்தைகளைப் பெறுவதற்குச் சாதாரண அளவு மதுப்பழக்கமே போதும். ஆராய்ச்சிகளை நடத்திய மருத்துவ நிபுணர்கள் கர்ப்பம் தரித்திருக்கும் காலத்தில் பெண்கள் குடிக்கவே கூடாது என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். மனித சமுதாயத்தின் பொது எதிரி மது!

வேகமாகக் குடிப்பது, அளவுக்கு மிஞ்சிக் குடிப்பது இரண்டும் பெரும் நோய்களையோ, உடற்கோளாறுகளையோ, மரணத்தையோ நிச்சயம் ஏற்படுத்தும். விஸ்கியா? ஒயினா? பீரா? அல்லது வேறு பானமா? என்பது முக்கியம் அல்ல; எந்த அளவு சாராயச்சத்து இரத்தத்தில் கலக்கிறது என்பதைப் பொறுத்தே கேடு விளைகிறது.

ஒருவரின் உடல் பருமன், எடை இவைகளைப் பொறுத்தும் சாராயத்தீமை வேறுபடுகிறது. 100 பவுண்டு எடை உடைய ஒரு மனிதன் 200 பவுண்டு எடையுள்ள மனிதனை விட பாதிப்பங்குதான் சாராயப் பாதிப்பைத் தாங்க முடியும். கணவனின் எடையில் பாதியுள்ள பெண் அவனுக்குச் சமமாகக் குடிக்கும்போது அதிக அபாயத்திற்கு ஆளாகிறாள். சாராயத்துக்கு மயக்கம், வாந்தி, குமட்டல் ஏற்படுத்தும் குணம் உண்டு.

தெளிவாகச் சிந்திக்கும் திறனை அது பாதிக்கிறது. நேரடியாக இரத்தத்தில் கலந்து மூளையைப் பாதிக்கிறது. இது நிரந்தரக் குடிகாரர்களின் மூளைத்திறன் வெகுவாகப் பாதிக்கிறது. ஒரு மனிதனின் உடல் ஒரு மணி நேரத்தில் ஒரு அவுன்சில் மூன்றில் ஒரு பங்கு சாராயத்தைத்தான் சமாளித்து கழிவுப் பொருளாக வெளியே தள்ள முடியும். உடலின் இந்தத் திறமையைக் கூட்டிக்கொள்ள சாத்தியமே இல்லை. இத்தகவலை சமீபத்தில் 'மது' சம்பந்தப்பட்ட பிரச்னைகள் குறித்து டெல்லியில் நடைபெற்ற மாநாட்டில் அமெரிக்காவிலுள்ள போக்குவரத்துப்பாதுகாப்பு உறுப்பினர் வில்லியம் பிளைமேட் கூறினார்.

**'இந்துஸ்தான் டைம்ஸ்' (புதுடெல்லி)**
**2—7—1980.**




அரசின் பல்வேறு துறைகளில் பணியாற்றுகின்ற அரசு அலுவலர்களாகிய நீங்கள், உங்கள் அலுவல்களின் காரணமாகப் பல்வேறு சூழ்நிலைகளில் பலதரப்பட்ட மக்களைச் சந்தித்திருக்கக்கூடும்; பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கு பெற்றிருக்கக்கூடும். இவற்றிலிருந்து பல சுவையான சம்பவங்களையும், செய்திகளையும் உங்கள் அனுபவத்தில் கண்டும் கேட்டுமிருப்பீர்கள். இவற்றைத் தொகுத்து *'தமிழரசு'* இதழில் வெளியிடக் கருதுகிறோம்.

அவ்வாறு நீங்கள் கண்ட—கேட்ட

1. நகைச்சுவை சம்பவங்கள்
2. கருத்தாழமிக்க உரையாடல்கள்
3. சுவையான செய்திகள்

முதலானவற்றைச் சுருக்கமாக எழுதியனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

வெளியிடத் தகுதியானவை தமிழரசில் இடம் பெறும்.

வெளியிடுவதற்கு அனுப்பப்படுகின்ற செய்திகள் அனைத்தும், உண்மையானவையாக இருத்தல் வேண்டும்; கற்பனை கூடாது. வேறு எந்த ஏடுகளிலோ, இதழ்களிலோ வெளிவராதவையாக இருக்க வேண்டும்,

அனுப்புபவர், தன்னுடைய முழு முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

எழுத்தோவியங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

**'ஆசிரியர்,**
**'தமிழரசு'**
**அரசினர் தோட்டம்,**
**சென்னை-600 002.**

**தமிழ் வளர்த்த பெரியார்கள் :**

# சதாவதானி செய்குத்தம்பி பாவலர்

— எஸ்.எஸ். சுந்தரம்

1907–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ஆம் நாள், சென்னை விக்டோரியா மண்டபத்தை நோக்கி மக்கள் பெருமளவில் சென்று கொண்டிருந்தார்கள்.

அங்கே நடன நிகழ்ச்சி நடைபெறவில்லை. நாடகக் காட்சியும் நடைபெறவில்லை; அப்படி இருந்தும் மக்கள் கூட்டம் மண்டபத்தின் உள்ளே திரண்டு காணப்பட்டது. காரணம் என்ன? அருந்தமிழ்ப் புலமை மிக்க பாவலர் ஒருவரின் சதாவதான நிகழ்ச்சி நடைபெற்றதுதான் காரணம்.

தமிழ்த் தென்றல் திரு. வி. கல்யாணசுந்தரனார், ரசிகமணி டி.கே. சிதம்பரநாதனார், சுதேசமித்திரனின் அந்நாளைய ஆசிரியர் சுப்ரமணிய ஐயர் ஆகிய பெருமக்கள் நிகழ்ச்சிக்கு வருகை புரிந்திருந்தார்கள். அவர்கள் நிகழ்ச்சியில் பங்கு பெறுவதற்கு வரவில்லை. அவர்களும் சதாவதான நிகழ்ச்சியைக் காண்பதற்குச் சிறப்பு விருந்தினராக வந்திருந்தார்கள்.


முப்பது வயது நிரம்பிய முஸ்லீம் இனத்தைச் சேர்ந்த பாவலர் மேடையில் நின்றவாறு, அவையோரின் வினாக்களுக்கு விடையிறுத்துக் கொண்டிருந்தார்.

பார்வையாளர்களில் ஒருவர்- வெண்பா ஒன்றின் ஈற்றடியைக் கொடுத்து அதன் முந்திய மூன்று வரிகளை முடிக்குமாறு பாவலரிடம் கேட்டார்.

மற்றொருவர், 5 ஸ்தான எண்கள் சிலவற்றைக் கொடுத்து - கூட்டுத் தொகை என்ன என்பதை மனக் கணக்கில் கூறுமாறு கேட்டார்.

இவ்வாறு பல்வேறு வகையில் அந்தப்பாவலரிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டன. அனைத்திற்கும் தக்க வகையிலே விடையிறுத்து தாம் ஒரு மேதை என்பதை அந்தப் பாவலர் மெய்ப்பித்துக் கொண்டிருந்தார்.

அவையினர் மகிழ்ந்து துள்ளினர். கர ஓசை எழுப்பினர்; பாராட்டுக்களை வழங்கினர். எட்டுவிதமான வித்தைகளைச் செய்வோர் அட்டாவதானி என்றும் பத்துவித வித்தைகளைச் செய்வோர் தசாவதானி என்றும் அழைக்கப்படுவது உண்டு. பாவலர் ஏறக்குறைய நூறு வகையான வித்தைகளை ஏக காலத்தில் செய்ததால் சதாவதானி என்று அவருக்குப் பட்டம் வழங்கினர் அவையினர். மகாமதி என்றும் அவரைப் புகழ்ந்தனர்.



பட்டங்கள் பெற்ற அந்தப் பாவலர் தான்-நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த செய்குதம்பிப் பாவலர் ஆவார்!

1874 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 31 ஆம் நாளில் நாஞ்சில் மாவட்டத்தில் கோட்டாறு என்னும் கிராமத்தில் நெசவாளர் குடும்பத்தில் தோன்றியவர் செய்குதம்பி. இளமையில் அரபுமொழி கற்ற அவர், தமது எட்டாவது வயதில் தான் பள்ளியில் சேர்க்கப்பெற்றார். ஒரே ஆண்டில் நான்கு வகுப்புக்களிலும் தேர்ச்சி பெற்றார். மேலும் கற்க விரும்பிய போது-குடும்பத்தின் பொருளாதாரச் சூழ்நிலை, அவரது கல்விக்கு முட்டுக்கட்டை போட்டது -முற்றுப்புள்ளி வைத்தது. அதனால், தந்தையுடன் நெசவுத் தொழிலில் ஈடுபட்டார்.

என்றாலும் தமிழ் ஆர்வம் அவரின் இதயத்துக்குள்ளே அடிக்கடி எழுந்தது. விடாய் நிலை ஒன்று அவரை அவ்வப்போது அலைக்கழித்தது. அதன் விளைவாக, அருந்தமிழ்க் கல்வியைத் தனிப்பட்ட முறையில் சங்கர நாராயண அண்ணாவி என்னும் ஆசிரியரிடம் கற்றார். காவியங்கள் - புராணங்கள் - இதிகாசங்கள் ஆகியவற்றை ஆர்வத்துடன் பயின்றார்; முயற்சி மெய்வருத்தக் கூலி தந்தது; சாதாரண செய்குதம்பியைப் பாவலர் செய்குதம்பி யாக்கியது.

அவரது புலமை அவருக்குப் பெரும் புகழைச் சேர்த்தது. சீறாப் புராணத்திற்கு அவர் ஆற்றிய விரிவுரை முஸ்லீம் வட்டாரத்தில் அவரது புகழை உயர்த்தியது. தொண்டி என்னும் ஊரில் அவர் ஆற்றிய சீறாப்புராண விரிவுரையைக் கேட்டு அகமகிழ்ந்த முஸ்லீம் பெருமக்கள் 'கலைக் கடல்' என்னும் பட்டத்தை அவருக்கு வழங்கினார்கள். திண்டுக்கல் மக்கள் அல்லாமா (டாக்டர்) என்னும் பட்டத்தைச் சூட்டி மகிழ்ந்தார்கள்.

கம்பனின் காவியத்திலே மகிழ்ந்து திளைத்தவர் பாவலர். அதிலே மிகுந்த ஈடுபாடுகொண்டு அவ்வப்போது கம்ப ராமாயணத்திற்கு விரிவுரை ஆற்றியிருக்கிறார். அதனால் பலர் அவரை 'இராமாயண சாகிப்' என்று அழைத்தார்கள்.

அந்நாளில் வள்ளலாரின் பாக்கள் தமிழ்நாட்டில் -தமிழ்ப்பெரு மக்களிடத்தில் ஒரு புத்துணர்வை ஏற்படுத்தியிருந்தது. அதன் காரணமாக வள்ளலாரின் பா, அருட்பா எனப் பலராலும் சிறப்பித்துக் கூறப்பட்டது. எதற்கும் எதிர்ப்பு இருப்பது இந்த உலகத்தில் தொன்று தொட்டுத் தொடர்ந்து வரும் பழக்கமல்லவா? அதனை மெய்ப்பிக்கும் வகையில் ஒரு சிலர் அருட்பாவை, மருட்பா என்று குறிப்பிடத் தொடங்கினார்கள். அவர்களில் யாழ்ப்பாணம் நா. கதிரைவேற் பிள்ளை என்னும் அறிஞரும் ஒருவர். அவரது கூற்றுக்களைத் தக்க சான்றுகளுடன், வாதிட்டுத் தவிடு பொடியாக்கி வெற்றிப் பரணி பாடியவர் பாவலர்.

அருட்பா வெற்றித் திருவிழா காஞ்சி மாநகரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நகரத்து மக்கள் எல்லாம் அந்த விழாவில் பேரின் பத்துடன் பங்கு பெற்றார்கள். பாவலரின் பேச்சாற்றலை வியந்துபாராட்டி 'தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்' என்னும் பட்டத்தைச் சூட்டினார்கள் மக்கள். பாவலரை யானை மீத மர்த்தி நகர்வலம் வரச்செய்து காஞ்சிக் கோயிலின் பூரண கும்ப மரியாதையையும் வழங்கினார்கள்.

இலக்கியங்களில் மிகவும் ஈடுபட்டிருந்த பாவலரை இந்திய நாட்டின் விடுதலை இயக்கம் கவர்ந்தது. அதனால் செந்தமிழ் முழக்கத்தோடு நாட்டு விடுதலை முழக்கத்தையும் செய்துவந்தார். அரசியல் நாட்டம் கொண்டு அரசியல் அரங்குகளில் கோடை இடி யென முழக்கமிட்டார். அந்நிய நாட்டுத் துணிகளை மக்கள் அணியக்கூடாது என்று அவர் ஆணித்தரமாக முழக்கமிட்டதைக் கேட்டு, உணர்ச்சி பெற்று, அந்தத் துணிகளைத் தீயினுக்கு இரையாக்கிய மக்கள் மிகப்பலர்.

தூய கதராடை அணிந்து, தொண்டுள்ளம் கொண்டு, அண்ணல் காந்தி யடிகளின் அருங் கொள்கையை முழங்குவதற்காக நாகர்கோயில் நகர் மன்றத் திடலுக்குப் பாவலர் வருகிறார் என்ற செய்தி அறிந்தால் -அங்கே நகரமே திரண்டு நிற்கும் அவரது உரை கேட்க! அவரது சொற்பொழிவில் மனமகிழ்ந்த நாஞ்சில் மக்கள் 'தமிழ்ப் பெரும் புலவர்' என்னும் பட்டத்தை அவருக்கு வழங்கினார்கள்.

கோட்டாற்றில் சுயமரியாதைச் சங்கம் என்ற ஓர் அமைப்பைப் பகுத்தறிவாளர் சிலர் துவக்கிய பொழுது, அதற்கு ஆதரவாக இருந்தார் பாவலர். ஒருமுறை அறிஞர் அண்ணா அவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராகச் சென்றார் பாவலர்! பலர் அண்ணா அவர்களைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல், அவரைக் குறித்து துவேஷப் பிரச்சாரம் செய்துவந்த காலத்தில் அவர் ஓர் அறிஞர் என்பதை உணர்ந்து அவருக்கு ஆதரவு தெரிவித்தார் பாவலர்.

பாவலர் பேச்சாளர் மட்டுமல்லர். நூலாசிரியரும் ஆவார். திருநாகூர் திருவந்தாதி, திருக் கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி, கோட்டாற்றுப் பிள்ளைத் தமிழ் -கலவத்து நாயகம்- இன்னிசைப் பாமாலை - சம்சுதீன் கோவை - நபிநாயக மான்மிய மஞ்சரி-அழகப்பர் கோவை-சசிவேத்தமன் கோவை முதலிய கவிதை நூல்களையும் தேவலோகத்து கிரிமினல் கேசு, வேதாந்த விவகார கிரிமினல் கேசு- போன்ற உரைநடை நூல்களையும் அவர் படைத்தார்.

தமது முன்னோர்கள் உருவாக்கிய மெய்ஞ்ஞானத் திரட்டு என்னும் பனுவலைப் பதிப்பித்து வெளியிட்டார்.

யதார்த்தவாதி, இசுலாமிய மித்திரன் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகவும் பணியாற்றிய பாவலர் அவர்கள் 1950 ஆம் ஆண்டு பிப்ரவரி பதின்மூன்றாம் நாளன்று தமிழையும்-தமிழ்நாட்டையும்- தமிழ் மக்களையும் பிரிந்து மறைவு எய்தினார். அவரது மறைவு தமிழகத்துக்கு அதிர்ச்சியை அளித்தது.

ஒரும் அவதானம்
ஒருநூறும் செய்திந்தப்
பாரில் புகழ்படைத்த
பண்டிதனை - சீரிய
செந்தமிழ்ச் செல்வனை
செய்குதம்பி பாவலரை
எந்தநாள் காண்போம் இனி.

என்று உள்ளம் உருகப் பாடினார் கவிமணி. அவரது கவிதை வரிகள் உண்மையாகி விட்டன. செய்குதம்பிப் பாவலரை நாம் இனிமேல் காண முடியாது. ஆனால் ஒவ்வொரு முறையும் அவரை நினைக்கும் போதெல்லாம் அவர் நம்மிடையே மீண்டும் பிறக்கிறார் என்பதை மறுக்க முடியுமோ?

## நான் சாகும்போது.....

''நான் சினிமாவில் நடித்து ஏராளமாகப் பணம் சம்பாதிக்கும் காரணத்தால் என்னை ஒரு பணக்காரன் என்றே எல்லோரும் கருதுகின்றனர். ஆம்; உண்மையில் நான் இப்பொழுது பணக்காரன்தான்; ஆனால் நான் இறக்கும்போது பணக்காரனாகவே இறக்கமாட்டேன்.

''என்னிடம் வந்து சேரும் பணத்துக்கும் மற்றப் பணக்காரர்களின் பணத்துக்கும் வித்தியாசமுண்டு; என் பணம் ஏழைக்கு உதவும். பணக்காரனிடமுள்ள பணம் ஏழையை உறிஞ்சத் தான் உதவும்''.

கலைவாணர்.

(1946-ல் ஆலந்தூரில் ஒரு பொதுக் கூட்டத்தில்)

# விளைந்ததைக் காத்து விரயத்தைத் தவிர்ப்போம்!



விஞ்ஞான விவசாயத்தின் வழியாக உற்பத்தியை நம் விவசாயிகள் ஒவ்வொரு பயிரிலும் அதிகரித்துள்ளனர். உற்பத்திக்கு உதவியாக இருக்கும் நல்விதை, உள் உரம், உட்காப்பு இந்த மூன்றையும் நல்லமுறையில் கடைப்பிடிப்பதனால் உற்பத்தி மிகவும் அதிகரித்துள்ளது.

ஆனால், உற்பத்தியான பொருட்களுக்கு எதிர்பார்த்த அளவு விலை கிடைக்காததனால் பெரும்பாலோர் ஊக்கம் இழந்துவிட்டனர். கிடைத்த மகசூலுக்கு எதிர்பார்த்த வருமானம் கிடைக்க, பொது மார்க்கட்டில் நல்ல விலை எப்பொழுது கிடைக்கிறதென்பதை அறிந்து, அந்தச் சமயத்தில் விற்பனை செய்து அதிக இலாபம் அடைவது ஒரு சிறந்த வழி.

அப்படியென்றால் கிடைத்த தானியங்களை நல்ல முறையில் சேமித்து வைக்கவேண்டியது மிகவும் அவசியம். தானியங்களைப் பூச்சிகள், எலி முதலியன அதிக அளவில் சேதப் படுத்துகின்றன. இவைகளினின்றும் அதைக் காப்பாற்றவேண்டும். சேமித்திருக்கும் கிடங்கியும் நல்ல முறையில் எலிகள் புகாவண்ணம் காற்றோட்டமுள்ளதாகவும் அமையவேண்டும். அதற்காக தற்சமயம் புதிதாகக் கட்டப்படும் கிடங்கிகள் யாவும் எலிகள் புகா வண்ணம் செவ்வையாக அமைந்திருக்கிறது.

ஆராய்ச்சி பூர்வமான முறையில் கண்டுள்ள மருந்துகளைத் தகுந்த முறையில் பயன்படுத்தினால் தானிய சேதத்தைத் தவிர்க்கலாம். மருந்துகளுக்காகச் செலவிடும் பணத்தைக் காட்டிலும் அதனால் கிடைக்கும் நன்மைகள் பன்மடங்களாகும்.

கீழ்க்காணும் முறைகளைச் சேமிக்குமுன் கையாள்வதால் தானிய சேதத்தைத் தவிர்க்கலாம்.

1. சேமிப்பறை குதிர்கள் துப்புரவாக இருத்தல் வேண்டும்.

2. தானியத்தைச் சேமிக்கு முன்பாக நன்றாகக் காய வைத்து, பதர் உடைத்த தானியம், கல், மண், உமி, போன்றவை இல்லாமல் தூற்றி சுத்தம் செய்து பின் சேமிக்க வேண்டும்.

3. கோணிப்பைகளில் சேமித்தால்-சுத்தம் செய்து, கிழிந்திருந்தால் தைத்து வெயில் காய வைத்து பின் சேமிக்கவும்.

4. மூட்டைகளைத் தரையில் அடுக்காமல் பலகை, மூங்கில் பாய்கள் மேலோ உமி (அல்லது) மணல்பரப்பின் மீதோ அடுக்க வேண்டும். சுவரில் படாதவாறு ஒரு அடி தூரமாவது இடைவெளி விட்டு அடுக்கவேண்டும். இதனால் தரை, சுவரிலுள்ள ஈரம் தானியத்தைத் தாக்காதவாறு பாதுகாக்கும்.

5. பூச்சிகளால் பாதிக்கப்பட்ட தானியங்களைச் சுத்தமான தானியங்களுடன் சேமிக்கக் கூடாது.

6. மாலதியான் 50 சதவீதம் மருந்தை 1 பாகத்திற்கு 100 பாகம் தண்ணீர்என்ற விகிதத்தில் கலந்து மூட்டைகள், தரை, சுவர், குதிர்

ச. மாசிலாமணி,
துணை வேளாண்மை இயக்குநர்,
கடலூர்.







களில் மேற்குறிப்பிட்ட வாறு தெளிப்பதால் பூச்சிகள் தடுக்கப்படுகின்றன.

7. கோடைக், காலங்களில் சேமிப்பறைகளில் நல்ல காற்றோட்டம் இருக்கும் படி செய்தல் வேண்டும்.

8. மழைக் காலங்களில் அறை வாசல்கள் காற்றுப் போக்கிகள் ஆகியவற்றை நன்கு மூடிவைக்க வேண்டும்.

மாலதியான் தெளித்தும் சில நேரங்களில் மறைத்து இருக்கும் புழு பூச்சிகளைக் கட்டுப்படுத்த எதிலின் டைபுரோடைடு (இடிபிகுமிழ்) மருந்து பயன்படுத்தலாம். இம்மருந்து 3, 6, 10, 15, 30 மில்லி அளவில் கண்ணாடிக் குமிழ்களில் கிடைக்கும். குமிழ்களை உடைத்து உபயோகப்படுத்தும்போது திரவமாக உள்ள இடிபி ஆவி ரூபமாக வெளிப்படும். புழு, பூச்சிகளின் எல்லா நிலைகளையும் அழிக்கிறது.

தானிய சேமிப்பு உறையைக் காற்றுப்புகாவண்ணம் ஏற்பாடு செய்து கொண்டு மேற்புறம் மட்டும் திறந்து வைத்தல் வேண்டும். ஒரு குவிண்டாலுக்கு 5 மில்லி என்ற அளவில் குமிழைக் குச்சியில் கட்டி, உடைத்துஉடனேஉள்ளே செருகியதும் உறையின் மேல் புறத்தைக் காற்றுப்புகாமல் ஒன்றாக மூடிவிடுதல் அவசியம். பின் ஏழு நாட்கள் வரை தானியத்தைக் காற்று புகாமல் காப்பது அவசியம். உபயோகிக்கும் முன் காற்றாட விட்டு இடிபி வாசனை இல்லாதிருக்கச் செய்தல் அவசியம்.

இடிபியை மிகுந்த கவனத்துடன் உபயோகப்படுத்துதல் வேண்டும். மாவுப் பொருட்களுக்கோ (அல்லது) நிலக்கடலை போன்ற எண்ணெய் வித்துக்களுக்கோ ஈரம் நிறைந்த தானியத்திற்கோ உபயோகப்படுத்தக் கூடாது.

உணவுக் களஞ்சியம் எலிகட்கு ஒரு நல்ல வேட்டைக் காடாகும். ஒரு குவிண்டால் தானியத்தை ஒரு வருடத்தில் 4 எலிகள் தின்று தீர்க்கின்றன. எலிகள் தந்திரக் குணம் கொண்டவை. எலித் தொல்லையைத் தவிர்க்க வளைகளிலும் பொந்துகளிலும் நீர் நிரப்புவது, புகைபிடிப்பது, விஷம் வைத்துக் கொல்வது போன்ற பல வழிகள் உள்ளன.

எலியைக் கட்டுப்படுத்துவது அவ்வளவு சுலபமான காரியமல்ல. இதற்குச் சமூக மட்டத்தில் கூட்டு முயற்சிகள் தேவை. நாட்டில் பல பாகங்களிலும் எலி ஒழிப்பு இயக்கங்கள் நடத்தப்படுகின்றன. ஒருங்கிணைந்த இம் முயற்சிகளால் நல்ல பயன் கிடைத்துள்ளன. தொடர்ந்தாற்போல் இயக்கங்களை நடத்துவது எலியை அடியோடு ஒழிக்க உதவும்.

வயல் வெளிகளிலுள்ள எலிகளை செல்பாஸ் மாத்திரைகளை ஒவ்வொரு வளையிலும் இட்டு ஈரமண்ணால் நன்கு பூசி விடவும். மறுநாள் திறந்து இருந்தால் மீண்டும் மாத்திரைகளை இட்டு வளைகளை மூடிவிடவும். அல்லது 2.5 கிராம் போரேட் மருந்தை 10 லிட்டர் நீரில் குச்சியால் கலந்து வளையில் ஊற்றி ஈரமண்ணால் மூடவும். அல்லது துத்தநாக பாஷாணம் (சிங்கபாஸ்பேட்) இம்மருந்தை 1 பங்கு மருந்து 49 பங்கு பொரி அல்லது எலி விரும்பிச் சாப்பிடும் ஆகாரத்துடன் சிறிது நாம் உண்ணும் எண்ணெய்யுடன் கலந்து வைக்கவும். முதலில் விஷம் கலக்காத உணவை 2 அல்லது 3 நாட்களுக்கு வைக்கவும்.

வீட்டிலுள்ள எலிகளைக் கட்டுப்படுத்த சிறந்த மருந்து ''ஆண்டிகோயாகுலண்ட்'' (அரிசி, கம்பு, சோளம்) ஏதாவது ஒன்றுடன் 15 கிராம் சர்க்கரை அல்லது வெல்லத்தையும் 10 கிராம் சாப்பாட்டு எண்ணெய்யும் விட்டு நன்றாகக் கலந்து பல இடங்களில் வைக்க வேண்டும். இதைத் தொடர்ந்து ஒரு வாரம் வரை வைத்தால் எலிகள் தின்று அழிகின்றன.

உற்பத்தியான ஒவ்வொரு தானிய மணியையும் காப்பது ஒவ்வொரு குடிமகனின் கடமை ஆகும். தேசீய நலத்தில் அக்கறை கொண்டு மக்களுக்காக இந்த உணவைப் பாதுகாத்தல் வேண்டும். விஞ்ஞான ரீதியில் பெருமளவு உணவு சேதத்தைத் தடுக்க முடியும். ஒவ்வொரு தானியமும் விலை மதிப்பற்றது. விளைந்ததைக் காத்து,விரயத்தைக் காப்பதும் விளைவிப்பதற்குச் சமமே!

அரசாங்கத்தாரால் கொடுக்கும் சலுகைகளையும் பயன்படுத்தி தானியங்களைச் சேமிக்கவும் தகரத்தினால் செய்த குதிர்கள் மான்ய விலையில் கொடுக்கப்படுகின்றன. எலிக் கொல்லி மருந்துகள் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. பயிற்சி முகாம்கள் இலவசமாக நடத்தப்படுகின்றன. இவைகளைப் பயன்படுத்தி சேமித்து தானியத்தைப் பாதுகாத்து சேதத்தைத் தவிர்க்கலாம்!

**மாணவர் பக்கம்:**

# சிறுதுளி பெருவெள்ளம்

சொல்லழகன்



தன் மேஜைமீதிருந்த அழைப்பு மணியை அழுத்தினார் தலைமையாசிரியர் கோகுலகிருஷ்ணன்.

அழைப்பு மணியின் சத்தம் கேட்டதும், ஆபீஸ் ரூமின் பக்கத்தில் இருந்த வேப்பமரத்தினடியில் அமர்ந்து கொண்டு வெற்றிலைப் பாக்கு போடத்தயாராகிக் கொண்டிருந்த பியூன் கோபால் தலைமை ஆசிரியரின் முன் வேகமாகச் சென்று நின்றான்.

''ஏம்பா கோபால்! இந்த சர்க்குலரை எடுத்துக் கிட்டுப்போய் ஒவ்வொரு வகுப்பு ஆசிரியர்கிட்டேயும் கொடுத்து, பசங்களுக்கு சர்குலரைப் படிச்சுக் காட்டச் சொல்லிட்டு, கையெழுத்து வாங்கிகிட்டு வந்துடு... சீக்கிரமா போ......ம்.....''

தலைமை ஆசிரியர் பியூன் கோபாலிடம் சர்க்குலரைக் கொடுத்து அவசரப்படுத்தினார்.

வாயில் இருந்த பாக்கு எச்சிலை விழுங்கிவிட்டு, ''சரி சார்'' என்றவாறே, ஒவ்வொரு வகுப்பறைக்கும் விஜயம் செய்தான் கோபால்.

எல்லா வகுப்பறைகளிலும் ஆசிரியர்கள் சர்குலரைப் படித்துக்காட்டிவிட்டு, மாணவர்களிடம் விளக்கம் கூறிக் கொண்டிருந்தனர்.

''அதாவது சர்க்குலர்லே என்ன எழுதியிருக்குன்னு கேட்டீங்கன்னா, இந்த மாசம் கட்ட வேண்டிய ஜனவரி ஃபீஸை கட்டாதவங்கல்லாம், இந்த மாசம் முப்பதாம் தேதிக்குள்ளே கட்டிடணும். அப்படி கட்டத்தவறினால் வருகைப் பதிவேடு புத்தகத்திலிருந்து உங்க பெயரை நீக்கிடுவாங்க. அப்புறம் நீங்க ஃபீஸையும் கட்டி அதோட அபராதமும் கட்டினால்தான் திரும்பவும் உங்க பெயரை வருகைப் பதிவேடு புத்தகத்துலே சேர்ப்பாங்க. புரிஞ்சுதா? அதனாலே ஜனவரி ஃபீஸை முப்பதாம் தேதிக்குள்ளே கட்டிடுங்க என்ன?''

ஆசிரியரின் விளக்கத்திற்கு ஃபீஸ் கட்டாத மாணவர்கள் சிலர் மட்டும் தலையசைத்தனர்.

அன்று மாலை தலைமை ஆசிரியர் கோகுலகிருஷ்ணன் மன அமைதியின்றி வீடு நோக்கி நடந்தார். அவரின் சிந்தனையெல்லாம் ஜனவரி ஃபீஸைப் பற்றியதே!

தலைமையாசிரியர் கோகுலகிருஷ்ணனுக்கு ஒரு மகனும், இரண்டு மகளும் உள்ளனர். மூவரும் அவர் வேலை செய்யும் பள்ளியிலேயே படிக்கின்றனர்.

தலைமையாசிரியர் தனது சம்பளத்தில் மட்டுமே குடும்பம் நடத்த வேண்டியுள்ளது. வேறு வகையில் வருவாய் வர வாய்ப்பில்லை. எனவே, அவரிடம் வறுமை கொஞ்சம் விளையாடத் தொடங்கியது!

மூன்று பிள்ளைகளுக்கும் ஃபீஸ் கட்ட வேண்டும் என்றால் நாற்பது ரூபாயாவது தேவை. ஃபீஸ் கட்ட வேண்டிய கடைசி தேதியும் நெருங்கிவிட்டது. இன்னும் இரண்டு நாட்களுக்குள் கட்டவில்லை என்றால் வருகைப் பதிவேட்டிலிருந்து பெயர்களை நீக்க வேண்டும்! அந்த சர்குலரைத் தானே கையெழுத்திட்டு .....கொடுமை! 'அப்படி நீக்கிவிட்டால் ஐநூறு மாணவர்கள் முன்பும் ஐம்பது ஆசிரியர்கள் முன்பும் தலை குனியவேண்டியது தான்....''

இப்படி ஒரு இக்கட்டான நிலை தலைமையாசிரியருக்கு எப்பொழுதுமே ஏற்பட்டதில்லை அவரின் மனம் எதற்கோ வெட்கப்பட்டது. வேதனைப்பட்டது.


இம்மாதம் வாங்கிய சம்பளத்தில் கொஞ்சம் வாங்கிய கடனைக் கொடுத்தார். மீதியில் அரிசி விறகு, வாடகை, பால், மளிகை, சலவை -இந்த பாக்கிகளையெல்லாம் அடைத்தார். மீதி.... ஒரு வார இதழுக்குச் சந்தா...

முடிவில் ஃபீஸ் கட்டப்பணம் இல்லை. என்ன செய்வார்? யாரிடமாவது கேட்டாலும் தருவார்கள்; அவரைப் பொறுத்தவரை யாருமே இல்லை என்று கூற மாட்டார்கள். நல்ல மானஸ்தர். பெருந்தன்மை உள்ளவர். ஆனால் கடன் வாங்குவதென்றால் அவருக்கு அவமானம்.

வேதனையோடு வீட்டிற்கு வந்த தலைமையாசிரியர் சோர்வுடனும், சிந்தனையுடனும் கட்டிலில் சாய்ந்தார். ''அப்பா.. அப்பா! எங்க மூனு பேருக்கும் பீஸ்ஃ கட்டிட்டீங்களாப்பா?''

பள்ளியிலிருந்து வந்தவுடன் மூன்று பிள்ளைகளும் தலைமையாசிரியரான தந்தையைக் கேள்விகளால் துளைத்தனர்.

குழந்தைகளிடம் உண்மையை எப்படிச் சொல்லி புரிய வைப்பதென்றே புரியாமல் குழம்பினார் அவர். கொஞ்சம் எரிச்சலோட, ''சனியன்களா, தூரப் போங்க... போய்ப் படியுங்க.. உங்களுக்கு ஏன் இந்த வம்பெல்லாம்?''முணகினார் கோகுலகிருஷ்ணன். எல்லாம் என்னோட தலையெழுத்து.




## விந்தைச் செய்திகள்

''வகுப்புலே வாத்தியாரும், பசங்களும் எங்களை அன்றாடம் கேக்கறாங்களேப்பா! நாங்க என்னன்னு சொல்றதாம்?''-பிள்ளைகள் மீண்டும் கேட்டுவிட்டு சமையலறைக்குள் நுழைந்தனர் அம்மாவிடம் கேட்க.

''அம்மா, அப்பா ஏம்மா ஒரு மாதிரியா பேசறார்? அவருக்குக் கோவம்ன்னா, அதை எங்க பேர்லே ஏம்மா காட்டிக்கணும்?'' அம்மாவின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு செல்லமாக கௌசல்யா,

''சரி சரி. என் கோவத்தையும் கிளறாதீங்க. கம்முனு இருங்க சொல்றேன். உங்களுக்கு ஃபீஸ் கட்டறதுக்குப் பணம் இல்லாமதான் வேதனையா இருக்காரு. உங்க பேர்ல கோவம் இல்லே. நீங்க போய் நல்லா படியுங்க. அவர் எப்படியாச்சும் ஃபீஸ் கட்டிடுவாரு... கட்டித்தானே ஆகணும். பிள்ளைகளைச் சமாதானப் படுத்தினாள் தாய்.

''அம்மா, இதைப்பற்றி எங்க கிட்டே முதல்லேயே ஏன் சொல்லியிருக்கக் கூடாது? ஃபீஸ் கட்ட பணம் நாங்க தர்றோம்மா...'' என்று கூறியதும் தாய் ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

மகளின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த கோகுலகிருஷ்ணனும் குழம்பினார்.

'மூன்று பேருக்கும் ஃபீஸ் கட்டும் அளவிற்குப் பிள்ளைகளிடம் எப்படிப் பணம் இருக்க முடியும்?

புரியாத புதிரை மூத்த மகள் விளக்கினாள்.

தாயும் தந்தையும் மகளைப்பின் தொடர்ந்தபோது, கௌசல்யா கூறத் தொடங்கினாள்.

''நாங்க மூன்று பேருமா சேர்ந்து போஸ்ட்டாபீஸ் பாஸ் புக்குலே நாற்பது ரூபா போட்டு வச்சிருக்கோம்மா, நம்ம வீட்டுக்குச் சித்தப்பாவும், சித்தியும் வரும்போது உங்களுக்குத்தெரியாம எங்களுக்கு அப்பப்ப..ஏதாவது வாங்கித்தின்னுங்கன்னு பணம் கொடுத்திட்டுப் போவாங்கப்பா.

''எங்களுக்கு என்ன செலவு இருக்கு? அதை அப்படியே வீண் செலவு செய்யாம, போஸ்டாபீஸ்லே பாஸ்புக் துவக்கி சேமிச்சோம்பா. நாளைக்கே அந்தப் பணத்தை வாங்கித் தரேம்பா.. நாளைக்கே ஜனவரி ஃபீஸ் கட்டிடலாம்பா....''

தன் பிள்ளைகளின் சேமிப்பைக் கண்டதும் தலைமையாசிரியர் கோகுலகிருஷ்ணனின் கண்கள் பனித்தன. 'நமக்கில்லாத சேமிப்புப் பழக்கம் நம் குழந்தைகளுக்காவது இருக்கிறதே!

தாய், தன் பிள்ளைச் செல்வங்களை மகிழ்ச்சி பொங்கக் கட்டித் தழுவினாள்.

மறுநாள் தலைமையாசிரியர் ஒவ்வொரு வகுப்பாகச் சென்று மாணவர்களுக்குக் கற்றுத்தந்த கட்டாயப் பாடம் வேறு எதைப் பற்றியதும் அல்ல. சேமிப்பைப் பற்றியது தான்!

# அறிவுச்சுடர்



* எகிப்தில் உள்ள பிரமிட் கோபுரங்கள். கிஸே என்னுமிடத்தில் உள்ள பிரமிட்டின் உயரம் 482 அடி.

* எபிஸல்ஸ் என்ற காட்டுத் தேவதைக்கான கோபுரம். இது ஆசியா மைனரில் உள்ளது.

* திபேத்திலுள்ள அரண்மனை இதன் நீளம் 900 அடி.

* ஷாஜஹான் தன்னுடைய மனைவி மும்தாஜ் மஹாலின் நினைவாகக் கட்டிய சின்னம், தாஜ்மஹால் (கி.பி. 1630- கி.பி 1649).

* மைசூரிலுள்ள கோமேஸ்வரர் சிலை கி.பி. 1028ல் அமைக்கப்பட்டது. இதன் உயரம் 57 அடி.

* இந்தோசீனாவிலுள்ள அங்கார் வயட் என்னும் கோயில். இதன் நீளம் 976 அடி. அகலம் 588 அடி.

* வட எகிப்தில் உள்ள ஒரு யாளி. 3500 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட இதன் நீளம் 184 அடி. உயரம் 76 அடி.

* சீனாவுக்கும், மங்கோலியாவுக்கும் எல்லையாக உள்ள மிகப் பெரிய சுவர். இதன் நீளம் 1400 மைல்கள்.

* அலெக்சாண்டிரியாவுக்கு அருகில் இருந்த கலங்கரை விளக்கம். இதன் உயரம் 400 அடி.

* கி.மு. 380ல் கிரேக்கர்கள், ரோத்ஸ் தீவை வெற்றிகண்டார்கள். அதன் அடையாளச் சின்னமாக ஒரு சிலையை உருவாக்கினார்கள். அதன் உயரம் 120 அடி. அதன் இரு கால்களுக்கு இடையில் கப்பல்கள் செல்லும்.

—தொகுப்பு: பி.வி.ஜி.

# மனம் கவர் மாலைக் காலம்

—புலவர் கோமகன்—

மாலைக் காலம் சிறந்ததாம்
மகிழ்ச்சி அளிக்கத் தகுந்ததாம்
வேலை முடித்தே யாவரும்
வீடு திரும்பும் நேரமாம்!

மஞ்சள் வெய்யில் அடித்திடும்
மறையும் கதிரும் சிரித்திடும்
கொஞ்சும் தென்றல் தவழ்ந்திடும்
குளிர்ந்த மதியும் புறப்படும்!

சின்னக் குழந்தை உலவிடும்
சிறுவர் கூட்டம் நிறைந்திடும்
எண்ணக் கடலில் நீந்தியே
இளைஞர் கூட்டம் மகிழ்ந்திடும்!


உறவு பலரைத் தூண்டிடும்
உறக்கம் சிலரைத் தீண்டிடும்
இரவுப் பொழுதின் இனிமையை
இனிய மாலை படைத்திடும்!

கவலை வருத்தம் மறையுமாம்
கண்ணில் இன்பம் செறியுமாம்!
உவகை பொங்கிப் பெருகுமாம்
உலகம் அழகாய்த் திகழுமாம்!

கோடி மனிதர் நெஞ்சினில்
கோலம் கொள்ளும் மாலையே
நாடி நாளும் நாடெலாம்
நயக்கும் வகையில் மலருவாய்!



# வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
# உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
# அத்தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
# டான்சியின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—

தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!

டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**


**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை—600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

# எலி – பொது எதிரி!



கேள்வி: எலிகளில் எத்தனை வகையுண்டு?

பதில்: வயல் எலிகளில் கறம்பெலி, வெள்ளெலி, புல்எலி என மூன்று வகை உண்டு. இவைகளில் அதிகச் சேதம் ஏற்படுத்துவது கறம்பெலிதான்.

கேள்வி: எலிகளினால் ஆண்டிற்கு எவ்வளவு தானியம் சேதம் ஏற்படுகிறது?

பதில்: ஆண்டு ஒன்றுக்கு எலிகளினால் இருபது இலட்சம் டன் தானியங்கள் சேதமேற்படுகிறது. இதன் மதிப்பு சுமார் 150 முதல் 200 கோடி ரூபாயாகும்.

கேள்வி: ஒரு ஜோடி எலி ஓர் ஆண்டில் எந்த அளவு இனப்பெருக்கம் செய்கிறது?

பதில்: ஒரு ஜோடி எலி ஒரு ஆண்டில் அறுபது முதல் எழுபது சந்ததிகளை உருவாக்குகின்றன.

கேள்வி: எலியின் வயது என்ன? எத்தனை முறை கருத்தரிக்கும்?

பதில்: எலியின் வயது மூன்று ஆண்டுகளாகும். நான்கு முதல் எட்டு தடவை கருத்தரிக்கும்.

கேள்வி: எலியின் மூலம் பரவும் நோய்கள் யாவை?

பதில்: எலிகள் மூலம் மனிதருக்கும், கால் நடைக்கும் 35 வகை நோய்கள் பரவுகின்றன. இதில் முக்கியமானவை பிளேக், காமாலை மற்றும் விஷ ஜுரமாகும்.

கேள்வி: எலி வயல், வரப்புகளில் இருப்பதை எந்த அறிகுறியில் கண்டுபிடிப்பது?

பதில்: வரப்புகளில் வளைகள் அதிகம் காணப்பட்டாலும் வளைகளில் புது மண் தள்ளப்பட்டு இருந்தாலும் எலிகள் இருப்பதை அறியலாம்.

கேள்வி: எலியின் இயற்கை விரோதிகள் யாவை?

பதில்: பாம்பு, கழுகு, பருந்து, காகம், ஓநாய், நரி மற்றும் பூனை எலிகளின் இயற்கை விரோதிகளாகும்.

கேள்வி: எலிகளை எந்தெந்த முறையில் அழிக்கலாம்?

பதில்: எலிகளைப் பொறி வைத்துப் பிடித்தும் வரப்புகளை வெட்டிப் பிடித்தும் நச்சு உணவு வைத்தும், நச்சுப்புகை செலுத்தியும் அழிக்கலாம்.

கேள்வி: சிங்க் பாஸ்பைடு மருந்தினை எப்படி கலந்து வைக்க வேண்டும்? கையாள வேண்டிய குறிப்புகள் யாவை?

பதில்: எலி சாப்பிடும் உணவுடன் சிங்க் பாஸ்பைடு மருந்தினை நாற்பத்தி



ஒன்பது பங்கு உணவிற்கு ஒரு பங்கு மருந்து என்ற அளவில் வைக்கவேண்டும். தேங்காய் எண்ணெய்யும் சிறிது கலக்கும்பொழுது மருந்து நன்றாக ஒட்டிக் கொள்வதுடன் எலியும் விரும்பி உண்ணும். மருந்தை குச்சி அல்லது அகப்பை கொண்டு கலக்கவேண்டும். இந்த நச்சுஉணவை ஒரு இடத்தில் 10 கிராம் வீதம் ஒரு ஏக்கரில் இருபது முதல் முப்பது இடங்களில் வைக்கவேண்டும். இந்த நச்சு உணவை வைப்பதற்கு முன் இரண்டு நாட்கள் நச்சு கலக்கப்படாத உணவை வைக்கவேண்டும். உணவை எலி நன்றாகச் சாப்பிட ஆரம்பித்த பின்தான் நச்சு உணவை வைக்க வேண்டும். இறந்த எலிகளை தினமும் அப்புறப்படுத்தவேண்டும். எஞ்சுகின்ற உணவையும் அன்றாடம் எடுத்து புதைத்துவிட வேண்டும். இம்மாதிரியாகத் தொடர்ந்து மூன்று நாட்கள் வைக்கவேண்டும். இதன் பின் பத்து நாட்கள் இடைவெளி விட்டு மீண்டும் மருந்து கலந்த உணவை வைக்கவேண்டும்.

**கேள்வி:** கிட்டி வைத்து எலிகளை ஒழிக்கும் முறை எப்படி? அதன் நன்மைகள் யாவை?

**பதில்:** எலிகளைக் கிட்டி வைத்துப் பிடித்து ஒழிக்கும் முறைதான் ஆபத்து இல்லாத எளியமுறை. தஞ்சை மற்றும் சில மாவட்டங்களில் இம்முறை அதிக அளவில் கையாளப்படுகிறது. இக்கிட்டி மூங்கில் சிம்புகளைக் கொண்டு செய்யப்பட்டது. இவற்றை வயல்களில் வரப்பு ஓரங்களில்லும், வயலினுள்ளும் வைப்பார்கள். தண்ணீரில் நனையா வண்ணம் வைக்கோலை மெத்தை போன்று சிறிது அகலமாகவும் தட்டையாகவும் செய்து அதன் மேல் கிட்டியை தங்கும் வண்ணம் ஊன்றி கிட்டிக்கு இருபுறமும் வைக்கோல் மீது நெல் பொறியை இட்டு, மாலை நேரங்களில் வைக்கவேண்டும். எலியானது இரவில் பொரியைத் தின்ன எத்தனிக்கும் தருணம் மூங்கில் கிட்டியின் வில் தட்டப்பட்டு எலி நெரித்து கொல்லப்பட்டுவிடும். ஒரு ஏக்கருக்கு 12 முதல் 20 கிட்டிகள் தேவை!

**கேள்வி:** எலி வளைக்குள் அலுமினியம் பாஸ்பைடு மாத்திரைகளை எந்த அளவில் எப்படி இடவேண்டும்?

**பதில்:** ஒரு வளைக்கு ஒரு மாத்திரை வீதம் இடவேண்டும். மாத்திரையை இடும் முன் முதல் நாளில் வளையின் எல்லா துவாரங்களையும் மண்ணால் மூடி விடவேண்டும். மறுநாள் எந்த இடங்கள் திறக்கப்பட்டிருக்கிறதோ அந்த துவாரத்தின் உள்ளே மாத்திரையை வளைக்கு ஒன்றுவீதம் இடவேண்டும். பின் துவாரத்தைக் களி மண்ணால் மூடி கெட்டிப்படுத்த வேண்டும். இதேபோல் தொடர்ந்து எலிகள் முழுவதும் ஒழியும்வரை இடவேண்டும்.

**கேள்வி:** போரேட் கரைசலால் எலியைக் கொல்லும் முறை எப்படி?

**பதில்:** பத்து லிட்டர் தண்ணீருக்கு இரண்டரை கிராம் போரேட் பத்து சதவீதம் குருணை இட்டு மருந்து கரைசல் தயார் செய்யவேண்டும். வளையில் ஒரே ஒரு துவாரம் நீங்கலாக இதர தாவரங்களை எல்லாம் நன்றாக அடைத்த பின் வளையின் உள்ளே பத்து லிட்டர் மருந்து கரைசலையும் விட்டு துவாரத்தைக் கெட்டியாக மூடிவிட வேண்டும். போரேட் மருந்துக் கரைசலின் நச்சுத் தன்மையால் உள்ளே உள்ள எல்லா எலிகளும் இறந்துவிடும்.

**கேள்வி:** ரோடாஃபரின் என்பதும் வார்ஃபாரின் என்பதும் ஒரே மருந்தா? எவ்வகை உணவுடன் இம்மருந்தைக் கலந்து வைப்பது சிறந்ததாகும்?

**பதில்:** ரோடாஃபரின் என்பதும் வார்ஃபரின் என்பதும் ஒரே மருந்தாகும். எலிகள்



பிரியமாக உண்ணும் பொரி, தானியம் முதலிய உணவுடன் கலந்து இடவேண்டும்.

**கேள்வி:** வயலில் அறுவடை சமயத்தில் நஞ்சு கலந்த உணவு வைக்கலாமா?

**பதில்:** அறுவடை சமயத்தில் நஞ்சு கலந்த உணவை வைக்கலாம். ஆனால், அதிகாலையில் எலி சாப்பிட்டு மிஞ்சிய நச்சு உணவை அப்புறப்படுத்திவிட்டு புதைத்துவிட வேண்டும்.

**கேள்வி:** தென்னைமரத்திலுள்ள எலிகளை எவ்வாறு ஒழிக்கலாம்.?

**பதில்:** தென்னை மரத்திலுள்ள எலிகளை ஒழிக்க எலிகள் மரத்தின் மேல் ஏறுவதை முதலில் தவிர்க்க வேண்டும். இதற்கு ஏதுவாக தகரக் குப்பி தடுப்பனையோ முள்ளையோ மரத்தில் கட்டினால் எலி ஏற முடியாது.



சேதம் விளைவிக்காமல சென்றுவிடும் சிங்க் பாஸ்பைடு நச்சு மருந்து வைத்தும் ஒழிக்கலாம்.

கேள்வி: மின்சாரக் கம்பி மூலம் எலியைப் பெரிதளவில் அழிக்கலாமா?

பதில்: இது மிகவும் ஆபத்தான முறை. கால்நடை மற்றும் தனி மனிதர்களும் மின்சார அதிர்ச்சிக்கு உள்ளதாக நேரிடும். எனவே, இம்முறை சிபாரிசு செய்யப்படுவதில்லை.

கேள்வி: எலிகளைக் கட்டுப்படுத்த தானிய கிடங்குகளில் கையாளவேண்டிய வழிகள் யாவை?

பதில்: தானியக் கிடங்குகள் எலிகள் வெளியிலிருந்து நுழையாதவாறு அமைக்கப்பட வேண்டும். கிடங்குகளில் தானிய மூட்டைகள் வரிசையாக அடுக்கப்பட வேண்டும். தானியங்கள் ஏதும் சிந்தி கீழே கிடக்கக்கூடாது.

கேள்வி: ஆண்டி கோ ஆகுலண்ட் என்றால் என்ன? எலிகளை ஒழிக்க இம்மருந்து எப்படிச் செயல்படுகிறது!

பதில்: இரத்தத்தை உறையாத தன்மை ஏற்படுத்தும் பொருள் ஆண்டி கோ ஆகுலண்ட் ரவார்ஃபரின் மருந்து ஒரே ஆண்டி கோ ஆகுலண்ட் இம் மருந்து எலியின் ரத்தத்தின் உறையும் தன்மை நீக்கி வருவதால், உடலில் உள்ள ரத்தக்குழாய்கள் வெடித்து அதனால் இறந்துவிடும்.

கேள்வி: எலிகள் விஷமருந்து கலந்த உணவைத்தின்ற பின் தண்ணீர் குடித்தால் இறக்காதா?

பதில்: எலிகள் விஷ மருந்து கலந்த உணவைத் தின்றபின் தண்ணீர் குடிப்பதால் விஷத்தன்மை குறையாது. தண்ணீர் எவ்வளவு குடித்தாலும் சிங்க் பாஸ்பைடு மருந்து உட்கொண்டால் உடனடியாகவும் வார்ஃபரின் உட்கொண்டால் சில நாட்கள் கழித்தும் கண்டிப்பாக இறந்துவிடும்.

## திராவிட மொழிகள்

இந்தியாவில் மொத்தம் 1652 மொழிகள் பேசப்படுகின்றன. அவை நான்கு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை. அவை (1) திராவிட மொழி (2) ஆரிய மொழி (3) முண்டா மொழி (4) திப்த்தோ பர்மா மொழி.

* * *

தமிழ் எழுத்துக்கள் 247 என நாம் படிக்கிறோம். அது முறையான தகவல் அல்ல. தமிழ் எழுத்துக்கள் 31 தான். உயிர் எழுத்து 12 + மெய் எழுத்து 18 + ஆயுத எழுத்து 1 ஆக 31. உயிர்மெய் எழுத்துக்களையும் தனி எழுத்துக்களாக நாம் கணக்கில் கொள்ளக் கூடாது. அப்படிக் கணக்கிட்டால் வட மொழி உட்பட மற்ற மொழியான இந்திய மொழிகளில் எழுத்தின் எண்ணிக்கை 570 ஆகும்.

திராவிட மொழிகள் 24க்கும் அதிகமாக இருக்கின்றன. அவைகளைப் பற்றிய ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன். திராவிட மொழிகளை 3 ஆகப் பிரிக்கலாம். (அ) தென் திராவிடம்; தமிழ், கன்னடம், மலையாளம், கோத்தா, தோடா, படகா, குறுபா, துளு, இருளா, கொடகு. (ஆ) நடுத்திராவிடம், தெலுங்கு, பர்ஜி, இதபா, குயி, குவி, பெங்கோமண்டா, நாய்கி, நாய்க்டி, கொலாமி, கோண்டி, கொண்டா (இ) வட திராவிடம்: பிராகுயி, மால்டோ, குடுக்.

தகவல்: பி. நடராஜ பிள்ளை,
இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம்,
மைசூர்.

# பயன்தரும் பல்வேறு வகையான சேமிப்புத் திட்டங்களில் ஒன்றான தேசீய சேமிப்புப் பத்திரத்தில் முதலீடு செய்து பயன்பெறுக

—oOo—

| வ. எண். | முதலீட்டின் வகை | வட்டி விகிதம் | சிறப்பு அம்சங்கள் |
|---|---|---|---|
| 1. | 7-ஆண்டு தேசீய சேமிப்புப் பத்திரம் (இரண்டாவது வெளியீடு) | ஆண்டுக்கு 6.5% கூட்டுவட்டி | *வட்டி முழுவதிற்கும் வரி விலக்கு உண்டு. *ஆண்டுதோறும் வட்டித் தொகை பெறலாம். |
| 2. | 7-ஆண்டு தேசீய சேமிப்புப் பத்திரம் (மூன்றாவது வெளியீடு) | ஆண்டுக்கு 6% | *வட்டி முழுவதிற்கும் வரி விலக்கு உண்டு. |
| 3. | 7-ஆண்டு தேசீய சேமிப்புப் பத்திரம் (நான்காவது வெளியீடு) | ஆண்டுக்கு 10.25% | *ஆண்டுதோறும் வட்டித் தொகை பெறலாம். |
| 4. | 7-ஆண்டு தேசீய சேமிப்புப் பத்திரம் (ஐந்தாவது வெளியீடு) | ஆண்டுக்கு 10.75% கூட்டு வட்டி | *ரூ. 100/- ரூ. 204.50 ஆக ஏழே ஆண்டுகளில் பெருகுகிறது. |


விவரங்களுக்கு :

சிறுசேமிப்பு இயக்குநர்,
143, அண்ணா சாலை,
சென்னை-600 002.

மண்டல தேசீய சேமிப்பு இயக்குநர்,
92, அண்ணா சாலை,
சென்னை-600 002.

ஆணையர், சென்னை மாநகராட்சி,
மற்றும் எல்லா
மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
உங்களுக்கு அருகாமையிலுள்ள
அஞ்சல் அலுவலகம்.

# காவலர்களுக்குக் களிப்பூட்டும் சலுகைகள் !



தமிழகத்தில் மொத்தம் 873 காவல் நிலையங்கள் உள்ளன. இவைகளில் பணிபுரியும் பீட் காவலர்களுக்கு 'வாக்கி டாக்கி' என்னும் கருவி வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. ஒரு நிலையத்திற்கு இரண்டு வீதம் மொத்தம் 1,746 செட்டுகள் இவ்வாண்டிலேயே வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு 'வாக்கி டாக்கி'' செட்டின் விலை ஏறத்தாழ ரூ. 2,000 ஆகும். இதற்காக ஆகும் தொடராச் செலவு ரூ. 70 இலட்சமாகும்.

**குறைந்த விலையில் உணவுப் பொருள்கள் !**

காவலர்களுக்குக் குறைந்த விலையில் அரிசி, பருப்பு, எண்ணெய், சர்க்கரை முதலிய உணவுப் பொருட்களைப் பங்கீட்டுக் கடைகள் மூலம் வினியோகம் செய்யும் திட்டத்தை அரசு பரிசீலித்தது. மேற்குவங்கத்தில் அரசிதழ் பதிவில்லாத ஒவ்வொரு காவலரும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்குக் குறைந்த விலையில் பொருள்கள் வழங்கும் இதுபோன்ற திட்டம் செயல்படுகிறது. அதன்படி ஒரு வாரத்திற்கு ஒரு நபருக்கு—

அரிசி 1 கிலோ (விலை 50 காசு)
சர்க்கரை 300 கிராம் (விலை 70 காசு)
பருப்பு 750 கிராம் (விலை 60 காசு)
சமையல் எண்ணெய் 250 கிராம் (விலை ரூ. 2-)

என்ற அளவில் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கு வங்கத்தில் 1975-76ல் ரூ. 9.2 கோடி, 76-77ல் ரூ. 6.47 கோடி, 77-78ல் 6.32 கோடி என்ற அளவில் இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்டுள்ளது. எனவே, அங்கு உள்ள படையின் எண்ணிக்கையைவிட நமது படையின் எண்ணிக்கை குறைவாதலால், இத்திட்டத்திற்கு நமக்காகும் செலவு குறைவாகவே இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு இத்திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்படும்.

**பாதுகாப்புக்கு....**

தமிழ்நாட்டில் பணியாற்றும் காவலர்கள் இரவு நேரங்களில் வெளியே ரோந்து போகும்போது பாதுகாப்பிற்காக அவர்களுக்குக் கைத்துப்பாக்கிகள் வைத்திருப்பது தேவை எனக் கருதப்படுகிறது. தற்பொழுது மேலதிகாரிகளுக்கு மட்டுமே கைத்துப்பாக்கிகள் வழங்கப்படுகிறது. இனி, இரவு நேரங்களில் பீட் போகும் காவலர்களின் பாதுகாப்பை முன்னிட்டு ஒரு காவல் நிலையத்திற்கு 5 கைத்துப்பாக்கிகள் வீதம் தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 873 காவல் நிலையங்களுக்கும் கைத்துப்பாக்கிகள் வழங்கமுடிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 55 காவல் நிலையங்கள் சென்னை நகரில் உள்ளன. இதற்காகும் செலவு ரூ. 23,73,250 ஆகும் என்று மதிப்பிடப்படுகிறது.

குற்றப்புலனாய்வுத்துறை, மாவட்ட தனிப்பிரிவு, ர்யில்வே ஆகிய பிரிவுகளில் பணிபுரியும் காவலர்களுக்கு மாதம் ரூ. 1.87 வீதம் இதுவரை வழங்கப்பட்டு வந்த துணிச் செலவுப் படி இனி மாதம் ரூ. 10 வீதம் உயர்த்தி வழங்கப்படும்.

**நுண் அலை முறை**

ரூ. 100 இலட்சம் செலவில் ஒரு நுண் அலை முறை அமைப்பு அமைக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் மாவட்டக் காவல் தலைமையகங்கள் மாநிலக்காவல் தலைமையகத்துடன் உடனடித் தொடர்பு கொள்ளமுடியும். குற்றப்புலனாய்வுத்துறை இதை பயன்படுத்திக் கொள்கிறது என்றாலும், மாவட்ட குற்ற புலனாய்வுத் தலைமையகங்களை மாநில குற்றப்புலனாய்வுத் தலைமையகத்துடன் இணைக்கும் வகையில் தனியான தகவல் தொடர்புமுறை ரூ. 1,51,000 செலவில் அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. இந்த வசதி நுண்அலைத் தகவல் தொடர்புடன் இணைக்கப்படும்.

மேலும், யு. எச். எப். (Ultra High Frequency) வசதியும் குற்றப்புலனாய்வுத் துறைக்குச் செய்து தரப்படும்.

மொத்தமுள்ள 873 காவல் நிலையங்களில் 640 காவல் நிலையங்கள் அந்தந்த மாவட்டத்திலுள்ள காவல் தலைமையகத்துடன் வி.எச்.எப். (Very High Frequency) முறையில் இணைக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள 233 காவல் நிலையங்களுக்கும் சுமார் ரூ.35 இலட்சம் செலவில் இவ்வாண்டிலேயே வி.எச்.எப். வசதி செய்யப்பட்டு மாநிலக் காவல் தலைமையகத்துடன் இணைக்கப்படும்.

**பெண்காவலர்கள்**

தமிழகத்தில் சுமார் 873 காவல் நிலையங்களும் 185 புறக்காவல் நிலையங்களும் உள்ளன. பெண் குற்றவாளிகளை விசாரணை செய்வதற்காகப் பெண் காவலர்களை அதிக அளவில் நியமிக்கவேண்டும் என்று இவ்வரசு ஏற்கெனவே (1978-79) எடுத்த முடிவின்படி கூடுதலாக இவ்வாண்டிலேயே கீழ்க்கண்டவாறு பெண்காவலர்களை நியமிக்க அரசு முடிவுசெய்துள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | பெண் சப் இன்பெக்டர் | 60 |
| 2. | பெண் தலைமைக் காவலர்கள் | 60 |
| 3. | பெண்காவலர்கள் | 600 |

**சாலை விபத்து**

தற்போது காவலர் முதல் ஆய்வாளர் வரை உள்ள அனைவருக்கும் மாதம் ஒன்றுக்கு

இடையூறுப்படியாக ரூ. 20 வழங்கப்படுகிறது. இந்த முறையைப் பின்பற்றி இனி துணைக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் மாதம் ரூ. 30 வீதமும், காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கு மாதம் ரூ. 50 வீதமும் இடையூறுப்படி ( Risk Allowance ) வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் மாநிலம் முழுவதும் 263 துணைக் காவல் துறைக் கண்காணிப்பாளர்களும், 77 காவல் துறைக் கண்காணிப்பாளர்களும் பயனடைவர் இதற்காகும் ஒரு வருட தொடர் செலவு ரூ. 1,40, 800-

நாளுக்கு நாள் சாலை விபத்துக்களால் ஏற்படும் உயிரிழப்பு அதிகமாகிக் கொண்டே போகிறது. இதற்கு முதற்காரணம் அதிக வேகத்தில் வாகனங்கள் போவதாகும். இதைத் தடுக்க பஸ், லாரிகளில் வேகத் தடுப்புகள் (Electronic Speed Regulators) உடனடியாகப் பொருத்த வேண்டுமென அரசு ஆணையிட்டுள்ளது. இதனைக் கண்காணிக்கவும், சென்னையிலும் மற்றப் பெருநகரங்களிலும் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும் கண்காணிக்கவும், அதைச் சரியான வழியில் திட்டமிட்டுச்செயலாற்றவும் பொறியியல் வல்லுநர்களைக் கொண்ட ஒரு டிராபிக் செல் ( Traffic cell ) காவல்துறையில் அமைக்கப்பட்டு போக்குவரத்துப் பிரிவு வலுவாக்கப்படும்.

## மதுவிலக்கு

தமிழ்நாட்டில் தற்போது மதுவிலக்கினைத் தீவிரமாகச் செயல்படுத்த தனியாக



ஒரு பிரிவு இயங்கி வருகிறது. மேலும், காவல் நிலையங்களிலுள்ள காவலரும் மதுவிலக்கைச் செயல்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். மதுவிலக்கினை மேலும் தீவிரமாகச் செயல்படுத்த காவல் நிலையங்களில் உள்ள காவலர்களைக் குற்றங்களைத் தடுப்பதிலும் கண்டுபிடிப்பதிலும் சட்டம் ஒழுங்கினைப் பராமரிப்பதிலும் ஈடுபடுத்திவிட்டு மதுவிலக்கு காவல் பிரிவினைச் சீரமைத்து காவலர்களின் எண்ணிக்கையை கூடுதலாக்கி, ஒவ்வொரு காவல்துறை மாவட்டத்திலும் கீழ்க்கண்ட காவல்துறைப் பணியாளர்களடங்கிய ஒரு தனிப்பிரிவு (Separate cell) வீதம் 20 காவல் துறை மாவட்டங்களிலும் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது!

| | |
|---|---|
| துணைக்கண்காணிப்பாளர் | 1 |
| ஆய்வாளர் | 2 |
| துணை ஆய்வாளர் | 4 |
| காவலர்கள் | 40 |
| | (ஆயுதங்களுடன்) |
| வாகனங்கள் | 4 |

## வீட்டுவசதி

காவல்துறையில் சொந்தவீடு கட்டிக் கொள்ள அரசு அளிக்கும் கடன் வசதி இவர்களின் முழுபிரச்சினையைத் தீர்க்க கூடியதாக இல்லை. ஓய்வு பெற்ற காவலர்களுக்கும் வீட்டு வசதி செய்து கொடுக்கும் திட்டத்தை அரசு பரிசீலித்தது. பெருமளவில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணவும் காவலர்களின் வீட்டு வசதிகளைக் கணிசமாகப் பூர்த்தி செய்யவும், 'காவலர் வீட்டு வசதிக் கழகம்'' எனும் அமைப்பை ஏற்படுத்த கொள்கை அளவில் அரசு முடிவு செய்துள்ளது.

தற்பொழுது சென்னை நகரில் 85 மோட்டார் சைக்கிள்கள் காவல்துறை துணை ஆய்வாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ரோந்துப் பணிகளை மேலும் விரிவுபடுத்தும் வகையில் காவலர்கள் உபயோகப்படுத்த சென்னை நகரில் உள்ள 51 காவல் நிலையங்களுக்கும் 51மோட்டார் சைக்கிள்கள் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு ரூ. 5,61,000 செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காவல்துறை வாகனங்கள் பல பழமையானதும் பழுதடைந்தும் இருப்பதால், இவைகளுக்குப் பதிலாகப் புதிய வாகனங்கள் இந்நிதியாண்டில் வாங்குவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. ஆக சுமார் ரூ. 1,56,58,000 செலவில் 181 புதிய வண்டிகள் வாங்கப்படும்.

சென்னை உட்பட ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் வீடு கொடுக்கப்படாத ஒவ்வொரு காவல் துறை அதிகாரிக்கும் சார்பு நிலைப் பணியாளர்களுக்கும் வீட்டு வாடகைப்படி மாதம் ஒன்றுக்கு ரூ. 50வீதம் அதிகப்படியாக வழங்கவும், மாவட்டத் தலைநகர் அல்லாத இடங்களில் பணிபுரியும் வீடு கொடுக்கப்படாத ஒவ்வொரு காவல்துறை அதிகாரிக்கும், சார்பு நிலைப்பணியாளருக்கும் வீட்டு வாடகைப்படி மாதம் ஒன்றுக்கு ரூ. 30 வீதம் அதிகப்படியாக வழங்கவும், கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும்.

# அரசின் அறிவிப்புகள் - ஆக்கப் பணிகள்

21-7-80 முதல் 31-7-80 முடிய

## 21—7—80

சென்னை நகர வளர்ச்சித் திட்டங்களுக்கு ரூ. 15 கோடியே 90 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திற்காக ரூ. 4.52 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

சென்னை நகரில் கொசுத் தொல்லையை ஒழிக்க 3 திட்டங்களாக மிகப்பெரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுதவிர மத்திய அரசால் வழங்கப் பட்ட 'தெர்மோபோகிங்' மூலமும் கொசுக்களை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் திரு எச். வி. ஹண்டே அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஓட்டல்களிலும் முன்புபோல ஒரு ரூபாய்க்குச் சாப்பாடு (ஜனதா சாப்பாடு) கிடைப்பதற்கான நடவடிக்கைகளைத் தமிழக அரசு எடுத்துள்ளது என்று மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சேலத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

## 22—7—80

1980—81ஆம் ஆண்டில் அரசின் பல்வேறு துறைகள் மூலம் சுமார் 80கோடி ரூபாய் செலவில் அரிசனங்களின் மேம்பாட்டிற்காகக் கூட்டுச் சிறப்புத் திட்டத்தை அமலாக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் அரிசனங்கள், பழங்குடியினரில் 2 இலட்சம் குடும்பங்களை வறுமைக் கோட்டிற்குமேல் கொண்டு வரவும் அரசு முடிவு செய்துள்ளது என்று மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் திரு விஜயசாரதி அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்துள்ளார்.

நகரசபைகள் விதித்துவந்த விவசாயவரி ரத்து செய்யப்படுவதாக மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

## 23—7—80

698 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த 18 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் 476 புதிய வழித்தடங்களில் பேருந்துகள் விட அரசு முடிவு செய்துள்ளது என மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

வடார்க்காடு மாவட்டம், திருப்பத்தூரில் ஆண்டுக்கு 5.2 டன் சந்தனத் தைலம் எடுக்கும் திறன் கொண்ட சந்தன எண்ணெய்த் தொழிற்சாலை அமைக்கப்படும் என்று மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

## 24—7—80

தமிழக விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் நெல் கொள்முதல் விலையை உயர்த்துமாறு கோரி பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி. ஆர். அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்.

குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளைக் கட்ட தனியார் நிலங்களுக்கு நியாயவிலை கொடுத்து, நிலத்தைக் கையகப்படுத்த சட்டம் கொண்டுவருவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது என்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். ராகவானந்தம் அவர்கள் சென்னை அயோத்தியா குப்பத்தில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரிய அலுவலகக் கட்டட அடிக்கல் நாட்டு விழாவில் தெரிவித்தார்.

## 25—7—80

கொலை, கொள்ளை பற்றி உடனடியாகத் துப்புத் துலக்கிக் கண்டுபிடிக்க, காவல்துறையில் நவீன கருவிகள் வசதி அமைக்கப்படுகிறது என்று மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

திண்டுக்கல் அருகே 2கோடி ரூபாய் செலவில் காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்தப்படும் என்று மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு கா. ராஜா முகம்மது அவர்கள் தெரிவித்துள்ளார்.

## 26—7—80

முதியோர் ஓய்வு ஊதியத் திட்டத்தின் கீழ் இதுவரை ஒரு இலட்சத்து 12 ஆயி

ரத்து 800 பேர் பயனடைந்துள்ளனர். நடப்பு ஆண்டில் மேலும் 3 ஆயிரம் பேருக்கு உதவித்தொகை வழங்கப்படும் என்று மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

## 27—7—80

வட ஆர்க்காடு மாவட்டம், பேரணாம்பட்டில் கூட்டுறவுத்துறையில் தோல் பதனிடும் தொழிற்சாலை அமைக்கப்பட உள்ளது என்று மாண்புமிகு ஊரக—தொழில் அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் சட்ட மேலவையில் கூறினார்.

தரமான, சுத்தமான இறைச்சி சென்னை நகர மக்களுக்குக் கிடைக்கச் செய்ய, நவீனமுறையில் தொழில் நுட்பம் பொருந்திய இறைச்சிக் கொட்டில் அமைக்கப்படும் என்று மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சினிவாசன் அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

## 28—7—80

உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துத் திட்டங்கள் 50 சதவிகித உதவித் திட்டமாகக் கருதப்படும் என மத்திய அரசு அறிவித்தபடி, பக்கிங்காம் கால்வாயை 3 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் சீரமைக்கும் திட்டத்தை மத்திய அரசின் ஒப்புதலுக்காகத் தமிழக அரசு அனுப்பியுள்ளது.

## 29—7—80

பாசனம் தொடர்புடைய ஆலோசனைக் குழு வாரியம் ஒன்று அமைக்கப்படும் என்று மாண்புமிகு பாசனத்துறை அமைச்சர் திரு கா. இராசாமுகம்மது அவர்கள் சட்ட மேலவையில் தெரிவித்தார்.

## 30—7—80

உலக வங்கியின் உதவியோடு தமிழகத்தில் இரண்டரை இலட்சம் ஏக்கர் நிலத்தில் நிலக்கடலை சாகுபடி செய்யப்படும் என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

பிற்பட்ட மககளின் நல வளர்ச்சிக்குத் தனி வாரியம் ஒன்று அமைக்கப்படும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சட்டமன்ற மேலவையில் தெரிவித்தார்.

## 31—7—80

தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்த்தப்பட்டுள்ளது. இந்த அகவிலைப்படி குறைந்தது ரூ. 6, அதிகபட்சம் ரூ. 30. ஜூலை முதல் தேதியிலிருந்து அளிக்கப்படும். பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள், உள்ளாட்சி ஊழியர்கள் அனைவருக்கும் இது பொருந்தும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

சட்ட ஆராய்ச்சி மையம் ஒன்றைச் சென்னையில் நிறுவ இருப்பதாக மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் சட்ட மேலவையில் தெரிவித்தார்.

## சிரிப்பின் பெருமை



சிரித்தால் உடம்பில் எந்தவிதமான வியாதியும் ஏற்படாது. ஆரோக்கியமாக வாழ்வதற்குச் சிரிப்பு மிகமிக அவசியமானது.

சிரிக்கும்போது காற்றுப்பை விரிகிறது. அப்படி விரியும்போது அந்தக் காற்றுப் பையில் பிராண வாயு அதிகமாகப் போய்ச் சேருகிறது. இப்படி, பிராண வாயுப் பெருக்கம் நீண்ட வாழ்வை மக்களுக்கு அளிக்கிறது.

சிரிப்பூட்டும் ஹாஸ்யம் ஒரு அருமையான கலை. இந்தக் கலையை நாட்டுக்கு நன்மை பயக்கக் கூடிய ரீதியிலும் பிறரைத் துன்புறுத்தாத முறையிலும் கையாள வேண்டும்.

மக்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்து மகிழவேண்டுமானால் அந்தப் பணியைச் செய்யும் கலைஞருக்குப் பல துறைகளிலும் தேர்ச்சியும் தெளிந்த அறிவும் வேண்டும்.

அரசியல் துறையிலே—சமுக விவகாரங்களிலே—அறநெறிகளிலே—இலக்கியத் துறையிலே—சரித்திர ஆராய்ச்சியோடு சயன்ஸும் கொஞ்சம் தெரிந்திருக்க வேண்டும். இப்படிப் பல வேறு துறைகளிலும் முறையான ஞானமிருந்தால் மட்டும்தான் மக்களைச் சிரிப்பூட்ட வைக்கும் சிறந்த நகைச்சுவைக் கலைஞனாகச் சோபிக்க முடியும்.

—கலைவாணர்
என். எஸ். கிருஷ்ணன்
(வானொலி உரையில்)
1949



**மாவட்ட வளர்ச்சிப் பணிகள்**

# தஞ்சை மாவட்டத்தில்



மன்னார்குடி ஊராட்சி ஒன்றியத்தில் 1979-80 நிதியாண்டில் அரசு மான்யத்துடன் சிறு தொழில் வளர்ச்சிக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காலணிகள் தயாரிக்கும் தொழிலாளர்கள் 7 பேருக்குத் தையல் இயந்திரங்களும், 13 நபர்களுக்கு எண்ணெய் பிழியும் இயந்திரச் செக்குகளும், 18 கைவினைஞர்களுக்குத் தொழில்கள் தொடங்க கருவிகளும், 5 நபர்களுக்குத் தீப்பெட்டித் தொழில் துவங்க உதவிகளும் அளிக்கப்பட்டுள்ளன.

மேலும்,தீப்பெட்டித் தொழில், தச்சு, கொல்லுத்தொழில் செய்வதற்குக் கைவினைஞர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் மூலம் சுய வேலை வாய்ப்பும், சிறு தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்பும் ஏற்பட்டுள்ளன. மேற்கண்ட தொழில் வளர்ச்சிகளுக்கு மொத்தம் 1,76,472 கடனும், ரூ. 58,824 அரசு மான்யமும் கொடுக்கப்படுகிறது.

**மகளிர் முன்னேற்றத்திற்கான வளர்ச்சிப்பணி**

மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம் ஆலங்கோட்டை, வேளுகுடி, வடபாதி மங்கலம் ஆகிய மூன்று மையங்களில் 1979-80 நிதி ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் கீழ் மூன்று தையல் பயிற்சி நிலையங்கள் நடத்தப்பட்டன. ஒரு பயிற்சி நிலையத்திற்கு 20 பெண்கள் வீதம் 60 பேர்களுக்குத் தையல் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் சேர்க்கப்பட்ட அனைவரும் மிகவும் ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள், பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள்.

பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 100 ஊக்கத்தொகைவழங்கப்பட்டுளள்து. இத்தொகையில் ஒரு பகுதியை ஒவ்வொரு பயிற்சியாளரும் வங்கியில் சேகரித்து வைத்தனர். அனைவருக்கும் பாரத ஸ்டேட் வங்கி மூலம் தவணை முறையில் சுமார் ரூ. 900 பெறுமானமுள்ள தையல் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு 2/3 பாகம் அரசு மான்யம் வழங்கியுள்ளது.

இப்பயிற்சியில் பங்குபெற்ற 60 பெண்களும் தையல் தொழிலில் நல்ல தேர்ச்சி பெற்றுள்ளதால், பிறர் உதவியின்றி சுய வேலை வாய்ப்புப் பெறுவதற்கான நிலை ஏற்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்குக் கடன்:**

மன்னார்குடி ஊராட்சி ஒன்றியத்தில் 1979-80 நிதி ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழும், சிறுவிவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும் ஏழை விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் 210 பேருக்குத் திருந்திய சாகுபடி பற்றி கோவை விவசாயக் கல்லூரிக்கு அழைத்துச் சென்று பயிற்சி அளிக்கப்பட்டது. இவர்களுக்கு அரசு மான்யத்துடன் 1266 கறவை மாடுகளும், 40 இணை வண்டி மாடுகளும், 11 பார வண்டிகளும், 26 டயர் வண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன.

தஞ்சை மாவட்டத்தில் மன்னார் குடிஊராட்சி ஒன்றியத்தில் மட்டும்தான் டயர் வண்டிகள், வடபாதிமங்கலம் பாரத ஸ்டேட் வங்கி மூலம் தவணை முறையில் வழங்கப்பட்டுள்ளன. டயர் வண்டிகள் பெற்றவர்கள் வடபாதிமங்கலம் திருஆரூரான் சர்க்கரை ஆலைக்குக் கரும்புகள் ஏற்றிச்செல்வதன் மூலம், ஒரே ஆண்டில் கடன் முழுதும் ஈடு செய்து டயர், வண்டிக்கும், மாடுகளுக்கும் சொந்தக்காரர்கள் ஆகிவிடுகின்றனர்.

மன்னார்குடி ஊராட்சி ஒன்றியத்தில் மிகச்சிறு விவசாய முன்னேற்றத்திற்கு இதுவரை ரூ. 31,38,532 கடனாகவும், ரூ. 9,38,252 அரசு மான்யமாகவும் வழங்கப்பெற்றுள்ளது.

# ஒரு பெண்ணுள்ளம் மகிழ்ச்சி பெறுகிறது

**-மரகதம்**

**ப**ச்சைமலை கிராமம் பெயருக்கேற்ற விதத்தில் பச்சைப் பசேல் என்று காட்சி தந்து கொண்டிருந்தது. நஞ்செய் நிலங்கள் செழித்துக் கொழித்துக் கொண்டிருந்தன. கிராமம் பழையதுதான் என்றாலும் புதிய - நவீன முறையில் விவசாயம் செய்துவரும் விவசாயப் பெருமக்களின் அயராத உழைப்பினால் அது புது வடிவம் பெற்றுத் திகழ்ந்தது.

கிராமத்தின் மெயின் ரோட்டில் ஓர் ஓரத்தில் உள்ள வேப்பமரம் தென்றல் காற்றின் தழுவலினால் உடல் சிலிர்த்து, இலைகளை அசைத்துக் கொண்டிருந்தது. சில சிறுவர்கள் அங்கே கிளித்தட்டு விளையாட்டில் மிக உற்சாகமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். அது மாலை நேரம் என்பதை அங்குள்ள சூழ்நிலை தெளிவாக்கிக் கொண்டிருந்தது.

மினி பஸ் ஒன்றின் சத்தத்தைக் கேட்ட சிறுவர்கள் தங்களது விளையாட்டுக்குச் சிறிது நேரம் ஓய்வு கொடுத்தார்கள்.

பஸ் அங்கே நின்றது. முன்னாள் கிராம முனிசிப் முத்தையாத் தேவர் அந்த பஸ்ஸை விட்டு மெதுவாக இறங்கினார். இறங்கிய உடன் அவர் கண்களில் கிளித்தட்டு விளையாட்டுச் சிறுவர்கள்தான் தென்பட்டார்கள்.

''ஏண்டா பயலுகளா! பஸ் வார தெருவிலதான் வெளையாடுவாகளோ? மேட்டுப் பக்கம் போயி, அங்கே இருக்கிற பொட்டல்லே வெளையாடாமெ நடு ரோட்டிலே வந்து வெளையாடுறீங்களே! காரில அடிபட்டா என்னடா செய்வீங்க?''- என்று அறிவுரையைச்சொற்பொழிவாக வழங்கிவிட்டு, தமது ஓட்டுச் சாய்ப்பு வீட்டைநோக்கி நடைபோட்டார்.

**பஸ் சத்தத்தைக் கேட்ட முத்தையாத் தேவரின் மனைவி உல**கம்மா, வீட்டுக் கதவைத் திறந்து வெளியே வந்து பார்ப்பதற்கும், முத்தையாத் தேவர் வீட்டுக்கு வருவதற்கும் சரியாக இருந்தது. கணவரைக் கண்டதும் ஒரு மலர்ச்சி அவளிடம் ஏற்பட்டது. தான்போய்வந்த விஷயம்குறித்து அவர் ஏதாவது சொல்வார் என்று எதிர்பார்த்தாள். அவர் எதுவும் சொல்லாத விதத்தில் மேல் துண்டை எடுத்து, திண்ணையை இரண்டு மூன்று முறை தட்டிவிட்டு, அதில் அமர்ந்தார்.

கணவர் களைப்பாக இருப்பதை அறிந்த உலகம்மா உள்ளே சென்று, ஒரு குவளையில் மோர் கொண்டு வந்து கொடுத்தாள். அதை வாங்கி மடக் மடக் என்று ஒரே மூச்சில் குடித்துவிட்டு, குவளையை திண்ணையில் வைத்தவாறு, 'ஏவ்' என்று ஏப்பம் விட்டார் முத்தையா.

உலகம்மா, கணவரின்முகத்தை உற்றுப் பார்த்தாள். அவளால் எந்த விவரத்தையும் கண்டுகொள்ள முடியவில்லை. கணவர் போய்வந்த விஷயம் காயா, பழமா என்பதை அவரது முகக் குறிப்பிலிருந்து அறிந்து கொள்ள முயன்றாள்; முடியவில்லை: 'முத்தையாத் தேவர் அழுத்தமானவர், அவரது முகக் குறிப்பிலிருந்து எதையுமே கண்டு கொள்ள முடியாது'' என்று ஊர் ஜனங்கள் சொல்வது உண்மைதான் என்று உலகம்மாவுக்கு இப்போதுதான் புரிந்தது.

மகள் பூமயிலுக்கு மாப்பிள்ளை பார்க்கச் சென்றவர், அந்த விவரத்தைச் சொல்லாமல் மௌனச் சாமியாராக உட்கார்ந்திருக்கிறாரே என்று நினைத்த உலகம்மா, மேலும் அந்த நிலையை நீடிக்கவிடாமல் ''ஆமா! பையனை உங்களுக்குப் பிடிச்சிருக்குதா?'' என்று, நேரடியாக வினாவைத் தொடுத்தாள்.

**''பையனைப் புடிச்சிருக்குது.. ஆனா... என்று இழுத்தார்.**

''ஆனா என்னங்க....'' சந்தேகத்துடன் கேட்டாள் உலகம்மா.

''அவங்க கலியாணத்தை அய்ப்பசியிலே வச்சுக்கச் சொல்றாங்க! அதான் நமக்குத் தோதா இல்லே! அறுவடை நேரம், அடைமழை வேறே இருக்கும்! அதான் யோசிக்குறேன்'' - முத்தையா மனச் சங்கடத்துடன் சொல்லிக் கொண்டிருந்தார்.

''சரி, முடிவா என்ன சொல்லிட்டு வந்திங்க!'' - தயக்கமின்றிக் கேட்டாள் உலகம்மா.

''முடிவா ஒத்துக்கிட்டேன், ஏன்னா அய்ப்பசிக்கு அடுத்த மாசம், மாப்பிள்ளைப் பையனோட அக்காவுக்கு பிரசவ நேரமாம். அதுனால அய்ப்பசி மாதத்துக்கு ஆட்சேபணை சொல்ல முடியலே!'' -விவரமாகச் சொன்னார் முத்தையா.

''அப்பாடா'' பெருமூச்சுடன் கூறினாள் உலகம்மா. அவள் உள்ளத்தில் இப்போதுதான் திருப்தி தலை காட்டத் தொடங்கியது.

''சரி, வயித்தைப் பசிக்குது! சாப்பிடுறதுக்கு என்ன வச்சிருக்கிறே''

''கேவரகுக் கூழிருக்கிது வந்து சாப்புடுங்க''

முத்தையாவின் முகத்திலிருந்த மகிழ்ச்சி ரேகைகள் மறைந்து -கவலை ரேகைகள் படரத் தொடங்கிவிட்டன. ரகம் ரகமா நெல்லுச்சோற்றைச் சாப்பிட்ட முத்தையா ,சமீபகாலமாக நீரிழிவு நோயின் காரணமாக -சில கட்டுப்பாடுகளுடன் வாழ்க்கை நடத்த நேர்ந்துவிட்டது-அதனால் கேழ்வரகும் கோதுமையும் அவரது உணவு முறையில் முக்கிய இடம் பெற்றன.

கேழ்வரகுக் கூழில் கலந்து காணப்பட்ட சோற்றுப் பருக்கைகளும் மோரும் அவருக்குப் பரம திருப்தியை வழங்கத் தவறவில்லை; இதுதான் நமக்கு என்று விதித்துவிட்டால் அதை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்பதை அவர் தெளிவாக உணர்ந்திருந்ததனால், கேழ்வரகுக் கூழை நன்கு சுவைத்துக் குடித்தார்.

சாப்பாட்டை முடித்துவிட்டு, **திண்ணை**யை நோக்கிப் புறப்பட்டார் முத்தையா. அவரைப் பின் தொடர்ந்தாள் உலகம்மா. **அவள் பின் தொடர்வதைக் கவனிக்காதவர் போல, திண்ணைக்குச் சென்று, அமர்ந்து, வெற்றிலைப் பெட்டியைத் திறந்தார்.**

''என்னங்க'' ...என்றபடியே வந்த உலகம்மா மேற்கொண்டு எதுவும் பேசாமல் நிறுத்திக் கொண்டாள். அவள் என்ன சொல்ல வருகிறாள் என்பதைப் புரிந்து கொண்ட அவர், எதுவும் புரியாதது மாதிரிநடித்தார்.

''என்னங்க! பூமயிலுக்கு கலியாணம் உறுதி யாகியிருக்கிற விவரத்தை எங்க அண்ணனுக்கு கடுதாசி எழுதுங்க! கண்டிப்பா ஒரு வாரத்துக்கு முன்னாடியே வந்துசேரணும்னும் எழுதுங்க''—

''ஆமா புள்ளே, அந்தக் கடுதாசியைப் பார்த்தவுடனே பட்டணத்தில இருக்குற ஒன் அண்ணன் ஒடனே புறப்பட்டு வந்து பச்சைமலை கிராமத்துல பொத்துன்னு குதிக்கப் போறாரோ! கோபத்தை ஏன் கௌர்றே!'' -ஓங்கிப் பேசினார் முத்தையா.

பதில் சொல்ல முடியாமல் நின்றாள் உலகம்மா. முத்தையா மீண்டும் பேசத் தொடங்கினார்.

''இவ்வளவு கரிசனமாப் பேசுறியே புள்ளே. நாலு வருஷத்துக்கு முன்னே ஒன் மக பெரிய மனுஷியானதுக்கு தந்தி கொடுத்தோமே, அப்ப அவரு வந்தாரா? சம்சாரத்தை அனுப்பி வச்சிட்டு அவரு ஜம்முன்னு பட்டணத்திலேயே இருந்துட்டாரே! சடங்குக்கு தாய்மாமன் தானே முக்கியம்! தாய்மாமன் பொண்டாட்டியா முக்கியம்? அவருக்குப் போயி கடுதாசி போடச் சொல்றியே!

அவரது பேச்சில்தர்க்க ஞானம் தென்பட்டது. அவரது கேள்வி நியாயம் என்பதை உணர்ந்தாள் உலகம்மா. அதனால் பேச்சை நிறுத்திக் கொண்டாள். அது மட்டுமல்ல உரத்த குரலில் பேசும் கணவர், கோபம் தணிந்த பிறகு, அதே விஷயத்தை கொஞ்சம் அமைதியாகச் சொன்னால் ஒப்புக் கொண்டு விடுவார் என்பதும், சம்மதித்து விடுவார் என்பதும் உலகம்மாவுக்கு அத்துபடியான விஷயம். அதனால் அவர் பொரிந்து தள்ளியபோது அவள் தன் வாயைப் பொத்திக் கொண்டாள்.



முத்தையா வெற்றிலையை நன்றாக ரசித்து மென்று, எச்சலை இரண்டு மூன்று முறை துப்பியதால் அவரது கோபம் கொஞ்சம் தணிந்திருந்தது. அதுதான் தக்க சமயம் என்பதை உணர்ந்து உலகம்மா பேசத் தலைப்பட்டாள்.

''மச்சான்! கோவிச்சுக்காதிங்க ஒங்களெ அவமானப் படுத்தணும்னோ, உங்ககிட்டே பராமுகமா நடந்துக்கணும்னோ எங்க அண்ணன் நெனக்கமாட்டாரு. தவிரவும் நம்ம பூமயிலு பெரிய மனுஷியான போது நம்ம கிராமம் ரொம்ப மோசமான நெலமையிலதானே இருந்துச்சு. மூணு வருஷமாத்தானே நம்ம கிராமமும் பட்டணம் மாதிரி எல்லா வசதியும் தேடிக்கிட்டிருக்குது! அதுனால இதை எல்லாம் எங்க அண்ணனுக்கு எழுதற கடுதாசியிலே விளக்கமா சொன்னீங்கன்னா எங்க அண்ணன் கட்டாயம் வருவாரு''-இதமாகவும் பதமாகவும் தெரிவித்தாள் உலகம்மா.

''சரி சரி, கடுதாசி எதுக்கு புள்ளே! கல்யாணப் பத்திரிகை அச்சடிச்சு வரட்டும்! அதை எடுத்துக்கிட்டுப் போயி பாக்கு வெத்தலை வச்சு ஒங்க அண்ணனெ நேரில் போய் கூப்பிடுறேன், போதுமா?''-முத்தையா பரிவுடன் கேட்டார்.

தனது கோரிக்கைக்குக் கணவர் மதிப்புத் தந்து ஒப்புக் கொண்டு விட்டதை எண்ணிய போது உலகம்மாவுக்குப் பெருமகிழ்ச்சி ஏற்பட்டது. அவளுக்கு நிலை கொள்ள வில்லை. உடனே ஆலமரத்து விநாயகர் கோவிலை நோக்கி ஓடினாள்.

வெற்றிலை, பாக்கு, பழங்கள் சூழ, மருமகள் பூமயிலின் கல்யாணப் பத்திரிகையை , மைத்துனர் முத்தையா கொண்டுவந்து நீட்டியபோது, அயர்ந்துவிட்டார் எஸ்.கே. தேவர் என்று அழைக்கப்பட்ட எஸ். கருப்பையாத் தேவர்.

நகர நாகரிகத்திற்கு அடிமைப்பட்ட அவர், தன் தந்தை சூட்டிய கருப்பையா என்ற பெயர் பிடிக்காததால் அதனைச் சுருக்கிப், பெயரே தெரியாமல், ஜாதிப் பெயரை மட்டும் மறக்காமல் எஸ்.கே. தேவர் என்று வைத்துக் கொண்டார்.

திருமணப் பத்திரிகையைத் திருப்பித் திருப்பித் பார்த்துக் கொண்டிருந்தார் அவர். ஏன் அப்படிப் பார்க்கிறார் என்று தெரியாமல் தவித்தார் முத்தையா.

''என்ன மச்சான்! மொறச்சு மொறச்சுப் பார்க்குறீங்க! பத்திரிகையிலே குத்தம் கொறை ஏதாவது வந்திருச்சா! சின்னப் பய சிங்காரம் தான் அச்சாபீசுக்குப் போயி வந்தான்! அவன் தப்புத் தண்டா பண்ணிப்புட்டானோ?''

''அதெல்லாம் இல்லே! பத்திரிகை ரொம்ப பேஷனா இருக்குதே, மெட்ராசிலயே அச்சடிச்சிங்களோ!'' வியப்பு எஸ்.கே. யின் பேச்சில் தொனித்தது.

''இல்லே மச்சான்! நம்ம பச்சைமலை கிராமத்துலேயே அச்சடிச்சுது!''

“என்ன, ஒங்க கிராமத்திலயா''

''ஆமா மச்சான்! இப்ப நம்ம கிராமத்திலெ ஒரு அச்சாபீஸ் வந்திருக்குது. நமம மேலத் தெரு மேகலிங்கம் இருக்கிறாருல்லே அவரு மகன் மாரியப்பன், பட்டணத்துலெ படிச்சிட்டு, நம்ம

# முன்னாள் இராணுவத்தினர் குழந்தைகளுக்குப் புத்தகப் படி உயர்வு !

முன்னாள் இராணுவத்தினரின் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கான புத்தகப் படியைத் தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளது. முன்னாள் இராணுவத்தினரின் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயின்று கொண்டிருக்கும் குழந்தைகளுக்கான புத்தகப்படி ஆண்டுக்கு ரூபாய் 10-லிருந்து ரூபாய் 20 வரையிலும் ஆறாம் வகுப்பிலிருந்து ஏழாம் வகுப்புவரை பயிலும் குழந்தைகளுக்கு ரூபாய் 15-லிருந்து ரூபாய் 30 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. எட்டாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரையிலும் பயில்வோருக்குத் தற்போது அளிக்கப்பட்டு வந்த ரூபாய் 25, ரூபாய் 40 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இப்புத்தகப் படி ஒரு கல்வி ஆண்டுக்கு வழங்கப்படும்.

கிராமத்துக்குத் திரும்பி வந்து சின்னதா ஒரு அச்சாபீஸ் வச்சிருக்கிறான். நம்ம ஊரே ,என்ன விசேஷம்னாலும் அங்கதான் அச்சடிச்சு வாங்குது. இந்தப் பத்திரிகையும் அங்கே அச்சடிச்சது தான்!''

''பரவாயில்லேயே! பச்சை மலை கிராமத்துல. இவ்வளவு முன்னேற்றமா ஏற்பட்டிருக்குது?

''மச்சான்! இது தனிப்பட்டவங்களால ஏற்பட்டிருக்கிற முன்னேற்றம்! நம்ம அரசாங்கம் எவ்வளவு முன்னேத்தம் செய்து வருது தெரியுமா?''

''தெரியாதே!''

''ஏன் மச்சான், நெஜமாவே ஒங்களுக்கு இது தெரியாதா? இல்லே என்னெ ஆழம் பார்க்குறீங்களா?''

''மச்சான்! கிராமம்னாலே எனக்கு எப்பவும் வெறுப்புத் தான்! கிராமத்தைப் பத்தி எந்தச் சேதியையும் நான் காதுல போட்டுக்கிடுறதில்லேங்றே சேதி தான் ஒங்களுக்கு நல்லாத் தெரியுமே! அப்பொறமும் ஏன் என்னெப் பத்தித் தப்பா நெனைக்கிறீங்க?''

''சரி, சரி! இப்ப நல்லாக் கேட்டுக்குங்க! நம்ம தமிழ்நாட்டு அரசாங்கம் கிராமத்துக்குத் தன்னிறைவுத் திட்டம்னு ஒரு நல்ல திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்குது! இதுவரை அறுபத்தி மூணு பிளாக்குகள்லே இந்தத் திட்டம் அமுலாகியிருக்குது. இன்னும் நூறு பிளாக்கிலே இது தொடரப் போகுது! மீதியிருக்கிற இருநூத்தி ஏழு பிளாக்குகள்லே, இன்னும் ரெண்டு மூணு வருஷத்துக்குள்ளாறே இந்தத் திட்டத்தைவிரிவாக்கப் போறாங்களாம்!

''ஆமா, தன்னிறைவுத் திட்டமா? அப்படீன்னா என்ன மச்சான்?''

''சரிதான்! அதுவும் ஒங்களுக்குத் தெரியாதா? வெளக்கமாச் சொல்றேன்; கேட்டுக்குங்க! கிராம மக்களோட முன்னேத்தத்துக்காக சரியானபடி குடிநீர் விநியோகம் செய்றது, கிராமப் புறச் சாலைகளை அபிவிருத்தி செய்றது, பள்ளிக்கூடக் கட்டிடத்தைக் கட்டுறது, சிறு பாசனத் திட்டத்தை நல்லபடியா நெறைவேத்திறது, தாய்சேய் நல நிலையங்களை உருவாக்குறது-கிராமப் புறத்திலே மருந்தகம் தெறக்கிறது.....''

''அடேயப்பா! அபாரமா இருக்குதே!''

''இன்னும் இருக்குது மச்சான்! அதுக்குள்ளேயே அபாரன்னு சொல்லிட்டீங்களே.... அதையும் கேளுங்க... ரெண்டு அபாரம் சொல்வீங்க....''

''அப்படியா!''

''ஆமா!என்னா சொன்னேன்... மருந்தகம் தெறக்குறது.. அப்புறம் வீட்டுக்கு மின்சார வசதி, கிராம மக்களுக்கு உபயோகமான முறையில வேலை வாய்ப்புத் தர்றது... இப்படியே நீளுது மச்சான் பட்டியலு...''

''என்ன மருந்தகம் கூட ஒங்க கிராமத்துக்கு வந்திருச்சா! அபாரம்! அபாரம்! மச்சான் காய்ச்சல், மண்டையிடியின்னாக் கூட, பத்து மைல் தூரத்துக்குப் போகணும்ங்கிறதை நெனைச்சுத் தானே நான் கிராமத்துக்கு வர்றதுக்கு பயப்பட்டேன். சாயந்திரம் ஆனதும் கண் இருந்தும் இல்லாதது மாதிரியே தெரியுமே மின்சாரம் இல்லாததுனாலே! சிம்னி விளக்கைக் கண்டாலே எனக்குக் கோபம் கோபமா வரும். இப்பஒங்க கிராமத்துக்கு மின்சார வசதி கெடைச்சிருக்குதுங்கிற சேதியை கேக்குறபோது எனக்கு ஆச்சரியமா இருக்குதே!

''ஆமா மச்சான்! இதெல்லாம் இந்த ரெண்டு மூணு வருஷத்தில எங்க கிராமத்துக்குக் கெடைச்சிருக்கிற பலன்!''

''மச்சான்! பூமயிலு கல்யாணம் எந்தத் தேதி?''

''அய்ப்பசி இருபத்தி மூணாந் தேதி!''

''இன்னிக்கு ஐப்பசி ஏழு தானே ஆகுது! இன்னும் பதினஞ்சு நாளுக்கு மேல இருக்குதே! அதுவரை எப்படி என்னால பொறுத்துக் கிட்டிருக்க முடியும்? தன்னிறைவு பெற்றுள்ள ஒங்க கிராமத்தை இப்பவே பார்க்கணும்போல இருக்குது! அதுனால இன்னைக்கே புறப்புடுவோம் மச்சான்'' என்று சொல்லியவாறு தமது மனைவியை நோக்கி ''முத்தம்மா! டிரஸ் எல்லாம் ரெண்டு பெட்டியிலே எடுத்து வச்சுக்கோ மச்சான் சொல்றதைப் பார்த்தா கிராமம் எல்லாம் இப்ப சொர்க்க லோகமா ஜொலிக்கும் போலத் தெரியுது! அதுனாலெ இந்த வருஷம் கொடைக்கானல் கேம்புக்குப் பதிலா பச்சைமலை கிராமத்தில ஒரு மாத கேம்ப் போடப் போறோம்!''-என்றார்.

முத்தம்மாளால் நம்பவே முடியவில்லை. கிராமம் என்றால் நாட்டுப் புறம் என்று சதா கேலி பேசும் தன் கணவர் தானா இப்படி மாறிவிட்டார் என்று அவள் அதிசயப்பட்டாள்.

மகள் பூமயிலின் கல்யாணத்தை முன்னிட்டு, தன் அண்ணன் இருபது வருஷம் கழித்தாவது தன் சொந்த கிராமத்திற்கு வந்திருக்கிறாரே என்பதில் உலகம்மாவுக்குப் பெரு மகிழ்ச்சி. கல்யாணத்துக்கு, பதினஞ்சு நாளுக்கு முன்னாலேயே வந்துவிட்டார் என்பதில் அவளுக்கு ரெட்டை மகிழ்ச்சி. அவளது உள்ளமெல்லாம் பூரித்தது; முகமெல்லாம் மலர்ந்தது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.